

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 25.07.2010 • ரூ.10.00 • 132 பக்கங்கள்

தள்ளாட்டத்தில் தயாநிதி!

அண்ணாச்சி கடைகளுக்கு ஆபத்து!

விருதுநகர் வொர்ஸ்ட் இராஜபாளையம் பெஸ்ட்!

விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்!



இணைப்பு புத்தகம்:

ல்லிபுத்தூர் வைபவம்!

அரசியல் சதுரங்கத்தில் அசின்!



சிறுநீர் கசிவா ?

அடி இறக்கமா ?

இலவச தொலைபேசி ஆலோசனை : 0422 2323456

GAURI - UROGYNECOLOGIST

பெண்களுக்கு ஏற்படும் சிறுநீர் கசிவு, அடிஇறக்கம் பிரச்சனைகளுக்கு தீர்வு !

இருமினாலோ, தும்மினாலோ சிறுநீர் கசிகிறதா ?

“சிலிங் சிகிச்சை”

அமெரிக்கா/இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் ! சிறந்த மருத்துவ முறைகள் !

GAURI UROLOGY

(Chennai only)

ஆண்களுக்கு ஏற்படும் பிராஸ்டேட் பிரச்சனைகள்

சிறுநீர்ப்பை, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்கள்

ஆவசரமாக அடக்கமுடியாமல் சிறுநீர் கழிக்கும் பிரச்சனைகள்

புற்றுநோய்

GAURI THE CONTINENCE CENTER

www.urogynecology.in

GAURI

Chennai
No1. Crescent Park St
T.Nagar
Chennai -17
Ph:044-24341055
044-24322591

Coimbatore
Bala Medical Center
Ramanathapuram
Coimbatore - 45
Ph:0422-2323456
0422-2323333

Bangalore
(விரைவில்)
Motherhood
Hospital
IndraNagar



கல்கி
(01.08.2010)
அடுத்த வாரம்...
பரிகார ஸ்பெஷல்
ஆண்டு மலர்
அதிரடி... அட்டகாசம்... ஆரம்பம்
கவலை...
சந்தேகம்...
எதிர்பார்ப்பு...
அச்சம்...
ஆசை...
ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்
- சொல்கிறார்
பளிச் பரிகாரம்!
முதலீடு...
காப்பீடு...
ஷேர் மார்க்கெட்...
தங்கம்...
மியுச்சுவல் ஃபண்ட்...
-உங்கள் கேள்விகளுக்கு...
டி. பாலசுந்தரம் சொல்லும்
மூலதன மந்திரம்!
அழகு...
உடல்நலம்
குழந்தை வளர்ப்பு...
டீன்-ஏஜ்...
உணவு...
உளவியல்...
-தொடர்பான...
கல்கி க்ளினிக்!
உங்கள் சந்தேகங்களை எங்கள் முகவரிக்கு உடனே எழுதி அனுப்புங்க. எல்லாத்துக்கும் தீர்வு உண்டு!
10,000 பரிசுபெறும் கதை | இந்தியா பாஸிடிவ் | வாசகர்கள் பங்கேற்கும் உல்லாசப் பகுதிகள் |

◆ படத்தின் டைட்டில் கார்ட், பழைய மதராஸபட்டினத்தின் வரைபடத்தின் சில ஊர்களில் எழுதப்பட்டு, நேர்த்தியான பின்னணி இசையோடு ஊர்கிற கணத்திலேயே முடிவாகிவிடுகிறது இது மிக நல்ல படம். கோடம்பாக்க செண்டிமெண்ட் பார்க்காமல் படம் இரங்கல் கூட்டத்தோடு ஆரம்பித்து பின்னர் கதாநாயகியின் கண்ணோட்டத்தில் தொடர்வது தைரியம்தான். ◆ எமி, தற்கால சென்னையின் மாற்றங்களை நோட்டமிட்டபடி ஆர்யாவைத் தேடத் தொடங்கும் பயணத்தில், அவரின் பழைய நினைவுகளையும் தற்கால தேடல்களையும் கோத்துக் கொடுத்துத் தொய்வற்ற திரைக்கதை அமைத்த இயக்குனருக்குச் சபாஷ். ◆ தேடலில் எமியின் தவிப்பு நமக்கும் தொற்றிக் கொள்கிறது. ◆ காட்சிகளில் நிறைய கவித்துவங்கள். விமான சத்தம் கேட்டு விட்டு குண்டு போடறாங்க ஓடி ஒளிஞ்சிக்கங்கன்னு ஒருவன் சொல்ல, அனைவரும் ஓடி ஒளிவது உதாரணம். ◆ படத்தில் நகைச்சுவை திணிக்காமல் போகிறபோக்கில் சொல்லியிருப்பதால் படத்தோடு மேலும் ஒன்றவைக்கிறது. ◆ கொஞ்சம் இந்திப்பட சாயல்களில் இருந்தாலும் பின்னணி இசை, பாடல்கள் காதில் இனிக்கின்றன. டிராம் வண்டி, கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய், வால்டாக்ஸ் ரோடு மணிக்கூண்டு, கைவண்டிகள், கட்டடங்கள்... என்று அந்தக் கால மதராஸபட்டினத்தைக் காட்ட கடுமையாக உழைத்திருக்கிறார் கலை இயக்குனர். மண் நிறப் பின்னணி கொண்ட மங்கலான ஒளிப்பதிவு கவனம் ஈர்க்கும் கைவண்ணம். ◆ படத்தின் நெருடலான சில விஷயங்கள்... 1945 முதல் 1947 வரை அந்தக் காலகட்டத்தின் சுதந்திரப் போராட்டம்





பற்றித் தொடும் தொடாத வண்ணம் காட்டியிருப்பது சுதந்திரத்திற்காக இவ்வளவுதான் போராடினார்களா என்று நினைக்க ஏதுவாக இருக்கின்றது. ◆ பத்து இருபது பேர் சென்று ஒரு பிரஸ் மீட்டில் 'எப்போது சுதந்திரம் இப்போதே சொல்லுங்கள்' என்று கேட்டதும் கவர்னர் ஜெனரல் சொல்வது போலக் காட்டியிருப்பது. ◆ இன்டர்வெல் முடிந்து வரும் பாடல் ஒன்று மட்டும் கொஞ்சம் இடைச் செருகல். ◆ படத்தின் ஆரம்ப இடைப்பட்ட சில காட்சிகள் ஆங்கிலப் படங்களை நினைவுக்குக் கொண்டு வந்தாலும், சிங்கார சென்னை, உண்மையாகவே சிங்காரமாக இருந்த தினங்களில் வாழ்ந்துவிட்ட உணர்வை ஏற்படுத்திய இயக்குநர் விஜய் ஜெயித்திருக்கிறார்!

– லாவண்யா



கல்கி

25.07.2010

விருதுநகர் மாவட்டச் செய்திகள்:
கதிர்பாரதி, ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagal.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



என்று ஒரு சர்ச்சை கிளம்பியது. கடைசி யில் தாம் அங்கே போகவே இல்லை என்று தலையில் அடித்து சத்தியம் செய்யாத குறையாகச் சொல்லி ஜெனிலியா தப்பித்தார்.

இப்போது நடிகை அசின், ஒருபடி மேலே போய் சர்ச்சையின் சுழலில் மாட்டிக்கொண்டு இருக்கிறார்.

''இலங்கையில் போரால் பாதிக்கப் பட்டத் தமிழர்களுக்கு என்னால் என்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அவற் றைச் செய்யவே விரும்பினேன். அதனால்தான், யாழ்ப்பாண மருத்துவ முகாமுக்குச் சென்றேன்'' என்று அசின் சொல்லியிருக்கிறார்.

அரசியல் சதுரங்கத்தில்

இலங்கையில் உள்ள தமிழர் பகுதி யான யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக் கும் மருத்துவ உதவிகளைப் பார்க்கப் போனார் நடிகை அசின். தெரிந்தோ தெரியாமலோ, அரசியல் சதுரங்கத்தில் வெட்டுபடும் வீரனாக மாட்டிக்கொண்டு விட்டார்.

சல்மான் கானின் ஹ்யூமன் பவுண் டேஷன் உதவியுடன் அங்கே காட்ராக்ட் ஆப்ரேஷன் செய்துவைக்கப்பட்டது. சல்மான்கானோடு 'ரெடி' என்ற இந்தி படத்தில் நடிக்க அசின் இலங்கை போய் இறங்கியவுடனேயே தாய்த் தமிழ்நாட்டில் புருவங்கள் உயரத் தொடங்கிவிட்டன. ஏற்கெனவே இலங்கையில் நடைபெற்ற திரைப்பட விழாவுக்கு கமல் உள்பட யாருமே போகக்கூடாது என்று எழுதப் படாத சட்டம் இங்கே உண்டு. அப்போது, நடிகை ஜெனிலியா இலங்கை போனார்

அவர் மருத்துவ முகாமுக்குப் போனதோ, அங்கே கண்புரை அறுவை சிகிச்சைக்குக் காத்திருப்பவர்களுக்கு உதவுவதாக வாக்களித்ததோ இப்போது பிரச்னையாகவில்லை. பல முன்னணி ஹீரோக்கள் செய்யத் துணியாத ஒரு சாகசம்தான் இது!

ஆனால், இதையொட்டி எழும் பல விடைதெரியாத கேள்விகள் பூதாகாரமாக எழுந்து நிற்கின்றன:

* அசின் - ஷிரந்தி ராஜபக்ஷே



அசின்!?



ஏன் நடிகை அசினோடு, அதிபர் ராஜபக்ஷேவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷேவும் மருத்துவ முகாமுக்குப் போனார்? ஷிரந்தி தனியாகப் போயிருக்க முடியாதா? ஷிரந்தி தன்னோடு வருகிறார் என்பது அசினுக்குத் தெரியாதா? ஷிரந்தி ராஜபக்ஷே யாரென்றே அசினுக்குத் தெரியாதோ? அசினுக்கு மட்டும் ஏனிந்த சலுகை? பத்திரிகையாளர்களோ, தமிழக எம்.பி.களோ போரினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்திக்க முயன்றபோது, அனுமதிக்கப்பட்டனரா?

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரோ, ஐ.நா.வின் குழுவோ பாதிக்கப்பட்ட மக்களை இப்படி நேரடியாகப் பார்க்க முடியுமா?

பாதிக்கப்பட்டு, துயருற்று இருப்பவர்களின் பரிதாப நிலைக்குக் காரணகர்த்தாக்களோடுதான் தாம் பயணம் செய்கிறோம் என்று அசினுக்குத் தெரியுமா?



'ரெடி' பட ஹீரோ சல்மான்கான் இந்தியா திரும்பிய பின்னர் அசின் மட்டும் தங்கியிருந்து, மருத்துவ முகாமுக்குப் போயிருக்கிறார். அப்படியானால், அவர் பயணம் முன்னரே முடிவானதா?

அசின் யாழ்ப்பாணம் போனது இந்தியத் தூதரகத்துக்கோ, இந்திய அரசுக்கோ தெரியுமா?

தமிழ்நாட்டில் சர்ச்சை கிளம்பும் என்று தெரிந்தேதான் அசின் யாழ்ப்பாண மருத்துவ முகாமுக்குப் போனாரா?

தமிழ்ப் படங்களில் இனி நடிக்கும் எண்ணமே இல்லையோ?

தான் ஆறுதல் அளிக்க வரவில்லை, யாருடைய சதுரங்கத்திலோ பகடைக்காயாக பந்தாடப்பட வந்திருக்கிறோம் என்று அசினுக்குப் புரிந்திருக்குமா?

- ஞானம்

சொல்கிறார்கள்!



தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் சங்கத்தின் வேண்டுகோளையும் மீறி படப்பிடிப்புக்காகவும் இலங்கை சென்று வந்த நடிகை அசின் மீது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- ராதா ரவி

இலங்கைக்கு கிரிக்கெட் ஆடச் செல்கிறார்கள். தொழிலதிபர்கள் வர்த்தகத்துக்காகச் செல்கிறார்கள். சுற்றுலா பயணிகள் செல்கிறார்கள். வேலைக்காகச் செல்கிறார்கள். இப்படியிருக்க ஒரு நடிகை மட்டும் இலங்கை செல்லக் கூடாது என்று சொல்வது அபத்தம்!



- சரத்குமார்

● த.புகழேந்தி, கூகூர்

? "தேர்தலில் பண ஆதிக்கம் தலை தூக்க விடமாட்டோம்" என்று நவீன் சாவ்லா கூறியிருப்பது பற்றி...?

! பண ஆதிக்கம் தலைதூக்க முடியாது எனில், அதுவே டோக்கன், பாஸ் போன்ற புதிய வடிவங்களில் வாலாட்டும். இது சாவ்லாவுக்கு நன்றாகவே தெரியும். ஒன்றும் சாதிக்க முடியாத சாவ்லாவின் வெற்று வேட்டு சபதம் இது.

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? பாடநூல் வினியோகத்தில் குளறுபடியால் புத்தகம் கிடைக்காமல் மாணவர்கள் திண்டாடுவது பற்றி...?

! சமச்சீர் கல்வி புதுசு; சமச்சீர் நிர்வாகக் கோளாறு ரொம்ப பழசு! அதனால் மாணவர் திண்டாட்டம் ரொம்பப் பழகிப் போன ஒன்று.

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? "காங்கிரஸ் கட்சி ஒரு தனியார் நிறுவனத்தைப் போன்றது" என பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரி கூறியிருப்பது பற்றி...?

! இந்தியாவில் எல்லா அரசியல் கட்சிகளுமே அப்படித்தான். காங்கிரஸ் ஒற்றை முதலாளி நிறுவனம் என்றால், பா.ஜ.க. பிரைவேட் லிமிடெட் கம்பெனி, மற்றொன்று பார்ட்னர்ஷிப் என்றிவ்வாறு...

● என்.இசைவாணி, ஆம்பூர் ☐

? ஜோசியம் சொல்லும் ஜெர்மானிய ஆக்டோபகம் சிங்கப்பூர் கிளியும் ஏராளமான ரசிகர்களைப் பெற்றிருப்பதைப்

தராசு நீங்கள் கேட்டவை

இலங்கை அரசை வற்புறுத்த முடியுமா?



✱ ரோஷ கோஷம்!

பற்றி...?

! கோவில் திருவிழாவில் பஞ்சு மிட்டாய், பலூன், குடைராட்டினத்துக்கு மயங்கி, சுவாமி தரிசனத்தை மறப்பதுபோல் நடந்து கொள்பவர்கள் அவர்களில் பலர். வேறு பலர், பெட்டிங்கில் ஜெயிக்க வேண்டும் என்ற கவலையில் ஜோசியத்தை ஏற்பவர்கள்.



✱ பா.ஜ.க.பிரைவேட் லிமிடெட்!

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? ஈரானில் கள்ளக்காதல் குற்றத்துக்காக ஒரு பெண்ணை கல்லால் அடித்துக் கொல்ல உத்தரவிடப் பட்டுள்ளதே? 2010 ஆண்டில் கூடவா இத்தனை காட்டுமிராண்டித்தனம்?

! காதல் மணம் புரிவோரை, 'தன்மானம்' கருதி கொலை புரியும் ஏராளமான காட்டுமிராண்டி குடும்பங்கள் நம் நாட்டிலும்கூட இருக்கத்தான் செய்கின்றன. கல்லால் அடித்துக் கொல்வதில்லை என்பதில் மட்டும்தான் 'பெருமை!'




✱ குறுக்கு வழித் திட்டம்!

● கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

? 'தேசிய நதிநீர் இணைப்புக்கு, தொலைநோக்கு இல்லாத சமூகம் தடையாயிருக்கிறது' என்கிறாரே அப்துல் கலாம்?

! குடியரசின் முன்னாள் தலைவர் இப்படித்தான் பேச முடியும். சமூகம் என்ற சொல்லுக்குப் பதில் ''அரசியல் தலைவர்கள்'' என்று நாம் திருத்திப் படித்துக் கொள்வோம் என்பது அவருக்குத் தெரியாதா என்ன...!




✱ வெற்றுவேட்டு சபதம்

● ச.மீனாட்சி சுந்தரம் சென்னை - 75

? ''உண்மை நிலவரம் தெரியாமல், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஆலோசனை கூறும் அமைப்புதான் திட்டக் கமிஷன்'' என்று மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் கமல்நாத் பேசியுள்ளாரே...?

! திட்டக் கமிஷன், வளர்ச்சிக்கான ராஜபாட்டையைப் போட்டுக் காட்டுகிறது. அரசோ, உற்பத்திக்கு உதவாத, திட்டத்துக்குட்படாத செலவுகளை அதிகரிப்பதில் தான் ஆர்வம் காட்டுகிறது. அழிவுக்கான குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்துள்ளவர்களுக்கு, வளர்ச்சிக்கான ராஜபாட்டையைக் குறைசொல்லத்தான் தோன்றும்!




✱ சொல்லாத சமாசாரம்!

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? கிரிக்கெட்டில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியுள்ள தமது சாதனையை ஹர்பஜன் மட்டுமே சமன்செய்ய முடியும் என்பதாக முத்தையா முரளிதரன் சொல்லி

விருக்கிறாரே...?

! முரளியின் தன்னடக்கமும் ஒரு சக பந்து வீச்சாள ருக்கு அவர் அளிக்கும் மதிப்பும் பளிச்சிடுகின்றன. இதனால் ஹர்பஜன் ஓவராக தம்மைப் பற்றி எண்ணா மல், முழு முனைப்புடன் பந்து வீசுவதில் கவனம் செலுத்தட்டும்!



இருட்டில் பாட்டு!

● ரேவதிப்ரியன், ஈரோடு

? தமிழகத்தில் இந்த வருடம் நாற்பத்திரண்டு பொறியியல் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக் கப்பட்டுள்ளதே...?

! அவற்றுள் 'கல்வி வியாபாரத்துக்கான புதிய ஷோரூம்கள்' என்ற அவச் சொல்லுக்கு ஆளாகாமல் தப்புவது எத்தனையோ!



வியப்பூட்டும்...

● மங்கையர்க்கரசி, சென்னை - 78★

? அப்பாவி தமிழக மீனவர்களைச் சுடும் இலங்கை கடற்படை அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்க நமது மத்திய அரசு ஏன் இலங்கை அரசை வற்புறுத்துவ தில்லை...?

! பாரம்பரியமாகத் தாங்கள் மீன் பிடித்து வரும் பகுதிக்குள் நமது மீனவர்கள் பிடிவாதமாக நுழைய, அது இலங்கையின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதியாகக் கருதப்படுவதால் இலங்கைக் கடற்படை சுடுகிறது. கச்சத் தீவு கைமாறியதால் உருவான பிரச்னைகளில் ஒன்று இது. எவ்வாறாயினும், மத்திய அரசு மனம் வைத்தால் சுமுகத் தீர்வுக்கு வழி இருக்கிறது.



...மதிப்பு!

● ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்

? "நாங்கள் பந்திக்கு அலைகிறவர்கள் அல்ல. பந்தி பரிமாறும் இடத்தில் தாங்கள் இருந்துகொண்டு, மற்ற வர்களுக்குப் பரிமாறுவோம்" என்கிறாரே ராமதாஸ்?

! தனியே இருட்டில் செல்பவர்கள் ஏதோ பாடத் தான் செய்வார்கள். அதில் ராகமில்லை, அர்த்தமில்லை என்று குற்றம் கண்டுபிடிக்கக்கூடாது.

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்

? "தெலுங்கானாவை எதிர்ப்பவர்களை வெட்டிக் கொல்வேன்!" என பேசிய விஜயசாந்தி, அதற்கு விளக்கம் அளிக்கும்போது, 'அது எங்கள் கட்சியின் கோஷம்' என்று கூறியுள்ளாரே...? கோஷமே இப்படி என்றால், கட்சியின் லட்சணம்...?

! கட்சியில் கோஷமும் ரோஷமும் இருக்கும்; மக்களுக்கு ஐயமோ சாந்தியோ இராது. அத்தகைய தெலுங்கானாவைப் பெற்று என்ன பயன்?

□ ரூ.150/- பரிசு பெறுபவர் : என்.இசைவாணி, ஆம்பூர்

★ ரூ.75/- பரிசு பெறுபவர் : மங்கையர்க்கரசி, சென்னை - 78

பொற்றாமரை

கலை-இலக்கிய அரங்கம்

ஆறாம் ஆண்டு தொடக்கவிழா



நாள்: 24-7-2010 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு

இடம்: பாரதீய வித்யா பவன்.

மயிலாப்பூர், சென்னை.


இல. கணேசன்

தலைமையில்



ஆசியுரை : தவத்திரு **ஓங்காரனந்த சுவாமிகள்**

(வேதபுரி, தேனி)



சிறப்புரை : கவிப்பேரரசு **வைரமுத்து**

நடனம் குமாரி சாஸ்வதி ஐஸ்வர்யா

தேசிய சிந்தனையுள்ள இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் வருக!

அண்ணாச் கடைகளுக்

இந்திய அரசு அண்ணாச்சி கடைகளுக்கு ஆப்பு வைக்க ஆயத்தமாகிவிட்டது!

இத்தனை ஆண்டுகளாக, சில்லறை வணிகத்தில் பன்னாட்டு பல்பொருள் நிறுவனங்கள் முதலீடு செய்வதைத் தடை செய்து வந்த அரசு, சென்ற வாரம் ஒரு டிஸ்கஷன் பேப்பரை வெளியிட்டிருக்கிறது. சில்லறை வணிகத்தில் பன்னாட்டு பல்பொருள் நிறுவனங்களை எப்படியெல்லாம் அனுமதிக்கலாம், அப்படி அனுமதிக்க வேண்டிய தேவை என்ன, அதனால் இந்திய வணிகத்துறைக்குக் கிடைக்கக்கூடிய லாபங்கள் என்னென்ன என்றெல்லாம் தெரிவிக்கிறது அந்தப் பேப்பர். கூடவே, அனைவரின் கருத்தையும் கேட்கிறது.

இது வெறும் பேப்பர் அல்ல, அண்ணாச்சி கடைகளுக்கு வைக்கும் டைம்பாம்! வழக்கம்போல், உடனடியாக பா.ஜ.க. எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளும் எதிர்க்கின்றன.

அமெரிக்காவின் வால்மார்ட், இங்கிலாந்தின் டெஸ்கோ, பிரான்சின் கேர்ஃபோர் போன்ற பன்னாட்டு பல்பொருள் நிறுவனங்களுக்கு இந்தியாவின் மேல் அப்படி ஒரு அக்கறையா? பெரிதாக ஒன்றுமில்லை. ஏற்கெனவே அவர்களுடைய நாடுகளில் வியாபாரம் தேக்க நிலைக்கு வந்துவிட்டது. புதிய வாய்ப்புகளாக அவர்களுக்குத் தெரிவது இந்தியா, சீனா போன்ற மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகள்தான்.

சில்லறை வணிகத்தில் உலகில்



மத்தியில் காங்கிரஸ் பா.ஜ.க. என்று யார் ஆட்சியில் இருந்தாலும் நமக்குப் பாதகமான அந்நிய முதலீட்டுக்கு பச்சைக் கொடிதான். ஏற்கெனவே இந்திய பெருநிறுவனங்கள் சில்லறை வணிகத்தில் குதித்ததால் வருடம் ஒன்றுக்கு நான்கு முதல் ஆறு சதவிகிதம் சில்லறை வணிக சிறு வணிகர்கள் தொழிலிலிருந்து விரட்டப்படுகிறார்கள். இப்போது வெளிநாட்டு மெகா நிறுவனங்கள் வந்தால் அவ்வளவுதான்! கோடிக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் சிறு வணிக வியாபாரத்தை காப்பாற்றுவது அரசின் பொறுப்பு.

நமது நாட்டின் சிறு வணிகம், ஏதோ தாக்குப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நுகர்வோர்களுடன் சிறு வணிகர்கள் பல்லாண்டுகளாக வைத்துள்ள நட்பும், நுகர்வோர்கள் அவர்கள் மீது வைத்திருக்கும் பாசத்துடன் கூடிய நம்பிக்கையும்தான். மிகப் பெரிய



சில்லறை வணிக நிறுவனங்களை ஒப்பிட்டால், உள்ளூரில் கடை வைத்திருக்கும் சிறுவணிகர் குறைவான விலையில் விற்பது தெரிய வரும். வெளிநாட்டு நேரடி முதலீடு இங்கு வந்து விட்டால் நுகர்வோர்கள் சுரண்டப்படுவார்கள். அதை அனுமதிப்பதற்குப் பதிலாக, விளைபொருட்களை பாதுகாக்க பேட்டைக்குப் பேட்டை குளிர்சாதன வசதிகள், கிட்டங்கிகள் போன்றவற்றை அரசு ஏற்படுத்தட்டும். விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் வங்கிக் கடனை தாராளமாக அனுமதிக்கட்டும். இதன் மூலம் அரசு எல்லோர் நலனையும் பாதுகாக்க முடியும்.''

- த.வெள்ளையன்,
வணிகர் சங்கத் தலைவர்



ஆபத்து!

ஐந்தாவது இடத்தில் இருப்பது இந்தியா. இந்தியாவில் சில்லறை வணிகம் ஒழுங்கமைக்கப்படாத துறை. மொத்த சில்லறை வணிகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட வணிகம் என்பது ஐந்து சதவிகிதத்துக்கும் குறைவே. அப்படியென்றால், இன்னும் இருக்கும் வாய்ப்புகளை எண்ணிப் பாருங்கள்... வாய்ப்புகளுக்குப் பஞ்சமே இல்லை, வளர்ச்சிக்கு எல்லையே இல்லை.

வால்மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவுக்குள் அனுமதிக்கப்பட்டால், இங்கே வேலை வாய்ப்பு பெருகும், விவசாயிகளுக்கு லாபம் பெருகும், நுகர்வோருக்குக் குறைந்தவிலையில் காய்கறிகள், மளிகை சாமான்கள், இன்னபிற வீட்டுத் தேவை பொருள்கள் எல்லாம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அடிப்படைக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்கு (infrastructure development) இந்நிறுவனங்களை வற்புறுத்த முடியும் என்றும் அரசு நம்புகிறது!

இதனால், இந்தியப் பொருளாதாரத்துக்கும் நடுத்தர மக்களுக்கும் லாபமே என்று வாதம் வைக்கப்படுகிறது. லாப நஷ்டங்களைவிட, இங்கே இருக்கும் இணக்கமான வியாபாரச் சூழலையே அந்நிய முதலீடு குலைத்துவிடும் என்பதுதான் முக்கிய பிரச்னை.

சில்லறை வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் 98 சதவிகிதம் வரை தனிநபர்கள், தம் சொந்த முதலீட்டில் சின்னச் சின்னதாக கடைகளை வைத்துக்கொண்டு தம் அன்றாட வாழ்வை நடத்துபவர்கள். கிட்டத்தட்ட 1.3 கோடி சிறுவணிகர்கள் இந்தியாவெங்கும் இருக்கிறார்கள். இவர்களின் வருங்காலம் இப்போது கேள்விக்குறியாகி இருக்கிறது.

அத்துடன், சிறுவணிகர்களை நம்பி இந்தியாவெங்கும் இருக்கும் துணைத்

வால்மார்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் வந்தால் இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட்டு விவசாயிகளுக்கு நல்ல விலையும், நுகர்வோர்களுக்கு நியாய விலையும் கிடைக்கும் என்பது ஒரு மாயை. முதலில் இந்த நிறுவனங்கள் விளை பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, மற்ற சிறு வணிகர்களுக்குப் பொருட்கள் எட்டாத நிலையை உருவாக்கி விடும். சியாட்டில் மாநிலத்தில் 'யோகிமா' என்ற பெயரில் விவசாயிகள் தங்கள் விளைச்சலை நேரடியாக மக்களிடம் விற்று வருகிறார்கள். முன்பெல்லாம் ஒரு பொருள் அதிக உற்பத்தி ஆகும்போது விலை குறையும். ஆனால் நமது நாட்டு பெரிய தனியார் நிறுவனங்கள் சில்லறை வணிகத்தில் ஈடுபட ஆரம்பித்த பிறகு அதிக, விளைச்சல் என்றாலும் விலை குறைவதில்லை. நிலைமை இப்படி இருக்க, பெரிய வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளே வந்தால், நாம் பொருளாதார அடிமைகள் ஆகிவிடுவோம்.''



- சுபாஷ் சந்திரபோஸ்,
தமிழ்நாடு உணவுப் பொருட்கள் வியாபாரிகள் சங்க செயலர்

தொழில்கள் அத்தனையும் சீரழிந்து போகும். உள்ளூர் கமிஷன் ஏஜெண்ட் முதல், கைவண்டிக்காரர்கள், லாரி, வேன் போக்குவரத்து, கூலித் தொழிலாளர்கள் என்று அத்தனை பேர்களின் வயிற்றிலும் அந்நிய முதலீடு அடிக்க இருக்கிறது.

அண்ணாச்சிகள் மட்டுமல்ல, பொது மக்களும் இதனால் பாதிக்கப்படப் போகிறார்கள்:

ஹைப்பர் மால்களை உருவாகும் போது, தேவையே இல்லாமல் நிலத்தின் மதிப்பு கண்ணை மூடிக்கொண்டு உயரும். சாதாரண, நடுத்தர மக்களால், இதுபோன்ற இடங்களில் குடியிருக்க வீடு வாங்கவோ, வாடகைக்கோ கூட அணுக முடியாத சூழல் ஏற்படும்.

ஹைப்பர்மால்கள் தேவையில்லாமல் கூட்ட நெரிசலை உருவாக்கும். நம் கண்ணெதிரே சென்னையில் இருக்கும் நேரடி உதாரணங்கள்: சிட்டி சென்டர், தி.நகர் பலமாடிப் புடைவை கடைகள். சிட்டி சென்டருக்கு வரும் கூட்டத்தால், அந்தப் பகுதியில் வாகனங்கள் பிதுங்குகின்றன.

நகரக் கட்டமைப்பு வசதிகள் பெருகாமல், இதுபோல் மால்கள் மட்டும் துருத்திக்கொண்டு வளர்ந்தால் பாதிப்பு மக்களுக்குத்தான்.

பல்பொருள் சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு எவ்வளவு சதவிகிதம் வரை அனுமதிக்கப்படலாம் என்று இந்திய அரசின் டிஸ்கஷன் பேப்பர் கேட்கிறது. 51 சதவிகிதம் வரை அனுமதிக்கப்படலாம் என்று இத்துறை நிபுணர்கள்

இங்கிலாந்து எம்.பி. எச்சரிக்கை!

''இந்தியா, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லை, டெஸ்கோ போன்ற பன்னாட்டுப் பல்பொருள் நிறுவனங்கள் உள்ளூர் கடைகளைக் காலி செய்துவிடுவார்கள்,'' என்று பேசியது நம்ம ஊ



பி.ஜே.பி.காரர் அல்ல. இங்கிலாந்து எம்.பி. டேவிட் அமெஸ். சிறு வணிகர்களுக்கான பிரிட்டிஷ் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அமெஸ். அவர் மேலும்,

"பிரிட்டன் முழுவது சிறுவணிகர்களே நிறைந்திருந்தனர். ஆனால், டெஸ்கோவின் சூப்பர்மார்க்கெட்டுகளுக்கு முன்னால் அவற்றால் தாக்குபிடிக்க முடியவில்லை" என்றார்.

இவர் தலைமையில் உள்ள குழுவினர் கண்ட ஓர் உண்மை: கடந்த பத்தாண்டுகளில், பிரிட்டனில், ஆறு கடைகளில் ஒரு பரம்பரை சிறு வணிகக் கடை நஷ்டம் அடைந்து, வியாபாரத்தைவிட்டே விலக வேண்டிய சூழல்.

டாடா நிறுவனத்தின் சில்லறை வணிகத் துணை நிறுவனமான "டிரெண்ட்"டுடன் ஒப்பந்தம் போட்டிருக்கிறது டெஸ்கோ. பின்வாசல் எண்ட்ரி?



● டேவிட் அமெஸ்

கருதுகிறார்கள். அத்தோடு, ஊருக்கு வெளியே இது போன்ற ஹைப்பர்மால்களை அமைக்கவேண்டும், விவசாயிகளின் வாரிசுதாரர்களுக்கு பெருமளவு வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. என்ன எதிர்ப்பு தெரிவித்தாலும், இதுபோன்ற பன்னாட்டு அங்காடிகள் இந்தியாவுக்குள் காலடி எடுத்து வைப்பதைத் தடுக்கவே முடியாது என்பவர்களும் இருக்கிறார்கள். சிறு வணிகர்கள், விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்பின் அளவைக் குறைப்பது சாத்தியம் என்றும் சொல்கிறார்கள்! அடி அடிதான். அதில் என்ன பயங்கர அடி, கொஞ்சம் அடி!

– ப்ரியன்



கல்கி



2010 ஜுலை 25
விக்ருதி ஆடி 9
மலர் : 68
இதழ் : 52


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


பெருகிய கூட்டம்; பெருகாத நம்பிக்கை!

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்கு ஜெயலலிதா குரல் கொடுத்திருப்பதில் ஆச்சர்யமில்லை. 'கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன்; ஜனநாயக முறையில் தி.மு.க.வை அகற்றும் பணியை நீங்கள் (தொண்டர்கள்) நிறைவேற்றுங்கள்' என்ற அவரது திட்டமிடலும் சரியே. ஆனால், மைனாரிட்டி தி.மு.க. அரசு மீது அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்துவது மட்டும் போதாது. அத்தனை குற்றச்சாட்டுகளும் வலுவானவையாகவும் நியாயமானவையாகவும் இருக்கலாம்.

எனினும், கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கிறபோது, ஜெயலலிதா ஆட்சியில் லஞ்ச - ஊழலே இல்லை என்றோ, அவருக்கு நெருக்கமானவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி முன்னேறவில்லை என்றோ கூறிவிட முடியாது. தற்போதைய தி.மு.க. ஆட்சி பேரிலான குற்றச்சாட்டுகளுடன் கூட, கடுமையான யதேச்சாதிகாரப் போக்கும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிலவியது. அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைக் கையாண்ட விதம், விமர்சித்து எழுதிய பத்திரிகைகள் பேரில் மானநஷ்ட வழக்கு தொடுத்த வேகம், பத்திரிகையாளர்கள் மீது காழ்ப்புடன் உரிமை மீறல் குற்றம் சாட்டி கைது செய்ய முயன்ற நடவடிக்கை எனப் பல!

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வருவதே நல்லது; தி.மு.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வந்தால், குடும்ப அரசியலின் பிடியில் தமிழகம் மூச்சுத் திணறிப் போகும், என்று கணிக்கக்






கூடிய வாக்காளர்களுக்கு, ஜெயலலிதா எந்த வகையில் நம்பிக்கையூட்டுகிறார்...? கோவையில் மிகப் பெரிய கூட்டத்தைச் சேர்க்க முடிந்திருக்கிறது என்பது அவரது கட்சித் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் வேண்டுமானால் நம்பிக்கை ஊட்டலாம். செம்மொழி மாநாடு முடிந்து மூன்று வாரங்களுக்குள் அதே இடத்தில் அ.தி.மு.க.வின் பலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் பெருமை கொள்ளலாம். ஆனால், மக்கள் மனத்தில் நம்பிக்கை ஊறி வாக்குகளாக உருமாறுவதற்கு இது போதாது.

கீழ்க்கண்ட உறுதிமொழிகளை ஜெயலலிதா அளிக்கவேண்டும்:

தி.மு.க. ஆட்சியில் நடந்தது போன்ற தவறுகள், ஊழல்கள் அ.தி.மு.க. கூட்டணி ஆட்சியில் நிகழ மாட்டா. கூட்டணி கட்சிகளுக்கு உரிய மதிப்பும் ஆட்சியில் இடமும் வழங்கப்படும். பழிவாங்கும் நோக்கில் அல்லாது, லஞ்ச - ஊழலுக்கு எதிரான நடவடிக்கை கடுமை யாக்கப்படும். தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்துக்கு, மின் உற்பத்தி போன்ற அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்தி தொழில் பெருக்கத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்படும்.

மிக முக்கியமாக, கடந்த முறை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது நிலவிய யதேச்சாதிகாரப் போக்குக் கைவிடப்படும். இந்த உத்தரவாதங்களை ஜெயலலிதா அளிப்பாரேயானால், வாக்காளர்களுக்கு நம்பிக்கை பிறக்க வாய்ப்பு இருக்கிறது. கருணாநிதி அரசு அறிவித்து அமுலாக்கியுள்ள இலவசங்களை இனி வரும் அரசுகள் நிறுத்துவது மிகக் கடினம். ஆனால், இலவசங்களுக்கே அவசியமற்ற வகையில் வளர்ச்சியை ஒரு நல்ல அரசால் தர முடியும். குறிப்பாக, சிறந்ததொரு கூட்டணி ஆட்சிக்குரிய உள் கண்காணிப்பு அமையப் பெற்றால், இயல்பாகவே லஞ்ச - ஊழல் குறைந்து, வளர்ச்சி பெருகும். அத்தகைய வளர்ச்சியை கட்சியின் இலக்காகவும் தேர்தல் வாக்குறுதியாகவும் ஆக்கிக்கொள்வதே அ.தி.மு.கவுக்குப் பயனளிக்கும். ●




லவ்வான லவ்லி



• செல்வகுமார்

"**பொ**ருத்தமான பொண்ணு - மாப்பிள்ளை கிடைக்கலைன்னா கல்யாணம் தள்ளிப் போகும். ஆனால், குஜராத்துல ஒருத்தர், நினைச்சது மாதிரி கல்யாண இன்விடேஷன் (டிஸைன்) கிடைக்கலைன்னு கல்யாணத்தையே ரெண்டு மாசத்துக்குத் தள்ளி வெச்சுட்டார்'' என்று ஆச்சர்யப்படுத்துகிறார் லவ்லி கார்ட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் செல்வகுமார். 1961ல் கடற்கரை நாடாரால் ஆரம்பிக்கப்பட்ட லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் (பி)லிட். கம்பெனிதான் லவ்லி கார்ட்ஸுக்கு அடித்தளம்.



''இந்தியாவுல நூறு வெட்டிங் கார்ட்ஸ்ல இருபது கார்ட்ஸ் எங்களோடதுதான் இருக்கும். என்னதான் எஸ்.எம்.எஸ்., ஈ.மெயில்னு நாம வளர்ந்துட்டாலும் கல்யாணம்னு வந்துட்டா பத்திரிகையோட நேர்ல போய்ப் பார்த்து விருந்தினர்களை அழைப்பதற்கு ஈடு வேறெதுவும் கிடையாது'' என்கிற செல்வகுமார், ''லவ்லி கார்ட்ஸ் ஆவரேஜாக இரண்டு ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரைக்கு விற்பனைக்கு வைத்திருக்கிறோம்'' என்கிறார்.

வெட்டிங் கார்ட்ஸ் மட்டுமில்லாமல், குழந்தைகளுக்கான கலரிங் புக்ஸ், பசில் புக்ஸ், காலண்டர், டைரி... போன்றவற்றை பிரிண்ட் செய்து ஏற்றுமதி செய்கின்றனர். லண்டன், ஸ்பெயின் வரைக்கும் போகுது லவ்லி கார்ட்ஸ் நிறுவனத்தின் தயாரிப்புகள்.

''எங்கள் தொழிலுக்கு முன்பிருக்கும் மிகப் பெரிய சவால்கள் ஆட்கள் பற்றாக்குறையும், திறமையான டிஸைனிங் ஆர்ட்டிஸ்ட் கிடைக்காததும்தான்'' என்கிற செல்வக்குமார், ''கல்யாணம் என்றால் தாலி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் லவ்லி கார்ட்ஸ் என்று எண்ணத்தை ஏழை மக்களிடத்திலும் கொண்டு போவதுதான் எதிர்காலத் திட்டம்'' என்கிறார். ●

மை...பைக்!

1986ஆம் ஆண்டு. புது ஸ்கூட்டர் வாங்கியிருந்தேன். பைக்குகளில் அலுவலகத் தோழர்களுடன் திருப்பதி கிளம்பினோம். என் வண்டியில் 'எல்' போர்டுடன் நான். தவிர நான்கு பைக்குகளில் எட்டுத் தோழர்கள். எல்லோரும் முன்னே பறக்க கடைசியாக நான். ஒரு பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தேன். திடீரென எதிரில் மண் லாரி கண்மூடித்தனமான வேகத்துடன் 'ராங் சைடில்' வந்தது. என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நான் மயக்கமானேன். கண் விழித்த போது மூன்றடி உயரத்திலிருந்து ஒரு மணல் குவியல் மீது நான் ஒரு பக்கமும் வண்டி ஒரு பக்கமுமாக விழுந்திருந்தோம். வண்டிக்கோ எனக்கோ ஒரு சேதாரமுமில்லை! (அந்தப் பாலத்தில் பக்கவாட்டுச் சுவர் இல்லை).

வில்லனாக வந்ததும் மணல் (லாரி). காப்பாற்றியதும் மணல் (குவியல்). என்ன விந்தை! ஏழுமலையான் அருளை வியந்தபடி தொடர்ந்தோம் பயணத்தை!

- ஆர்.ஆர்.தமன், சென்னை-106

வாசகர்களே!

உங்க பைக் அனுபவத்தை 'மைக் பைக்' என்று குறிப்பிட்டு புகைப்படத்துடன் எழுதி அனுப்புங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.



சுமந்து செல்லும் தோழி!

என்னுடைய பைக், வெறும் பைக் மட்டுமல்ல துணைவன். போலியோவினால் கால்கள் பாதிக்கப்பட்டு நடக்கச் சிரமப்படும் எனக்கு பைக் மட்டும் இல்லாமலிருந்தால் வாழ்க்கையே தூர்ந்துபோயிருக்கும். அதனுடைய உதவியால்தான் வருவாய் ஆய்வாளர் பணியை என்னால் சிறப்பாகப் பார்க்க முடிகிறது. என்னுடைய அனைத்து வளர்ச்சியிலும் பெரிதும் துணையாக இருப்பது என்னுடைய பைக்தான். அதை வாங்கி பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இன்று பழசாகி விட்டது. நிறைய பேர் அதை மாற்றிவிட்டுப் புதிய பைக் வாங்கச் சொல்கிறார்கள். ஆனால், எனக்கு மாற்றத் தோன்றவில்லை. ஏனென்றால் அதை நான் வெறும் இயந்திரமாகப் பார்க்கவில்லை. என் உணர்வோடு கலந்து தூக்கிச் சுமக்கும் உயிர்த் தோழியாகப் பார்க்கிறேன். - எஸ்.செல்வசுந்தரி, திருச்சி-12

சிவகாசியில் விருதுநகரில்

* மீனாட்சி கோயிலை மையமாக வைத்து 'மதுரை' உருவானது போல, ஊருக்கு மையத்திலிருக்கும் சிவன் கோயிலைச் சுற்றி சதுர வடிவில் வளர்ந்ததுதான் சிவகாசி. காசியிலிருந்து சிவலிங்கம் தருவிக்கப்பட்டு பிரதிஷ்டை ஆனதால் ஊர்பெயர் சிவகாசி ஆனதாம்.



* ஏ.பி.செல்வராஜன்

* மழை வரம் வேண்டி மண்டியிட்ட சிவகாசி மக்கள், காக்கா சண்முக நாடாரும், ஐய்ய நாடாரும் கொல்கத்தாவில் கையால் தயாரிக்கும் தீப்பெட்டித் தொழிலைக் கற்றுக் கொண்டு, சிவகாசியில் ஆரம்பித்த பிறகு வெயில் வரம் கேட்க ஆரம்பித்து விட்டனர்.

* மழை வரக் கூடாது என்று நந்திப் பெருமானை, தண்ணீர் நிரம்பிய கொப்பரைக்குள் முழுக்காட்டும் திருவிழா முன்பு சிவகாசியில் ஏகப் பிரசித்தமாம்.

* பட்டாசு தொழிற்சாலை 625; தீப்பெட்டி ஆலை 480; ஆப்செட் அச்சகம் 580... என எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது.

* ''ஆண்டொன்றுக்கு மட்டும் கலால்வரி, விற்பனை வரி என 250 லிருந்து 300 கோடிகள் வரை மத்திய - மாநில அரசுகளுக்குப் போகிறது.

''தலைநகரம் விருதுநகர் எனினும் வர்த்தக நகரம் சிவகாசிதான்'' என்கிறார் ஸ்ரீ காளீஸ்வரி பயர் ஒர்க்ஸ் உரிமையாளர் ஏ.பி. செல்வராஜன்.

சராசரியாக மாதத்துக்கு 120 கண்டெய்னர்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு தீப்பெட்டி ஏற்றுமதியாகும் சிவகாசியில், தொழிலாளர் துணைத் தலைமை அலுவலகத்துக்குச் சொந்த கட்டடம் இல்லை!

* இந்தியாவின் பட்டாசு தேவையில் எண்பத்தைந்து சதவிகிதத்தை, சிவகாசி தீர்த்து வைக்கிறது. எனினும் கோர்ட் இயங்குவது வாடகைக் கட்டடத்தில்தான்.

* அரசுப் பேருந்துக்கு முதன் முதலில் டிக்கெட் அச்சடித்துக் கொடுத்தது சிவகாசி அச்சுப் பட்டறைகள்தான். ஆனால், சென்னையிலிருந்து சிவகாசிக்கு வர பொதிகை எக்ஸ்பிரஸ் இரயிலை விட்டால் வேறு இரயில் வழியில்லை.

* பட்டாசு, அச்சு, தீப்பெட்டி தொழில்கள் ஆகியவற்றில் நேரடியாகவும் மறைமுகமாவும் நான்கு லட்சங்களுக்கு மேல் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், பிராவிடண்ட் ஃபண்ட் அலுவலகம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.





* விருதுநகரையும் சிவகாசியையும் ஊடறுத்துப் போகும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 26 கி.மீ.

சீக்ரெட் அஃப் சிவகாசி



தூரத்தில் இருப்ப தால் சிவகாசிக்கு எந்தப் பயனும் இல்லை!

* சிவகாசியில் ஒரு குழி (3x3) நிலத்தின் விலை ரூ.50,000. ஆனால், தலைநகர் விருது நகரில் ரூ.45,0000க்கும் குறைவு. எனவேதான் பொழுதுபோக்கு

50,000
45,000

பூங்கா இல்லாமல் போயிருக்குமோ?

* இருநூறுக்கும் மேற்பட்ட குலதெய் வங்களைக் கொண்ட இவ்வூரில் அரிவா ளோடு காட்சியளிக்கும் ஒரு குலதெய் வத்தின் பெயர் 'அல்லா பிச்சை ராவுத்தர்!'

* தீப்பெட்டித் தேவைக்காக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட லித்தோ பிரஸ் இன்றும் நாடார் லித்தோ பிரஸ் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

* மழை பெய்ய முளைக்கும் காளான் கள் போல, திடீர் கோயில்கள் சிவகாசியில் ஏராளம். வெளியூரில் வேலை செய்யும் சிவகாசிவாசிகளால் எழுப்பப்படும் இக்கோயில்கள், கும்பிட்டு முடித்ததும் இடிக்கப்படுகின்றன.



வாசகர் யோசனை:
சாத்தூர் செல்லையா

18.07.2010 முதல்

நடக்குமென்பர்



மேஷம்

உத்தியோகத்தில் மாற்றம் வரும் சாமி! சாதி சனம் தேடி வரும். புருஷன் பொஞ்சாதி சண்டை, ஐஸ்கட்டிப் போல கரைஞ்சிப் போயிடும். பணக்கஷ்டம் இருக்காது ஐயா. புதுசா வீடு வாங்க யோககாலம் இப்போ நடக்குதுன்னு நான் சொன்னா நம்பணும்.

ரிஷபம்

உடம்பும் மனகம் உலைச் சலாத்தான் இருக்கும். கூட்டாளி கள் கழன்றுப்பாங்க. குடும்பத்துல கொஞ்சம் வுட்டுகொடுத்துப் போவனும். பணத்துக்குத் தொல்லையில்லை. ஆனாலும் வரவுசெலவுல உஷாராயிரு நைனா!

மிதுனம்

கலியாணம் கூடி வரும். கடன் சொம கொறையும். கண்ணுக் கெட்டுனத் தூரத்தில கரினை சேதி ஓடி வரும். வூடு மாற யோசனக் கூடும். பெத்தப் புள்ளையால பெரிய செலவா வந்து நிற்கும். பெரியவங்க ஆசிய பெருஞ் சொத்தா வாங்கிக்க.

கடகம்

வெளியூரு போய்வர தோதான வாய்ப்பு வரும். புதுசா வண்டி வரும். பெரிசா பதவி வரும். குந்த எடமில் லேங்கிற கொறை நீங்கிப் போகும். கொடுக்கல் வாங்கல் குத்தங்குறையில்லாம நடக்கும். மாரியாத்த மகிமையால உங்க மனசெல்லம் குளிர்ந்துப் போகும்.

சிம்மம்

எப்பவும் புள்ளங்கப் பத்தின கவல எதுக்கு? கூட்டாளி போனாப் போறான். அவன நம்பியா நீ இருக்கே? புதுசா ஒரு வேல துவங்க யோசிச்சது போதும்லே. ஆரம்பிச்சிடு அய்யன் மேல பாரத்தைப் போட்டு. கோர்ட்டு கேஸு லேட்டாத் தான் ஆவும். பூர்வீக சொத்து பொறுப்பா வந்து சேரும். அது போதாதா?

கன்னி

பின்னாடியிருந்து குத்தின துரோக பயலுங்க கூட்டம் தூள் தூளாகும். வம்பு வழக்கு வெல வெலத்துப் போகும். சொந்தத் தொழில் சொகத் தத் தர ஆரம்பிக்கும். எடமாற்றம் ஏத்தம் தரும். கடன்தொல்லை காணாமல் போகும்.



நடக்கும்!

24.07.2010 வரை

துலாம்

ரொம்பத் தூரம் போய்வர விதியிருக்கு! பணமுடக்கம் காலக்கட்டுன கயிறா இருக்கும். கல்யாணப் பேச்சு ஆரம்பிக்கும். காலுல வலி வந்து வந்து போகும். புதுசாப் போட்ட மான்று பழசாகிப் போகும்.

விருச்சிகம்

எவன்கிட்டேயும் வாயக் குடுக்காத! வம்புல வந்து முடியும். கொடுக்கல் வாங்கல கொறைச் சிக்க. தொழில்ல அகல கால வெக்காத. அம்புட்டும் நஷ்டமாப்போகும். கட்டினப் பொண்டாட்டி காக்க மூச்சுன்னு கத்தினாலும் கண்டுக்காத. வெவகாரமா போயிடும்.

தனுசு

வேலயில முன்னேறப் போற மக்கா! மவராசனா புது வீடு கட்டி பால் காய்ச்சப் போற. கசப்பு விலகி புருஷன் பொஞ்சாதி ஒண்ணு சேருவிங்க. புத்திரபாக்யம் வாய்ப்பிருக்கு. நல்ல சேதி ஒன்று நாடு தாண்டி வரும்.

மகரம்

ஆதரவான சேதியொன்று அடுத்த தேசத்தில் இருந்து வரும். சொத்து வாங்க சூட்சம மான நேரமிது. ஜவ்வுக்கணக்கா இருந்த வழக்கு அப்பளமா நொறுங்கும் நேரமிது. நெனைச் சது நடக்கும். ஜோதி போல உம்பேரு பளிச்சின்னு பரவும்.

கும்பம்

உன் சாதி சனங்ககிட்ட நல்லப் பேரு கூடி வரும். சொத்து பத்து வந்து சேரும். வழக்குல ஜெயிப்பே. விருந்தாளிங்க ஓட்டு வந்தபடி இருப்பாங்க. கூட்டாளி கழன்றுப்பான். புள்ளைங்க இடம் மாறும்.

மீனம்

வேலையில மாத்தம் வரும். விஷம் போல செலவுகள் கூடி போகும். சொத்துபத்து விக்கப் போற - புதுசா ஒரு வேலைய புடிக்கப்போற! மனசுல சஞ்சலம் குவியப் போவுது. மகேஸ்வரனை நெனைச்சுக்கோ, அடுத்த வாரம் அது மண்ணுப்போல பறக்கப் போறது.

தஞ்சை பரத்வாஜ்

ஆஸ்கார் வரலாற்றில் சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை காதரீன் பிக்லோ-வுக்குப் பெற்றுத்தந்த படம் The hurt locker (வேதனைகளின் பெட்டகம்).

ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்க இராணுவப் படையில் வெடிகுண்டுகளைக் கண்டறிந்து செயலிழக்கச் செய்யும் பிரிவுகள் அங்கு வருடத்துக்கு ஒரு குழு என்ற சுழற்சி முறையில் பணியாற்றுகின்றன.

மரணத்தின் அருகே சென்று கைகுலுக்கிக் குசலம் விசாரிக்கும் அந்த எமகாதக வேலையில் வில்லியம் ஜேம்ஸ், தாம்சன், ஒவன், லான்பார்ன் அடங்கிய குழு 2004-ல் பணியாற்றுகிறபோது நேர்கின்ற பரபரப்பான, வேதனையான சம்பவங்களே படத்தின் மையக் கரு.

படத்தில் ஜேம்ஸ்-ஆக வரும் ஜெரோமி ரென்னெரின் நடிப்பு அபாரமானது. துல்லியமான முகபாவங்கள், அங்க அசைவுகள் அந்தக் கதாபாத்திரத்துக்குக் கச்சிதமாக பொருந்துகின்றன. பேரி அக்ராய்ட்டின் ஒளிப்பதிவு பாலைவன வறட்சியையும் மீறி அழகியலாகக் காட்சிகளைப் பதிவாக்கியிருக்கிறது. ஒரே காட்சியில் வெவ்வேறு கோணங்களைப் படமாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் கதையமைப்பு இருந்தாலும் கோணங்களை அடுத்து அடுத்து மாற்றுவதில் குழப்பமில்லாமல் கையாண்டிருக்கிறார்.

ஓர் ஆவணப் படத்துக்கான சாயலுடன் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படம் ஆஸ்கார் விருதைப் பெறுவதற்கு முன்னும் பின்னும் ஏகப்பட்ட சர்ச்சைகளை சந்தித்திருக்கிறது.

அமெரிக்க இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற 'பொஹம்மர்' என்ற இராணுவ வீரர், அமெரிக்கா முழுவதும் மிகப் பிரபலமானவர். அவரது வலைப்பூ மூலம் இராணுவ வீரர்களுக்காக நிதி வசூலித்துப் பாதிக்கப்பட்ட, பொருளாதார ரீதியாக பின்தங்கிய வீரர்களின் குடும்பத்துக்காக உதவி வருகிறார். படத்தில் ஜேம்ஸ் தன்னிச்சையாக பல இடங்களில் முடிவெடுத்து, தன் மேலதிகாரிகளுக்குக் கட்டுப்படாமல் சாகசங்கள் நிகழ்த்துவது போல் காண்பிக்கப்பட்டிருப்பதை பொஹம்மர் கடுமையாக ஆட்சேபித்தார். இராணுவத்தில் கடைநிலை ஊழியன் மேலதிகாரிக்குக் கட்டுப்படாதவன் என்கிற பிம்பத்தைத் தோற்றுவித்துவிடும் என்பதோடு, படத்தில் வீரர்கள் அணிந்திருக்கும் இராணுவ உடைகளும் தவறானவை. பாலைவனத்தில் அணியத்தக்கவென்றே பிரத்யேகமான உடைகள் தான் அமெரிக்க அரசால் தரப்பட்டன. வெடிகுண்டுகளைச் செயலிழக்க வைக்க



அமெரிக்க படம்

சர்ச்சைகளின் பெட்டகம்

பல்வேறு முறைகள் உள்ளன. படத்தில் பெரும்பாலும் கட்டிங் ப்ளேயர், ஸ்க்ரு டிரைவர் ஆகியவற்றையே அதிகம் பயன் படுத்துவது வர்த்தக படங்களின் அடி யொற்றியே எடுக்கப்பட்டிருக்கும் அறியா மையைக் காட்டுகிறது என்பதும் அவரது குற்றச்சாட்டு.

விருது அறிவிக்கப்படும் முன் படத் தில் தயாரிப்பாளர்களில் ஒருவரான 'நிக்கோலஸ் சார்ட்டியர்' ஆஸ்கார் நடுவர் குழு உறுப்பினர்களுக்கு இ.மெயில் மூலம் இந்தப் படத்தைத் தேர்வு செய்யும்படி வேண்டுகோள் அனுப்பியது ஆஸ்கார் குழுவை எரிச்சலூட்டியது. அவர் எச்சரிக்கப்பட்டு, விருது வழங்கும் விழாவுக்கு அவர் வரக் கூடாது என்றும் தடைவிதிக்கப்பட்டார்.

படத்தின் கதை 'மார்க்போல்' என்ற பத்திரிகையாளருடையது. இவர் ஈராக் யுத்தத்தின்போது செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இந்தக் கதையை எழுதியிருந்தார். வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவில் பணியாற்றிய அமெரிக்க இராணுவ வீரர் ஜெஃப்ரி சார்வின் சாயலாகவே படத்தின் 'ஜேம்ஸ்' கதாபாத்திரம் படைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கா முழுவதும் நம்பப்படுகிறது. இதன் காரணமாகப் படத்தில் இராணுவம் பற்றிய ஆட்சேபகரமான தகவல்கள் இருப்பதாக தற்பொழுது 'ஜெஃப்ரி' வழக்குப் பதிவு செய்துள்ளார். சிறந்த கதாசிரியருக்கான ஆஸ்கார் விருதை இந்த படத்துக்காகப் பெற்ற மார்க்போல் தான், இப்படத்தின் தொழில் நுட்ப ஆலோசகரும்கூட. எனவே, மார்க்போலுக்கு இந்த வழக்குக் கூடுதல் தலைவலியைத் தந்துள்ளது.

இதேபோல 1930-ல் எடுக்கப்பட்ட All Quiet on Western Front என்ற படமும் ஆஸ்கார் விருது பெறும்போது பல சர்ச்சை களைச் சந்தித்தது. ஜெர்மன் இராணுவ வீரர்களின் கொடூரமான இன்னொரு முகத்தை மறைக்கும் முயற்சி என்று விமர்சிக்கப் பட்டது.

2010-க்கான கோல்டன் குளோப் விருதுப் போட்டியில் ஜேம்ஸ் காமரூன் இயக்கிய 'அவதார்' படம் 'ஹர்ட் லாக்கரை'ப் பின்னுக்குத் தள்ளி வென்றாலும், ஆஸ்கார் விருதுக்கான போட்டியில், 'அவதாரை' தோற்கடித்து 'ஹர்ட் லாக்கர்' பரிசை தட்டிச் சென்றது.

'அவதார்' படத்தை இயக்கிய ஜேம்ஸ் காமரூனின் முன்னாள் மனைவிதான் 'ஹர்ட் லாக்கரை' இயக்கிய கேத்தரின் பிக்லோ!



நெய்வேலி பாரதிக்குமார்

இராஜபாளையத்தின் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்துக்கு இன்னொரு பெயர் மணியோசை ஆலயம். இதனை காமிக ஆகம நெறிப்படியும், கலைநயத்துடனும் கட்டி முடித்தவர்கள், ராம்கோ குரூப் தற்போதைய சேர்மன் பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜாவின் தாத்தா பி.ஏ. சின்னையா ராஜா.

* ஆலயமுள்ள இப்பகுதி சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு மணல் திட்டு.
* அதனைத் தோண்டும்போது எதிர்பாராத வண்ணமாக மணியோசை கேட்டுள்ளது. தோண்டத் தோண்ட மணியோசை அதிகமாகியது.
* மணல்மேடு முன்பாக ஊரே கூடி விட்டது. மேன்மேலும் தோண்டிட... எந்தக் காலத்திலோ கட்டப்பட்ட ஒரு முழு சிவாலயம் வெளிவர ஆரம்பித்தது.
* ஆலய வடிவ மாதிரிகளைப் பெயர்த்து எடுத்து பூமிக்கு மேலாகக் கொண்டு வந்தனர். அந்த இடத்தில் முற்றிலும் புதிய வடிவில் செய்நேர்த்தியுடன் மீனாட்சி - சுந்தரேஸ்வரர் ஆலயத்தைக் கட்டி முடித்தார் பி.ஏ. சின்னையா ராஜா.
* ஐந்து நிலை இராஜகோபுரத்தில் அதிகார நந்தி. அவரை வணங்கிவிட்டு ஆலயத்துக்குள் நுழைந்தால் அனுக்க விநாயகர் தனி சந்நிதி. கன்னி மூலையில் தனி கோயில் கொண்டுள்ளார் விஜயகணபதி. குகை போன்ற சந்நிதியில் தெற்கு நோக்கி அமர்ந்துள்ளார் தட்சிணாமூர்த்தி.
* பிராகாரத்தில் வித்மயா சரஸ்வதி கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளாள். வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் சந்நிதி உள்ளது. துர்கை சந்நிதி இங்கு





விசேஷம். ஞாயிறு ராகு கால பூஜை மிக பிரசித்தம்.

* நவக்கிரகங்கள் அமைந்திருந்த போதிலும், சனி பகவானுக்கென்று தனி சந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* ஸ்ரீ கால பைரவர் சந்நிதியில் தேய்பிறை அஷ்டமி அன்று நல்ல கூட்டம். கோயில் அமைப்பின் உள்ளே வடபுறத்தில் சுவாமி ஐயப்பன் சந்நிதி. அதன் விக்கிரகம் குறிப்பிடத்தக்கது.

* சபரிமலையில் 1977-ல் நிகழ்ந்த தீ விபத்தின்போது, சந்நிதியில் அமைந் திருந்த சுவாமி ஐயப்பன் விக்கிரகம் பஸ்பம் ஆகிப் போனது. அந்தச் சமயத்தில் சபரிமலை கோயில் நிர்வாகம் ஐம்பொன் சிலையாக சுவாமி ஐயப்பனுக்கு ஒரே வடிவத்தில் ஆறு விக்கிரகம் செய்தது.

* அதில் ஒன்றுதான், இராஜபாளையம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள ஐயப்பன் சந்நிதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

* திருவனந்தல் பூஜா காலத்தின் போது பால், கால சந்தியில் சுத்தானம், உச்சி காலத்தில் தயிர் சாதம், சாயரட்சையில் சுத்தானம், அர்த்த ஜாமத்தில் பால் ஆகியன நைவேத்யமாகப் படைக்கப்படுகின்றன சுவாமிக்கும் அம்பாளுக்கும்.

வாசகர் யோசனை :

இரா.கணேசன், சேலம்

படம் : **பி.ஜி.நந்தா**



மணியோசை கேட்டு எழுந்து!

முப்பது நாட்கள் முப்பது லட்சம் பேர் நேரிலும் பல கோடி மக்கள் உலகம் முழுவதிலும் டீ.வி.யிலும் பார்த்துக் கொண்டிருந்த கால்பந்து விளையாட்டின் கதாநாயகன் ஒரு ஆட்டக்காரரோ அல்லது கோச்சோ இல்லை. பால்(Paul) என்ற ஆக்டோபாஸ்தான். கடல்வாழ் உயிரினமான ஆக்டோபஸுக்கும் கால்பந்தாட்டத்துக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? - அது சொன்ன ஆருடம்தான்.

மேற்கு ஜெர்மனியில் ஓபர்ஹெலஸென் (Oberahausen) நகரிலிருக்கும் ஸீ லைஃப் (sealife) என்ற கடல்வாழ் உயிரினங்களின் கண்காட்சி உலகப் புகழ்பெற்றது. 3000 சதுர மீட்டர் பரப்பில் 20,000க்கும் மேற்பட்ட கடல்வாழ் இனங்கள் சின்ன நத்தையிலிருந்து திமிங்கலங்கள் வரை இந்த பிரம்மாண்ட உலகில் வாழ்கிறது. இந்தக் கண்காட்சியில் இருக்கும் ஓர் ஆக்டோபஸ்தான் 'பால்'. ஜெர்மனி ஆடிய அத்தனை போட்டிகளின் முடிவையும் முன்கூட்டியே சொன்ன ஜோஸ்யர்.

எப்படி ஆக்டோபஸ் ஆருடம் சொல்லுகிறது? ஒரு நீண்ட கம்பியின் முனையில் இரண்டு சிறிய கண்ணாடிப் பெட்டிகள் பொருத்தப்பட்டிருக்கும். கண்ணாடிப் பலகையை ஆக்டோபஸ் வாழும் கூண்டின் அடிப் பகுதிக்கு இறக்குகிறார்கள். மூடப்பட்டிருக்கும் அந்தப் பெட்டியின் பக்கங்களில் போட்டியிடும் நாடுகளின் கொடிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. கூண்டின் தரைப்பகுதியில் கடல் தாவரங்களுடன் ஒரு சின்ன புட்பாலும் இருக்கிறது. கண்ணாடிப் பெட்டியின் உள்ளே ஆக்டோபஸுக்கு உணவு இருக்கும். அந்தப் பெட்டிகளை வைத்தவுடன் ஆக்டோபஸ் சில நிமிஷங்கள் ஆராய்ந்து ஒரு பெட்டியின் மூடியைத் திறக்கும். முதலில் திறக்கப்படும் பெட்டியில் எந்த நாட்டின் கொடியிருக்கிறதோ அதுதான் அன்றைய போட்டியில் ஜெயிக்கும். ஜெர்மனி, இங்கிலாந்து, தைவான் நாடுகளில் இது டி.வி.யில் நேரடியாக ஒளிபரப்பானது.

நாலு ஜோடி கரங்களுடனும் (கால்களும் அதுதான்) இரண்டு கண்களுடனும் இருக்கும் ஆக்டோபஸ்களில் 300 வகைகள் இருக்கின்றன. கடல்வாழ் உயிரினங்களிலேயே மிக புத்திசாலிகளாகக் கருதப்படுபவை. ஒலி, ஒளி, வண்ணம் எல்லாவற்றையும் உணரும் சக்தி உள்ளவை. அவற்றால் யோசிக்க முடியும் என்றெல்லாம் பல ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனாலும் 'அதற்கு ஜோஸ்யம் சொல்லும் அளவிற்கெல்லாம் திறமை கிடையாது. இதெல்லாம் தற்செயல்' என்று சொல்பவர்களும் உண்டு! 'அப்படியானால் 2008ல் நடந்த 'யூரோ' என்ற



போட்டி ஆட்டங்களில் ஒரே ஒரு முடிவைத் தவிர மற்ற எல்லாவற்றையும் இதே மாதிரி கணித்து சரியாகச் சொல் லிற்றே அது எப்படி?' என்று கேட்பவர் களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. உலகக் கோப்பை செமிபைனல் ஆட்டத் தில் ஜெர்மனி ஸ்பெயினுடன் மோதியது. அந்த ஆட்டத்தில் ஸ்பெயின் ஜெயிக்கும் என்று ஆக்டோபஸ் சுட்டிக்காட்டியதைக் கண்டு அதிர்ந்துபோனார்கள் ஜெர்மன் மக்கள். "ஆக்டோபஸ் தவறு செய்ய வாய்ப்பிருக்கிறது. நன்றாக ஆடுங்கள்"



பலித்தது ஆக்டோபஸ் ஜோதிடம்!

என்ற உற்சாக பேனருடன் காலரியில் காத் திருந்தனர். ஆட்டம் துவங்க சில மணி நேரங்களுக்கு முன் இந்தியாவில் ஆங்கில சானலுக்கு (NDTV) பேட்டியளித்த இந்தியாவின் ஜெர்மன் தூதரும் மிக உற் சாகமாக ஜெர்மனி ஜெயிக்குமென்றார். இவர் முன்னாள் கால்பந்தாட்ட வீரர். பேட்டி கண்டவர், ஆக்டோபஸின் ஆருடம் பற்றிக் கேட்டார். 2008 ஆண்டு மாதிரி ஒரே ஒரு தவறு செய்துவிட்டது. இன்றைய ஆட்டத்தில் நாங்கள் ஜெயிக் கிறோம் என்றார். ஆனால் ஜெயித்தது என்னவோ ஆக்டோபஸ்தான். அது ஆருடம் சொன்ன படி ஸ்பெயின்தான் செமிபைனலில் ஜெயித்தது.

கொதித்துப்போன ஜெர்மன் ரசிகர்கள் அதை கடலில் போடுங்கள். கறி பண்ணி சாப்பிடுங்கள் (எப்படி பண்ணலாம் என்று ரெசிப்பி வேறு) என்றெல்லாம் வலைப்பூக் களில் எழுதித் தள்ளிவிட்டார்கள். 'ஐயோ அப்படியெல்லாம் ஏதாவது பண்ணித் தொலைத்துவிடாதீர்கள். எங்களிடம் கொடுங்கள். நாங்கள் பாதுகாக்கிறோம்'' என்று ஸ்பெயினின் பிரதமர் ரேடியோவில் பேசினார். கால்பந்து விசிறிகள் மட்டு மில்லாமல் பிரதமர்கள், தூதர்கள் என்று எல்லோராலும் பேசப்படுமளவிற்கு ஆக்டோபஸ் 'பால்' உலகப் புகழ்பெற்று விட்டது. மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் ஜெர்மனியும் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினும் ஜெயிக்கும் என்று இது சொல்லியிருந்தபடியே அந்த விறுவிறுப்பான ஆட்டங்களின் இறுதி நிமிடங்களில் நடந்தது.

ஆக்டோபஸ் பால் புத்திசாலியோ இல்லையோ. ஆனால் அதன் மூலம் உலகின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பிய ஜெர்மனி லீ லைஃப் கண் காட்சி நிர்வாகிகள் நிச்சயமாக புத்தி சாலிகள்தான்.

– ரமணன்

"நானும் சின்ன வயதிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன் விருது நகரில் பெரிய வளர்ச்சி எதுவும் வந்து விடவில்லை. சுற்றுப்புற ஊர்களுக்கு விருதுநகர் ஒரு வியாபாரச் சந்தை. அங்கே எப்போதும் வெயிலும், வெக்கையும், புழுதியும்தான். கடைத் தெருவில் வெள்ளரிக்காய் முதல் புரோட்டா வரை எல்லாவற்றிலும் இலேசாகப் புழுதி படிந்திருக்கும். அந்தப் புழுதிதான் எங்க ஊரின் ஸ்பெஷாலிட்டி!" என்று வருத்தத்தோடு சொன்னாலும் ஊர் நினைவுகளில் முகம் பிரகாசமாகிறது இயக்குநர் வசந்தபாலனுக்கு.

"விருதுநகரில் நிறைய பிராண்ட் சமையல் எண்ணெய்கள் உற்பத்தி ஆவதால், சாப்பாட்டு ஐட்டங்களில் தாராளமாகவே எண்ணெயை உபயோகிப்பார்கள். சிக்கன் ஐட்டங்கள் சமைப்பதில் எங்க ஊர்க்காரர்களை அடிச்சிக்க ஆளே இல்லை. கஜேந்திர விலாஸ் சேவு, பர்மா கடை புரோட்டா, அல்லா பிச்சை கடை புரோட்டா, ராஜா ஸ்வீட் ஸ்டால் அல்வா, இதெல்லாம் விருதுநகரில் ரொம்ப பாப்புலரான ஐட்டங்கள்" என்று ஊர்க் குறித்து பேசிக் கொண்டே போகிறார்.

"காலேஜ் நாட்களில், மதியானம் வகுப்பை கட் அடித்துவிட்டு, பக்கத்து சினிமா தியேட்டருக்குப் போய் சினிமா பார்ப்பது வழக்கம். அப்படி ஒரு தடவை கமலின் தீவிர ரசிகர்களான நிறைய மாணவர்கள் காலேஜுக்குக் கட் அடித்து விட்டு, கமல் நடிச்ச சூரசம்ஹாரம் படத்துக்குப் போனோம். தியேட்டரின் ஆபரேட்டர், படத்தின் அத்தனை பாட்டுகளையும் கட் பண்ணி விட்டார். பசங்கள் எல்லாரும் ஆபரேட்டர் ரூமுக்குப் போய் பெரிசா கலாட்டா பண்ணவே, கட் பண்ணின பாட்டுகளைப் போட்டார். அத்தோடு விஷயத்தை விட்டிருக்கலாம்; ஆனால், தியேட்டர்காரர் போலீஸ்ல புகார் கொடுத்துவிட்டார். போலீஸ் வந்து 'யாரடா இங்கே ரகளை பண்ணினது?' என்று சொல்லி எங்களையெல்லாம் அரஸ்ட் பண்ணி ஸ்டேஷனுக்குக் கொண்டுபோயிட்டாங்க. ஆறு மாதத்துக்கு கேஸ் நடந்தது. சம்மன் வரும்போது, காலேஜுக்கு மட்டம் போட்டு விட்டு, கோர்ட்டுக்குப் போவோம். கடைசியில் அந்தக் கேஸ் வாபஸ் பெறப்பட்டது" என்கிற வசந்த பாலனின் பேச்சு ஊர் நடைமுறைகள் பக்கம் திரும்புகிறது.

"எங்க ஊர்ல கொஞ்சம் வித்தியாசமான ஒரு பழக்கம் நடைமுறையில் உள்ளது. மாப்பிள்ளை, பொண்ணோட வீட்டுக்கு வந்து, சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டுவிட்டு, பெண்பார்க்கும் வழக்கம் கிடையாது. பெண் வீட்டார், கோவிலுக்கு பெண்ணை அழைத்து வருவார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரங்க, கோவிலைச் சுத்தி வரும்போதே பெண்ணை பார்த்

பாசத்துக்குரிய புழுதி!

துக்கணும். பெண் பிடித்திருந்தால், மேற் கொண்டு பேச பெண் வீடுக்குப் போவார்கள்'' என்கிறவர் தான் சென்னை வந்த கதையைச் சொல்லிச் சொல்லி சிரிக்கிறார்.

''அப்பா சொன்னபடி பாட்டனியோ, ஆங்கில இலக்கியமோ படிக்க விருப்ப மில்லாமல், சினிமா ஆசையில் இரண்டு நண்பர்களை ப்ரெயின் வாஷ் செய்து கூட அழைத்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பி சென்னை வந்து இறங் கினேன். அஷோக் பில்லரில் இறங்கி, அங்கிருந்த நாலைந்து கடைகளில்

ஊர்ப் பாசம்

வேலை கேட்டு, கிடைக்காது போன வுடன், உடன் வந்த நண்பர்கள், 'எங் களை விட்டுடுடா மாப்ளே!' என்று சொல்லி, என்னிடமிருந்தே டிக்கெடுக் குக் காசு வாங்கிக்கொண்டு மதுரைக்கு பஸ் ஏறிவிட்டார்கள். அதன் பிறகான சென்னை வாழ்க்கை தனி அத்தியாயம்'' என்கிறவரின் வெயில் படத்தில் விருது நகர் தெருக்களின் ஆதிக்கம் அதிகம்.

''வெயில் படத்தின் ஷூட்டிங்கை, விருதுநகர் வெயிலிலும், புழுதியிலும் நடத்தி முடித்து, அந்தப் படம் எங்கள் ஊர் தியேட்டரிலும் ரிலீசானது. 700 பேர் உட்காரும் தியேட்டரில் இரண்டாயிரம் பேர் நின்றுகொண்டே படம் பார்த்தார் கள். 'முந்தானை முடிச்சுக்கு அப்புறம், இப்போதான் இந்த தியேட்டருல இத் தனை கூட்டம்' என்று ஆச்சரியமும், நெகிழ்ச்சியுமாக தியேட்டர் ஓனர் சொன் னதைக் கேட்டு விட்டு, கண்களை மூடிக் கொண்டு சந்தோஷப் பெருமூச்சு விட்ட போது எங்கள் விருதுநகர் புழுதி நெஞ்சை நிறைத்தது'' என்கிறவரின் கண் களுக்குள் அந்தப் புழுதி மின்னலிடு கிறது.

– சந்திரமௌலி



தொலைந்தது செல் வந்தது உறவு!

என் மகள் கல்லூரிப்படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் சேர்ந்த முதல் மாத சம்பளத்தில் ரூ.3500/-க்கு ஒரு செல்ஃபோன் வாங்கினாள். அதையே மூன்று வருடங்களாக உபயோகித்து வந்தாள். ஒரு நாள் பாங்குக்குச் சென்ற போது செல்ஃபோனைத் தொலைத்து விட்டாள்.

இது நடந்து சரியாக மூன்று நாட்களுக்குப் பிறகு என்னுடைய மகனும், மகளும் உப்பிலியபாளையத்தில் ஒரு பேக்கரியில் கேக் வாங்கிவிட்டுத் திரும்பும்போது பேக்கரி வாசலில் ஒரு செல்ஃபோனைக் கண்டு எடுத்தார்கள். அது விலை உயர்ந்த புத்தம் புது செல்ஃபோன் என்பதை அறிந்தனர். என் மகளுக்கு ஒரே மகிழ்ச்சி. 'காணாமல் போன என் செல்ஃபோனுக்குப் பதிலாக ஆண்டவன் எனக்கு புது செல்ஃபோன் கொடுத்துள்ளார். இதை நான் வைத்துக் கொள்கிறேன் அண்ணா' என்று கூறியுள்ளாள். அதற்கு என் மகன், ''உன்னுடைய செல்ஃபோன் தொலைந்தபோது நீ எப்படி வருத்தப்பட்டாயோ அது போலத்தானே இந்த செல்ஃபோன் தொலைத்தவரும் வருத்தப்படுவார். ரிங் வந்தால் விபரம் கேட்டு செல்ஃபோனைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்'' என்று கூறிவிட்டான்.

சிறிது நேரத்தில் கீழே கண்டு எடுத்த செல்ஃபோனில் ரிங் ஒலித்தது. என்னுடைய மகன் அவர்களிடம் வீட்டு விலாசம் தெரிவித்து வீட்டுக்கு வந்து செல்ஃபோனைப் பெற்றுச் செல்லுமாறு கூறிவிட்டான். அரைமணி நேரத்தில் என் வீட்டு வாசலில் ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இளைஞர் ஒருவர், ''இன்று எனக்குப் பிறந்த நாள். அதற்காகத்தான் மிகவும் விலை உயர்ந்த செல்ஃபோன் வாங்கியிருந்தேன். பர்த்டே பார்ட்டிக்காக கேக் வாங்கும் இடத்தில் தொலைந்து போய் விட்டது. இப்போது உங்கள் மூலம் அது கிடைத்து விட்டது. ரொம்ப தேங்க்ஸ். நீங்களும் என்னுடைய பர்த்டே பார்ட்டியில் கலந்துக்கணும். புறப்படுங்கள்'' என்று கூறினார். அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, என் மகள் செல்ஃபோன் தொலைந்து போனதை அறிந்துகொண்ட அவர் செல்ஃபோனை திருப்பிக் கொடுத்ததைப் பாராட்டும் வகையில் ரூ.1000/- அன்பளிப்பாகக் கொடுத்தார். மீதி தொகையைப் போட்டு என் மகளும் புதிய செல்ஃபோன் ஒன்றை வாங்கி உபயோகித்து வருகிறாள்.

– சுந்தர் சுந்தரி



வாசகர்களே!
உங்க செல்ஃபோன் அனுபவத்தை ஃபோட்டோவுடன் எழுதுங்க...
kalki@kalkiweekly.com-க்கும் அனுப்பலாம்

மாடல் படம்


என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery

HOUSE OF VUMMIDI

இணைந்து வழங்கும்



'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, **தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர்** ஜூலை இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 188) பற்றிய அறிவிப்பு வெளியானது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப்படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், பவள மங்கையிலிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும். இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ளவும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

(ஆர்)

மேலும் விவரங்களுக்கு **94443 83465**

இத்திட்டத்தில் மும்முரமாக இறங்கி முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்தி, முதல் மரகத மங்கையாக உயர்ந்த சுசீலா அரவிந்தன் இதோ...



பிரியமுள்ள ஆசிரியருக்கு...

வணக்கம். வரும் ஆகஸ்ட் 1 எனது பிறந்த நாள். இந்த நாளில் மிகுந்த மனநிறைவை உணர்கிறேன். அதற்கு வழி ஏற்படுத்தித் தந்த மங்கையர் மலருக்கும் நட்பு வட்டத்தில் சந்தா கேட்டவுடன் ''ஓ... மங்கையர் மலரா... முகவரி எழுதிக்கோ'' எனச் சொல்லி என்னை உற்சாகப்படுத்திய மலர்களுக்கும் (முத்து மங்கையர்களுக்கும்) நன்றிகள்.

நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்!

மங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :..

முகவரி:..

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

☏போன்: ....

ஈமெயில்..

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:..

ஈமெயில்..

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:..

ஈமெயில்..

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:..

ஈமெயில்..

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:..

ஈமெயில்..

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

☏போன்:..

ஈமெயில்..

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

இப்படிக்கு

அனுப்ப வேண்டிய முகவரி

மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

தேதி:......




பொறாமை

பெரிய அழுக்கு, குழந்தைகளிடம் சுலபத்தில் சேர்கிற அழுக்கு, பொறாமைக் குணம்தான். இன்னொரு பையன் படிப்பிலோ, விளையாட்டிலோ நம்மைவிடக் கெட்டிக்காரனாக இருந்தால், அல்லது ஸில்க் சட்டை போட்டுக்கொண்டு வந்தால், காரில் வந்து இறங்கினால், முதல் க்ளாஸில் சினிமாவுக்குப் போனால் உடனே அவனைப் பார்த்துப் பொறாமை உண்டாகிவிடுகிறது. அது அழுக்கு மாதிரி மனத்தை ரொம்பவும் கெடுத்து விடும். பலவிதமான சண்டைகளில் நம்மைக் கொண்டு தள்ளிவிடும். அவனைச் சண்டை போட்டு ஜெயிக்க முடியவில்லை என்றால், கோள் சொல்லிக் கெடுக்கத் தோன்றும். இம்மாதிரி ஓர் அழுக்கிலிருந்து இன்னோர் அழுக்கு என்று வளர்ந்து கொண்டே போகும். இந்த அழுக்கான எண்ணங்களாலே நம் படிப்பிலே கவனம் குறையும். விளையாட்டில் உற்சாகம் குன்றும். இவ்வாறு அறிவு, உடம்பு இரண்டையும் பாழாக்கிக் கொள்வோம். நம்மை நாமே கெடுத்துக்கொள்வதைத் தவிர, பொறாமையால் வேறு எந்த விதப் பயனும் இல்லை.

ஒன்றே ஒன்றில்தான் போட்டியிருக்க வேண்டும். 'அந்தப் பையன் இவ்வளவு நிறைய மார்க்கு வாங்குகிறானே! நாமும் அப்படி வாங்க வேண்டும்' என்ற ஆசையுடன், ஊக்கமாகப் படித்துப் போட்டிப் போட வேண்டும். இந்தப் போட்டியும் பொறாமையாகி விடக் கூடாது. அறிவாளியாக, நல்லவனாக இருப்பதற்குப் போட்டி போடலாமே தவிர, பொறாமை கூடவே கூடாது. விளையாட்டிலும் அப்படியே!

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்




உஷ்ணம்

வண்ணநிலவன்

அன்று மனோகர் நெல்லை எக்ஸ்பிரஸில் ஏறியதுமே, ஊருக்குப் போனதும் அக்காவுடைய விஷயத்தை அப்பாவிடம் பேசி உடனே ஏதாவது முடிவு கண்டாகவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான். அதற்குள் வெள்ளரிப் பிஞ்சுகள் விற்பனைக்கு வந்து விட்டன. சாத்தூரில் கூடைகூடையாக வெள்ளரிப் பிஞ்சுகளை வியாபாரிகள் ரயிலில் ஏற்றினார்கள். அக்காவுக்கு வெள்ளரிப் பிஞ்சுகளை ரொம்பப் பிடிக்கும். மனோகர் நிறையவே வெள்ளரிப் பிஞ்சுகளை வாங்கி ஆர்.எம்.கே.வி.

கடைப் பையில் போட்டுக் கொண்டான். நீர்க்கருவை மரங்கள் இருபுறமும் ரயிலுடன் ஓடிவந்து கொண்டிருந்தன. குளங்கள் எல்லாம் வற்றிக் கிடந்தன. கொடிய கோடை ஆரம்பமாகி விட்டது. திடீர் திடீரென்று கருவை மரங்களினூடே மயில்கள் தென்பட்டன. அவை எங்கே சென்று தண்ணீர் குடிக்கும்?

திருநெல்வேலி ஜங்ஷனில் இறங்கியதும் சபாபதியைத்தான் தேடினான். எப்போது ஆட்டோ பிடிக்க வேண்டுமென்றாலும் சபாபதியுடைய ஞாபகம்தான் வருகிறது. அவனுக்குச் சந்திப் பிள்ளையார் முக்கில்தான் ஸ்டாண்டு. ஆனால், காலையில் ரயில் பயணிகளை ஏற்றிக்கொண்டுவிட ஜங்ஷனுக்கு வந்து விடுவான். சபாபதியைக் காணவில்லை. ஏதோ ஒரு ஆட்டோவில் ஏறி வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்போதே பத்தே காலாகி விட்டது. அப்பா, தார்சாவில் கீழப்புதுத் தெரு மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தார். ரஞ்ஜனி காலேஜுக்குப் போயிருந்தாள். அப்பா சென்னையில் எல்லோருடைய சௌக்கியத்தையும் பற்றிக் கேட்டார். சங்கர மாமாவும் விசாரித்தார். அம்மா அந்த விசாரிப்பில் பங்குகொள்கிற மாதிரி நிலை ஓரத்தில்



நின்றுகொண்டிருந்தாள். குளித்துவிட்டு ஆஃபீஸுக்குப் புறப்பட வேண்டும். ஆஃபீஸுக்குப் ஃபோன் செய்து கொஞ்சம் லேட்டாக வருவேன் என்று சொன்னான். எஸ்.ஓ.போன காரியத்தைப் பற்றி விசாரித்தார். சுருக்கமாகச் சொல்லி விட்டுக் குளிக்கச் சென்றான்.

அவன் பெட்டியிலிருந்து ஊருக்கு எடுத்துச் சென்றிருந்த பேஸ்ட், பிரஷ், சோப்பு டப்பாவை எல்லாம் எடுத்து வைக்கும்போது, அம்மா பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். ஒவ்வொருத்தராகப் பேர் சொல்லி விசாரித்தாள். அவளுக்கு எல்லோரையும் பார்க்க வேண்டுமென்று ஆசை. வெள் ளரிக்காய் பையை அம்மாவிடம் கொடுத்தான். அடுப்பங்கரைக்குப் போய் இரண்டு சிறு தட்டுகளை எடுத்து வந்து, வெள்ளரிக்காய்களை வைத்து, தார்சாவில் பேசிக்கொண்டிருந்த தன் கணவரிடமும், சங்கரன்பிள்ளையிடமும் கொடுத்தாள். வெள்ளரிக்காய்களைச் சாப்பிட்டு விட்டு சங்கரன் பிள்ளை போய் விட்டார்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட மருது சகோதரர்கள் பிறந்த நரிக்குடி அ.முக்குலம் அருப்புக்கோட்டைக்கு அருகே உள்ளது.

- ராஜபாண்டி



நரிக்குடிச் சிங்கங்கள்

மனோகர், குளித்து விட்டுத் திருநீர் பூசிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். அவனுக்கு நல்ல பசி. மதுரையில் காப்பி சாப்பிட்டதோடு சரி.

''அப்பா சாப்பிட்டாச்சா அம்மா...?'' என்று கேட்டான். ''எப்பவோ சாப்பிட்டாச்சு...'' என்றாள் மீனாட்சி. சாப்பிடும்போதே அப்பாவிடம் பேசிவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால், சம்பந்தம் தார்சாவிலேயே உட்கார்ந்து விட்டார். அன்றைய தினமணியைப் படித்துக் கொண்டிருந்தார். படிக்க உட்கார்ந்தால் அவருக்கு ஊர், உலகமே மறந்துவிடும். மீனாட்சியிடம் மனோகரியின் பிரச்னையைப் பற்றிப் பேசத் தோன்றவில்லை. அம்மாவுக்குத் தானாகத் தெரிந்தால் தெரியட்டும் என்று நினைத்தான். மீனாட்சி பிரியத்தோடு மகனுக்குத் தோசை வார்த்துப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளைப் பொறுத்தவரை எல்லோரும் திருப்தியாகச் சாப்பிட வேண்டும். ருசியாகச் சமைத்துப் போட வேண்டும். மத்தியானமும், ராத்திரியும் சீரியல்கள் பார்க்க வேண்டும். நல்ல நாட்களில் கோயிலுக்குப் போக வேண்டும். அவ்வளவுதான். நெல்லையப்பரும், காந்திமதியும் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார்கள்.

மனோகர், மூன்று தோசையுடன் எழுந்து விட்டான். மத்தியானச் சாப்பாடு அவனுக்கு வீட்டிலிருந்து ஆஃபீஸுக்கே வந்துவிடும். ஹேண்ட்பேக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். வெளியே வரும்போது அப்பாவைப் பார்த்தான். ஆஃபீஸ் முடிந்து வந்த பிறகு பேசிக் கொள்ளலாம் என்று வேகமாக வீட்டு நடையை விட்டு இறங்கினான்.

இனிமேல் கணவனுடன் பைக்கில் ஏறிச் செல்வதில்லை என்பதில் மனோகரி உறுதியாக இருந்தாள். கணவன் மனைவிக்கிடையே ஏதோ தகராறு என்பதை கிருஷ்ணபாரதியின் பெற்றோர்களும், ஏன்

வருணும் கார்த்திகாவும் கூட உணர்ந்தே இருந்தனர். வருண், 'நானும் ஸ்கூலுக்குப் போவேன்' என்று கையில் கட்டுடன் புறப்பட்டு விட்டான். வழக்கமாக வரும் ரிக்ஷாவிலேயே அவனைப் பத்திரமாக ஏற்றினாள் மனோகரி. ரிக்ஷாக்காரரிடம் அவனை வகுப்பில் கொண்டு உட்கார வைக்குமாறு கூறினாள். அதேபோல், மாலை வகுப்பிலிருந்து பையை எடுத்துக் கொண்டு அழைத்து வருமாறும் கூறினாள். கார்த்திகா, "நான் பாத்துக்கிறேன் அம்மா" என்று சொன்னாள். கிருஷ்ணபாரதி உள்பட சண்முகத்துக்கும், பாப்பம்மாளுக்கும் கூட அவன் பள்ளிக்கூடம் செல்வதில் இஷ்டமே இல்லை. கட்டு அவிழ்த்தபின் சென்றால் போதும் என்பது அவர்கள் எண்ணம்.

கிருஷ்ணபாரதி, வீட்டு வாசலில் நின்றே வருணும், கார்த்திகாவும் ரிக்ஷாவில் ஏறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். தாத்தாவும், ஆச்சியும் தெருவில் இறங்கி பிள்ளைகளை மனோகரியுடன் வழியனுப்பி வைத்தனர். அவனைத் தாண்டி வீட்டினுள் செல்லும் போது, யாரோ நிற்பது போல் தலையைக் குனிந்துகொண்டே உள்ளே சென்று விட்டாள் மனோகரி. கிருஷ்ணபாரதிக்கு எரிச்சலாக இருந்தது. என்னதான் இவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். தெருப் பொறுக்கி என்று நினைக்கிறாளா இல்லை பெண் பித்தன் என்று நினைக்கிறாளா? ஆஃபீஸுக்கு நேரமாகி விட்டது.

சண்முகம் குளிக்கச் சென்றார். பாப்பம்மாள் கிச்சனை ஒழிப்பதற்காகச் சென்றாள். காப்பி, சாப்பாடு எல்லாம் மௌனமாகவே நடந்தன. அவனுடன் பேசுவதை அறவே நிறுத்தி விட்டாள் மனோகரி. தன்னுடன் வழக்கம் போல் பைக்கில் வருவாள் என்று தோன்றவில்லை. இருந்தாலும் கேட்போமே என்று, "மனோ, வர்றீயா?" என்றான். அவளிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. திரும்பவும் கூப்பிட்டான். தன்னுடைய ஹேண்ட் பேக்கையும், டிஃபன் பாக்ஸ் பையையும் தூக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தவள், "இனிமேல் நான் உங்களோடு வரலை. எனக்குப் போய்க்கிடத் தெரியும்" என்று சொல்லிவிட்டு, பாப்பம்மாளிடம், "அத்தை நான் வர்றேன்" என்று சொன்னாள். பாப்பம்மாள், "ஏம்மா, அவனோட போகிறதுதானே?" என்று கேட்டாள். "நீங்க ஒண்ணும் சிபாரிசு பண்ண வேண்டாம்..." என்று சொல்லிவிட்டு வேகமாகப் படியிறங்கினாள்.

கிருஷ்ணபாரதியும், பாப்பம்மாளும் அவள் தெருவில் இறங்குவதையே பார்த்துக் கொண்டு நின்றனர். "இவளுக்கு என்னடா ஆச்சு?" என்று அவனிடம் கேட்டாள்.

"வேற ஒண்ணுமில்லையம்மா. இந்தச் சுசீலா வீட்டுக்கு வந்து போறது அவளுக்குப் பிடிக்கலை" என்றான்

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வின் தேர்ச்சி விகிதத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளது விருதுநகர் மாவட்டம்.

- விருதை ராஜா



25 வருஷமா முதலிடம்

கிருஷ்ணபாரதி.

‘‘அதான் கேக்கறேன்... ஏன் பிடிக்கலை?’’

‘‘யாருக்குத் தெரியும்...’’ என்று சுருக்கமாக முடித்துக்கொண்டான்.

‘‘எத்தனை நாளைக்கிடா இப்படிக் கீரும் பூரும்னுட்டு இருப்பீங்க...? பிள்ளைகள் மனசு என்ன பாடுபடும்?’’ என்றாள். எதுவும் பேசாமல் அவனும் ஆஃபீஸுக்குப் புறப்பட்டான். காம்பவுண்ட் சுவரோரத்தில் நின்றிருந்த பைக்கை எடுத்து வெளியே கொண்டு போனான். பாப்பம்மாள் சிறிது நேரம் நின்று கொண்டிருந்து விட்டு, ‘‘என்ன சண்டையோ’’ என்று முணுமுணுத்துக் கொண்டே வராந்தா கதவைத் தாழ்ப்பாள் போட்டாள். வழியில் மனோகரி போய்க் கொண்டிருக்கிறாளா என்று பார்த்துக் கொண்டே பைக்கைச் சிறிது தூரம் மெதுவாக ஓட்டினான். மனோகரியைக் காணவில்லை. ஆட்டோவில் ஏறிச் சென்று விட்டாள் போல. இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் பெண்களைப் பற்றி பெண் விடுதலை பற்றிப் பேசுகிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்று யோசித்தான். வழக்கத்தைவிட ஐந்து நிமிடம் முன்னதாகவே அலுவலகத்துக்கு வந்து விட்டான் கிருஷ்ணபாரதி.



கேண்டீனில் போய் ஒரு காப்பி சாப்பிடலாம் போலிருந்தது. காப்பியை வாங்கிக் கொண்டு தனியே இருந்த டேபிளில் உட்காரப் போனவனை ‘‘பாரதி... பாரதி...’’ என்ற அழைப்பு நிறுத்தியது. இடதுபக்கம் நியூஸ் செக்ஷன் ராகவனும், பார்த்தாவும் உட்கார்ந்திருந்தனர் அவன் திரும்பிப் பார்த்ததும் இரண்டு பேரும் கைகளை அசைத்து அவனைக் கூப்பிட்டனர். காப்பி டபராவுடன் ராகவனருகே உட்கார்ந்து கொண்டான். ராகவன், கிருஷ்ணபாரதியின் முதுகில் தட்டினான்.

‘‘என்னப்பா ஆளையே பார்க்க முடியலே?’’ என்றான் ராகவன்.

“இனிமேல் நான் உங்கக்கூட வரலை

‘‘பாவம், அவனுக்கு ஏகப்பட்ட பிரச்னைகள்...’’ என்றான் பார்த்தா. கிருஷ்ணபாரதி சிரித்தான்.

‘‘பிரச்னையா? என்ன?’’ என்று கேட்டான் ராகவன்.

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்லே...’’ என்றான் கிருஷ்ணபாரதி.

‘‘சும்மா சொல்லு... ஆஃபீஸ்லே ஏதாவது ப்ராப்ளமா...?’’ என்று அவன் தோளைத் தொட்டுக் கேட்டான் ராகவன். அவன் யூனியன் செக்ரட்டரி. எங்கிருந்தோ சாம்பார் வாசனை வீசியது. ஏதோ பின்னணி இசை மாதிரி பேச்சுச் சாம்பல்கள் கேட்டுக் கொண்டிருந்தது. கிருஷ்ணபாரதி காப்பியை மெதுவாக உறிஞ்சிக் குடிக்க ஆரம்பித்தான். ராகவனும் பார்த்தாவும் காப்பி சாப்பிட்டு

முடித்திருந்தனர்.

''அவன் வொய்ஃப்புக்கும் இவனுக்கும் ஏதோ மனத்தாங்கல்...'' என்றான் பார்த்தா.

''அப்படியா? என்னடா விஷயம்?''

''எல்லாம் ஆக்குபேஷனல் ஹஸார்ட்ஸ் தான்...'' என்றான் பார்த்தா.

''வேலையிலே என்னடா சங்கடம்? ஏதாவது இருந்தா சொல்லு... சரிபண்ணிடலாம்...'' என்றான் ராகவன்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேடா...'' என்றவன், பார்த்தாவைப் பார்த்து, ''ஏண்டா சும்மா இரியேன்டா...'' என்றான்.

எனக்குப் போய்க்கிடத் தெரியும்."



''டேய் வேலை விஷயமா இவன் மத்த பெண்களோட பழகுறது இவனோட வொய்ஃப்புக்குப் புடிக்கலே. சுசிலான்னு ஒரு பொண்ணு நம்ம ஸண்டே எடிஷன்லே கூட கான்ட்ரிபியூட் எல்லாம் பண்றா. அவ இவன் இருக்கிற ஏரியாவிலேயே இருக்கிறா. அடிக்கடி வீட்டுக்கு வர்றா... அதுதான் இவன் வொய்ஃப்புக்குப் பிடிக்கலே...''

''ஸில்லி மேட்டர்டா... அவளைக் கட் பண்ணிடு... இதுக்கா போட்டு அவஸ்தைப்படறே?''

''நானும் இதைத்தான் சொல்றேன்..''

''நான் பார்த்துக்கிறேன்டா...'' என்றான் கிருஷ்ணபாரதி.

''இவன் தேவையில்லாமே ப்ரஸ்டீஜ் எல்லாம் பாக்கறான். மனிதாபிமானம் எல்லாம் பார்க்கிறான்டா ராகவா...'' என்றார் பார்த்தா.

''இதிலே என்னடா மனிதாபிமானம் மங்காணி எல்லாம்..? சரிப்பட்டு வரலைன்னா கட் பண்ணி விடறதுலே என்ன தப்பு...? இல்லே உனக்கு அவ பேர்ல ஏதாவது அபெக்ஷன் அது இது இருக்கா...? யார் யாரோ பத்திரிகை மேட்டர் தர்றாங்க... அந்த மாதிரித்தானே அவளும்...?'' என்றான் ராகவன்.

''இவனாலே அந்தச் சுசீலா விஷயத்திலே அந்த மாதிரி நடந்துக்க முடியலே. அவ ஃபேமிலி ப்ரண்டாவும் இருக்கா...'' என்றான் பார்த்தா.

''டேய் வீணா அலட்டிக்காதேடா... அவகிட்டே நேரடியாச் சொல்லிடு.. உன்னாலே முடியலைன்னா, என்கிட்டே சொல்லு... நான் பாலிஸ்டாச் சொல்லிக் கட் பண்ணி விட்டுடறேன்...'' என்றான் ராகவன்.

தன்னுடைய அந்தரங்கத்தை அவர்கள் அலசுவது கிருஷ்ணபாரதிக்குக் கூச்சமாக இருந்தது. காலையில் அம்மா கேட்டது கூட அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அடுத்தவர்களுடைய அந்தரங்கத்தை விரிவாகப் பேசுவதில் அம்மா உள்பட எல்லோருமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். இது அவனுக்குச் செய்கிற உதவியா அல்லது மனத்தின் வக்கிரமா என்று புரியவில்லை. அம்மாவுக்கு நிச்சயம் வக்கிரமிருக்க முடியாது. பார்த்தாவும், ராகவனும் கூட அவன் பேரிலுள்ள அக்கறையில்தான் பேசுகிறார்கள். என்றாலும் இதில் சிறிதளவு மனித மனத்தின் வக்கிரமும் கலந்தே இருக்கிறது என்று தோன்றியது.

''சரிடா...'' என்று பொதுவாகச் சொன்னான் கிருஷ்ணபாரதி.

''அப்படிச் சொல்லு...'' என்று அவன் தொடையில் தட்டினான் ராகவன். பார்த்தாவும் சிரித்தான்.

(தொடரும்)

பொம்மைகளின் டீச்சர்!

குழந்தைகளைச்
சமாதானம் செய்திட
பொம்மைகளிடம்
சண்டைபோட
வேண்டியிருக்கிறது!

— வீ.சிவசங்கர்

வெட்டப்படாத
மூங்கில்களில்
வாழ்ந்துகொண்டிருக்கிறது
இன்னும்
வாசிக்கப்படாத
இசை

— வே.விநாயகமூர்த்தி

தகிக்கும்
தார்சாலையில்
விழுந்துகிடந்த
குழந்தையின்
ஒற்றைச் செருப்பை
தாண்டிச்செல்ல மனமில்லை
தண்ணீரில்
மிதக்கவிட்டு வந்ததேன்

— காயாதவன்

ஓர் அடிகூட
விழவில்லை
சிறுமி பாடம்
சொல்லிக்கொடுக்கும்
பொம்மைக்கு

— ஜா.பிராங்க்ளின் குமார்

திரையில்
தனியே விளையாடும்
குழந்தையை
ஏக்கத்துடன் பார்க்கிறது
ஷோகேஸில் சிறைப்பட்ட
பொம்மை

— எஸ்.செல்வசுந்தரி

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு

முகிலினங்களைக்
குடைந்தாற்போல்
பறக்கும்படிக்கு
வண்ணம் தீட்டி முடித்த
வானூர்தியை
அணைத்தபடி
துயில்கிற குழந்தையின்
கனவு
சற்றேறக்குறைய
பத்திலிருந்து
பதினைந்தாயிரம் அடி
உயரமாகவும் இருக்கலாம்


– கமலி




…றிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

"ஆகட்டும் பார்க்கலாம்ன்னேன்!"










45, சுலோச்சனா நாடார் தெரு, விருதுநகர் - இந்த முகவரியில் பிறந்த பெருந்தலைவர் காமராஜர்தான் இன்றைக்கும் தமிழக காங்கிரஸின் அரசியல் முகவரி. விருதுநகரின் மையத்திலிருக்கும் தெப்பக் குளத்தின் மேற்குபுறம் செல்லும் குறுகலான சந்தில், மூன்று திருப்பங்களுக்குப் பிறகு தென்படுவதுதான் சுலோச்சனா நாடார் தெரு. இங்கே, இருக்கும் இடம் தெரியாது எளிமையாக இருக்கிறது 'காலா காந்தி,' காமராஜரைச் சிசுவாகத் தாங்கிய வீடு. பலரின் அரசியல் முகவரியைத் திருத்தி எழுதியவர் காமராஜர்.

ஆனால், 'அவர் பிறந்த வீட்டுக்


















குச் சென்று பார்த்துவிட்டு வந்தால் காலத்துக்கும் தேர்தல்ல ஜெயிக்க முடியாது' என்கிற விஷம வதந்தி பாலிடிக்ஸ் வட்டாரத்தில் பரவ ஆரம்பித்திருக்கிறது. அண்மையில் இளைஞர் காங்கிரஸ் தேர்தலுக்காக விருதுநகர் வந்த ராகுல்காந்தி, காமராஜர் வீட்டைக் கண்டுகொள்ளாமல் சென்றதும் இந்த வதந்தி செய்த விஷமம்தானாம். 'காமராஜர் ஆட்சி'யைக் கனவு காணும் காங்கிரஸார், ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லாம, வீட்டின் மீது உலவும் விஷம வதந்தியைப் போக்குவார்களா?

வாசகர் யோசனை : ஜிங்லு, விருதுநகர்











சென்னை மாகாணத்தை ஆண்டவர்

பி.எஸ்.குமாரசாமிராஜா - ராஜாஜிக்கு முன்பு சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி. இவரது பெரும் முயற்சியால்தான் தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரம் தேர்வானது. இவர், படித்ததும், தேர்தலில் ஜெயித்ததும் ஸ்ரீவில்லிப்புத்தூர்தான். இவர் வாழ்ந்த வீடு காந்தி கலை மன்றம் என்ற பெயரோடு பெரிய நூலகமாக இயங்கி வருகிறது. இவரது குருநாதர் காந்தி அரங்கசாமி ராஜாவுக்கும் இராஜபாளையத்தில் சிலை இருக்கிறது!



விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்

ராஜமரியாதை

மூக்கு பிங்க் கலர்ல இருக்கணும்; உடம்பு முழுக்க சலவைக்குப் போட்ட வேட்டி மாதிரி ப்யூர் வொயிட்டா இருக்கணும். அதே நேரத்துல கழுத்து வரைக்கும் காது மடங்கித் தொங்கணும். இவையெல்லாம் இருந்தாதான் இராஜபாளையம் நாய். நாலாயிரத்திலேர்ந்து ஆரம்பிக்கிறது நாயோட விலை. நாலாயிரமான்னு யோசிக்காதீங்க பாஸ். இது தபால் தலையில (2005-இல்) தலைகாட்டின நாய்ங்க. அதனாலதான் ராஜமரியாதை!

ஈ-டிக்கெட்டில் ஏழுமலையான் தரிசனம்!

திருப்பதி ஏழுமலையான் தரிசனத்துக்கும் தங்குமிடத்துக்கும் இராஜபாளையத்திலேயே டிக் கெட் புக் பண்ணலாம். ராம்கோ குருப்ஸ் மேற் பார்வையில் 'திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஈ தர்ஷன் பிரார்த்தனை மையம்' இந்தச் சேவை செய்து வருகிறது. தென்தமிழகத்துக்கும் தென் கேரளாவுக்கும் அதிக முன்னுரிமை கொடுத்துச் செயல்படும் இந்தச் சேவை, இந்தியாவிலே முதன் முறை தனியாருக்கு வழங்கப்பட்டது ராம்கோ குருப்ஸுக்குத்தான்!

வாசகர் யோசனை:
சைலப்பன், இராஜபாளையம்





வருஷ நாட்டு பொக்கிஷம்


வத்திராயிருப்பு தொடங்கி ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்குமான மேற்கு மலைத் தொடர்ச்சியின் பொக்கிஷம் சாம்பல் நிற அணில். பிளவக்கல் அணை அருகே அணில்களுக்கு என்றே தனிச் சரணாலயம் இருக்கிறது. இந்த வகை அணில்கள் உலகத்தில் வேறெங்கும் கிடையாது! அருகிலிருக்கும் வருஷநாட்டு காடுகளின் தட்ப வெப்பத்தால்தான் இவ்வகை அணில்கள் உருவாயின என்கிறார்கள் உயிரியலாளர்கள்.

ஃபாரின் போகும் சப்பட்டை

சேலத்துக்கு மல்கோவா என்றால், இராஜபாளையத்துக்கு சப்பட்டை. பெயர்தான் சப்பட்டை. ஆனால் பார்ப்பதற்கு சீமான்கள் வீட்டு பிள்ளைகள் மாதிரி கொழுகொழுன்னு இருக்குது இந்த மாம்பழம். சீஸன் டைம்ல கிலோ பத்து ரூபாய்க்குக் கூட விற்கிறது. இராஜபாளையம் சுற்றுவட்டாரத்தில் மட்டும் 3 லட்சங் களுக்கு மேல் மாமரங்கள் இருக்குமாம். துபாய், மலேசியா, இந்தோனேஷியாவில் சப்பட்டைக்கு சரியான கிராக்கியாம்.



வருஷத்துக்கு நானூறு கோடி



ராஜஸ்தானில் ஒருவருக்குக் காயம்பட்டால் கட்டுப் போட இராஜபாளையத்தில் இருந்து போகுது சர்ஜிக்கல் காட்டன் துணி. இந்தியாவின் சர்ஜிக்கல் காட்டன் துணிகள் தேவையில் தொண்ணூறு சதவிகிதத்தைப் பூர்த்தி செய்கிறது இராஜபாளையம். கிட்டத்தட்ட எண்பத்தைந்து காட்டன் மில்களிலிருந்து 2000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உழைப்பால், வருஷத்துக்கு நானூறு கோடி ரூபாய் அன்னிய செலாவணியை ஈட்டித் தருகிறது சர்ஜிக்கல் காட்டன்.

சீனாவில் திண்டாடும் கூகிள்!

மருதன்



கிட்டத்தட்ட முழு உலகையும் தன் உள்ளங்கைக்குள் கொண்டு வந்து விட்ட கூகிளால் சீனாவில் மட்டும் நிரந்தரமாகக் கால் பதிக்க முடியவில்லை.

கூகிள் தன் கிளையை சீனாவில் தொடங்கியபோது (கூகிள்சீனா), அதற்கு பல்லாயிரக்கணக்கான கனவுகள் இருந்தன. 1.30 பில்லியன் மக்கள்தொகை கொண்ட சீனா சந்தேகமேயில்லாமல் உலகின் மிகப் பெரிய சந்தை. இங்கே எப்படியாவது வேர் விட்டு தழைக்க முடிந்துவிட்டால், நிறுவனத்தின் லாபம் பன்மடங்கு கூடிவிடும்.

கூகிள் மட்டுமல்ல, யாஹூ, மைக்ரோசாஃப்ட் போன்ற இணைய, மென்பொருள் நிறுவனங்கள் சீனாவை ஒரு வளமான சந்தையாகக் கண்டதில் வியப்பேதுமில்லை. சீனாவில் நுழைவது என்பது சொர்க்கத்துக்குள் நுழைவதற்குச் சமம்.

ஹூ ஜிண்டாவ் தலைமையில் சீனாவில் குரங்கேறிக் கொண்டிருந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் கூகிளுக்கு வாகான ஒரு தளத்தை அமைத்துக் கொடுத்தது. மாவோவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த டெங்ஜியோபிங் கதவுகளை அகலமாகத் திறந்து வைத்தார். அந்நிய முதலீடுகளைச் சீனா மகிழ்ச்சியுடன் வரவேற்றது. டெங் வழியில் ஜியாங் ஜெமின். ஜியாங்கின் வழியில் ஹூ.

ஆனால், பிற நிறுவனங்களை அனுமதித்ததுபோல் கூகிளை அனுமதிப்பதில் சீனாவுக்கு சில சிக்கல்கள் இருந்தன. சில முக்கிய விவகாரங்களில் சீனா மூடிய கதவுகளுக்குப் பின்னால்தான் செயல்படுகிறது. கூகிளுக்குத் தேவைப்படுவது கட்டற்ற சுதந்திரம்.

விளைவு? கூகிள் விட்டுக் கொடுத்தது. பிற நாடுகளில் இயங்குவதைப் போல் சீனாவில் இயங்க முடியாது. தவறினால் உரிமம் ரத்து. சூரியனுக்குக் கீழ் உள்ள அனைத்து விஷயங்களைப் பற்றிய செய்திகளையும் கூகிளால் திரட்டி அளிக்க முடியும். என்றாலும் சீனாவில் மட்டும் சில குறிப்பிட்ட விஷயங்களை அவர்கள் அளிக்கக் கூடாது.

உதாரணத்துக்கு, ஃபலூன் காங். (மதப் பிரசங்கம்

வேணும்

கூடாது). தலாய் லாமா (நாட்டை உடைக்கும் சக்திகள் தேவையில்லை). திபெத், ஹாங்காங், தாய்வான் (சென்சிடிவ்வான அரசியல் விவாதங்கள் வேண்டாம்). மனித உரிமைகள் (மேற்கத்திய பாணி சித்தாந்தங்கள் வேண்டாம்). இப்படியாக நீள்கிறது பட்டியல். இந்தப் பட்டியலில் இடம் பெறும் விஷயங்களை சீனர்கள் தேடினாலும் அதை கூகிள் அளிக்கக் கூடாது. இது தான் ஏற்பாடு. சரி என்று தொடக்கத்தில் ஒப்புக் கொண்டது கூகிள்.


ஆனால், ஒரு கட்டத்தில் வெளிப்படையாகப் புலம்பவும் ஆரம்பித்தார்கள்.

கூகிளின் வைஸ் பிரஸிடெண்ட், தன் வலைப்பதிவில் ஒரு நீண்ட எதிர்வினை புரிந்தார். 'தணிக்கை மட்டுமல்ல எங்கள் பிரச்னை. சீன அரசு குறிப்பிட்ட சிலரது மெயில்களை ரகசியமாகப் பிரதி எடுக்கிறது. அரசியல் காரணங்களுக்காக இவ்வாறு அத்துமீறி செயல்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.'

சீன அரசு கூகிள் மீது குற்றச்சாட்டைப் பதிவு செய்தது. எங்கள் நாட்டில் இருந்து இவர்கள் ரகசியமாக தகவல்கள் கடத்துவதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். நாங்கள் கொடுத்த வரையறையை மீறி தேவையற்ற செய்திகளை இவர்கள் சீனர்களுக்கு வழங்குகிறார்கள்.

மொத்தத்தில், கூகிளுக்கு சீனா மீது அதிருப்தி. சீனாவுக்கு, கூகிள் மீது. பிரச்னை என்னவென்றால், கூகிளுக்குச் சீனா தேவைப்படுகிறது. சீனாவுக்கு, கூகிள். காரணம், பொதுவானது. வர்த்தகம். லாபம். பொருளாதாரம். சீனாவுக்கு, கூகிளின் சுதந்திரம் வேண்டாம், ஆனால் அது தரும் லாபம் வேண்டும். கூகிளுக்கு, சீனாவின் சந்தை வளம் வேண்டும், ஆனால் கிடுக்குப்பிடி கூடாது.

இருவரும் போட்டுக்கொண்ட ஒப்பந்தம் 2012ம் ஆண்டு வரை உயிர்ப்புடன் இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு வருடமும் இதனைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ரொம்ப இழுத்தடித்தபிறகு, இறுதியில் சீனா ஒப்பந்தத்தை மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்திருக்கிறது. ஆனால், கருத்து சுதந்திரம்? மூச்!



ஆனா வேணாம்!

விருதுநகர் மாவட்டத்து வெயிலைப் போலவே இலக்கியவாதிகளும் மிகவும் வீரியமானவர்கள். அவர்கள் குறித்த சின்னச் சின்னத் தகவல்கள்...




* ஒரிய மொழிக் கவிஞர் பிரதீபா சத்பதியின் 'தன்மயதூளி' என்கிற புத்தகத்தை 'வசீகரிக்கும் தூசி' என்று ஆங்கில வழியாக தமிழில், சாகித்ய அகாதமிக்காக மொழிபெயர்த்திருக்கிறார் கவிஞர் மதுமிதா. ஏற்கெனவே இவர் அக்கமகாதேவியின் வசனங்களை மொழிபெயர்த்தவர்.



* இயக்குநர் பாலா, எழுத்தாளர் ஜெயமோகன் எழுத்துகளின் ரசிகர். ஆனால், அவர் இயக்கும் 'அவன் இவன்' படத்துக்கு வசனம் எழுதுகிறார் எஸ்.ராமகிருஷ்ணன். விருதுநகருக்கு ரயிலில் பயணிக்கையில் மட்டும் இவருடைய சாய்ஸ் 'அன்ரிசர்வ்டு கோச்'தானாம்.



* ஆப்பிரிக்கக் கறுப்பின எழுத்தாளர்கள் ஆலிஸ்வாக்கர், மாயா ஏஞ்சிலா... இவர்களின் கதைகளையும், தலித் எழுத்தாளர் பாமாவின் 'கிசும்புக்காரன்,', 'ஒரு தாத்தாவும் எருமையும்' என்ற சிறுகதைத் தொகுப்புகளை ஒப்பிட்டு இதுவரை ஒன்பது பேர் பி.ஹெச்.டி. ஆய்வு செய்திருக்கின்றனர்.



னுஷ்கோடியை மையமாக வைத்து தாம் எழுதி, இயக்கும் செங்கடல் படத்தில் இயக்குநராகவே நடிக்கவும் செய்திருக்கிறார் கவிஞர் லீனா மணிமேகலை. கூடவே அடுத்த கவிதைத் தொகுப்பும் ரெடி. 'பரத்தையர்களின் ராணி' - இது தொகுப்பின் பெயர்.



ர் லீனா!

வாசகர் யோசனை:
சுந்தரமகாலிங்கம், வத்திராயிருப்பு

விருதுநகர் ரைட்டர்ஸ்



* மலேசியத் தமிழ்ச் சங்கம் தம் இலக்கியக் கூட்டத்துக்கு அழைத்தும் போக மறுத்து விட்டார் மேலாண்மை பொன்னுச்சாமி. காரணம், ''மலேசியாவைப் பார்த்துவிட்டு வந்து மேலாண்மறை நாடு கிராமத்துக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்கிறார். இவர் இயற்கை விவசாயத்தை உயர்த்திப் பிடிக்கும் நாவல் ஒன்றை அடுத்த மாதம் வெளியிடுகிறார். நாவலின் பெயர் 'உயிர் நிலம்'.




* ஆண்-பெண் மனச்சிதைவுகளை உளவியல்ரீதியாக அணுகும் நாவல் ஒன்றை எழுதி முடித்துவிட்டார் கவிஞர் திலகபாமா. சென்னைப் புத்தகக் கண்காட்சிக்கு முன்பே நாவல் வெளியாகிவிடுமாம். தலைப்பு: கழுவேற்றப்பட்ட மீன்கள்.



* கவிஞர் தமிழச்சி கவிதைகளை மலையாளத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார் கவிஞர் நிர்மாலயன். நவீன நாடகவியலாளர் குமரன்வளவன் நாடகக் குழுவைக் கொண்டு ஒரு பிரெஞ்ச் நாடகத்தை, தன் சொந்த ஊரான மல்லாங்கிணற்றில் அரங்கேற்றியிருக்கிறார் தமிழச்சி.

சுருக்கு சாலை... குறுக்கே தடை!



வத்திராயிருப்புலேர்ந்து தேனிக்கு பதினைஞ்சு கிலோ மீட்டர். ஆனால் நூற்றைம்பது கிலோ மீட்டர். என்ன குழப்பமா இருக்கா ஆனால் குழப்பமே இல்லை...


பிளவக்கல் அணைக்குப் போகும் வழியில் உள்ளது, பட்டுப்பூச்சி கிராமம். அங்கிருந்து போத்தம்பாறை வழியாக மலைப் பாதை துவங்குகிறது. ஏழெட்டுக் கொண்டை ஊசி வளைவுகளோடு கடந்து சென்றால், சட்டென வந்துவிடுகிறது கொடிக்குளம் குடிசை. பட்டுப்பூச்சி, விருது நகர் மாவட்டம். கொடிக்குளம் குடிசை, தேனி மாவட்டம். இந்தச் சாலையின் மொத்த நீளம் அதிகபட்சமாக பத்து கி.மீ.! அப்படியே வருஷ நாடு வழியாக தேனி போய் விடலாம். நூறு கி.மீ. தூரம் பயண தூரம் குறையும். மணிபர்சுல பணமும் மிச்சம்.

இதுல எங்கே தடை இருக்கு?

''வனத்துறை தலைமை அலுவலகம் சென்னையில இதற்கான ஃபைல் தூங்கிட்டிருக்கு. அப்பப்ப போராட்டம் பண்ணி, தூசு தட்டிட்டு இருக்கோம். வனத்துறையினரே நேரில்ஆய்வு செய்து, முப்பது அடி அகலச் சாலைக்கு அப்ருவல் ஆகியிருக்கு. போத்தம்பாறை பகுதியில மெட்டல் ரோடு மட்டும் போட்டிருக்கு. அதோடு சரி. வேற எந்த வேலையும் துவங்கலை. இந்த மலைப் பாதை வந்துட்டா, விருதுநகர் மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல, தென் மாவட்டப் பகுதி மக்களுக்கே பயண தூரமும், நேரமும் ரொம்ப மிச்சம். தேனி, கம்பம், போடி பகுதிகளுக்கு நேரடி போக்குவரத்து வசதி வந்துடும். தூத்துக்குடியிலேர்ந்து கொச்சி துறைமுகத்துக்கு தரை வழிச் சாலை ஷார்ட் கட்டுல கிடைச்சுடும்!'' என்கிறார் வருஷ நாட்டு பாதை மீட்புப் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் மகாலிங்கம்.


✱ மகாலிங்கம்

வாசகர் யோசனை:
பொன்.பிரபாகரன், வத்திராயிருப்பு



வாவ் வாசகர்

ஜன்னலில் வந்த கல்கி

மறக்க முடியாத சம்பவம்?

"எட்டு வருஷம் (1994-2002) அருப்புக்கோட்டை Friends of Police எனப்படும் காவல்துறை நண்பர்கள் குழுவில் இயங்கினேன். 199□ல் □ருநாள் காலை பதினோரு ம□ . இந்தியன் வங்கியில் திருடர்கள் புகுந்து விட்டதாகத் தகவல் வந்தது. காவலர்கள் இருவருடன் நா□ம் சேர்ந்து அங்கு விரைந்தோம். திருடர்கள் இருவரும் காவலர்களைக் □□ தள்ளிவிட்டு வெளியே ஓடினார்கள். நான் சட்டென அவர்களைத் துரத்தினேன். பத்து □மிடம். பரபரப்பான ஓட்டம். போராட்டம். □ருவன் தப்பி விட்□டான். □ருவனை மட்டும் நான், கொத்தாகக் கட்டிப் பிடித்தேன். அதன் பின்னர், காவலர்க□ம் பொதுமக்க□ம் அங்கு குவிந்துவிட்டனர். திருடனைப் போ□□ல் □ப்படைத்தேன்!" என்கிறார் இராஜபாண்டி.

"பதினேழு வயசுலேர்ந்து நேரம் கிடைச்சப்ப எல்லாம் நூலகத்துக்குப் போக ஆரம்பிச்சேன். அப்பத்தான் கல்கி முதன் முதலா எனக்கு வாசிக்க கிடைச்சது. எங்க ஊர் கிளை நூலகம், எனக்கு போதி மரம். நெறைய புத்தகங்களை எடுத்துப் படிச்சேன். இப்பவும் எடுத்துப் படிச்சிட்டு இருக்கேன். எனக்கான வெளியுலக ஜன்னல், இந்தக் கிளை நூலகம்!" என்கிறார் துறுதுறு இளைஞர் அருப்புக்கோட்டை இராஜபாண்டி.

அம்மா பத்ரகாளி, ஓய்வுபெற்ற அரசு அலுவலர். மனைவி அனிதா தேவி. ஐந்து வயதில் மகன் ரோஹித். இதுவே இராஜபாண்டி குடும்பம்.


2004ல், இராஜபாண்டி எழுதிய துணுக்கு கல்கியில வந்தது. "இரண்டு மூன்று கல்கி புத்தகம் வாங்கி, சைக்கிள் கேரியரில் வெச்சுக்கிட்டு, அந்த வாரம் பூரா ஊர் முழுவதும் எதிர்ப்பட்ட எல்லார்கிட்டேயும் காமிச்சிருக்கார். அந்த சந்தோஷத்துக்கு ஈடுவேறு ஏதுமில்லை" என்கிறார்.

விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்

மாவட்டத் தந்தையே..!

அரசியல்வாதிகள் பிறந்த தின விழா கொண்டாடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், கலெக்டர் கலக்குவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சமீபத்தில் வேலூர் மாவட்ட கலெக்டர் ராஜேந்திரன் பிறந்த நாள் தடபுடலாகக் கொண்டாடப்பட்டது. அவரை வாழ்த்தி 'மாவட்டத் தந்தையே வாழ்க' என்று விளம்பரங்கள், அன்னதானம் என்று ஏக அமர்க்களம். இவர் தி.மு.க.பிரமுகர் தமிழச்சி தங்கபாண்டியனின் மைத்துனர்.

அழகிரி மகன் துரை தயாநிதி, நண்பருடன் சேர்ந்து துவங்கிய 'ஜாக் கம்யூனிகேஷன்ஸ்' என்ற கேபிள் தொலைக்காட்சி நிறுவனம் சென்னையில் தடம் பதிக்கப் போராடி வருகிறது. இதற்குக் காரணம் சன் தொலைக்காட்சி உட்பட பல



சான்ஸே இல்லை!

சமீபத்தில் கேப்டன், காங்கிரஸுக்குத் தூதுவிட்டார். 'ஐம்பது சதவிகித இடங்கள்; என்னை சி.எம். வேட்பாளர்' என்று அறிவிக்க வேண்டும். இதுதான் கண்டிஷன். ஓ.கே. என்றால் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணிக்கு ரெடி. 'சான்ஸ்ஸே இல்லை' என்று சொல்லிவிட்டது காங்கிரஸ்.

ஆபாசம் நோ!

சமீபத்தில் நடிகர் எஸ்.எஸ்.சந்திரன் அ.இ.அ.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். நன்றி சொல்வதற்காகச் சென்ற அவரிடம் ஜெயலலிதா, ''இதுவரை மேடையில் (ஆபாசமாகப்) பேசியது போதும். இனி பொறுப்புடன், எல்லை மீறாமல் பேசுங்கள்'' என்று கண்டிப்பான குரலில் சொல்லி விட்டாராம்.





தொலைக்காட்சிகள் 'டி கோடர்' என்ற வசதியை இந்த நிறுவனத்துக்குக் கொடுக்கத் தயங்குவதுதான். இது இருந்தால் சாட்டிலைட் மூலம் நிகழ்ச்சியை வழங்க முடியும். இந்த நிலையில் சென்னையில் பல ஏரியாக்களில் எஸ்.சி.வி.யின் கேபிள்கள் மாநகராட்சியால் வெட்டி எறியப்படுவதாகச் சொல்லப்படுகிறது.


தள்ளாடும் தயாநிதி

வலைக்குள் எம்.எல்.ஏ.!

சமீபத்தில் பா.ம.க.வில் அமைப்புத் தேர்தல் நடந்தது. இதில் பொறுப்பு கிடைக்காதவர்கள் அதிருப்தி ஒரு பக்கம் இருக்க, இரண்டுங்கெட்டான் நிலையில் கட்சி இருப்பதால், சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சி வலையில் சிக்கி விட்டதாக தகவல்.



தடுமாறும் தலைமை!



தி.மு.க.வில் இரண்டு விதமான கருத்தோட்டங்கள். அதிரடியாக மூன்று நான்கு மாதங்களில் தேர்தல் நடத்துவது; அல்லது குறிப்பிட்ட காலமான அடுத்த வருடம் மே மாதம் நடத்துவது. ஐந்து வருடத்துக்கு ஒருமுறை மக்கள் ஆட்சியை மாற்றும் வழக்கத்தைக் கொண்டுள்ளபடியால் எதற்காக முன்கூட்டியே தேர்தல் நடத்தி ரிஸ்க் எடுக்க வேண்டும் என்கிறது ஒரு தரப்பு. அடுத்த மே மாதம் என்றால் ஏறும் விலைவாசி, குடும்ப அரசியல் மற்றும் வேறு பல காரணங்களால் ஆட்சிக்கு எதிராக மக்கள் கருத்து உச்சிக்குப் போகுமே என்று கவலைப்படுகிறது மற்றொரு தரப்பு. இரண்டுக்கும் நடுவில் தடுமாறுது தலைமை.

- சஞ்சயன்

பிரார்த்தனைகளின் சங்கமம்!



சற்றே சரிவாக வழுக்கும் ஈரக் களி மண்ணாகயிருக்கும் அந்தப் பாதையில் மிக கவனமாக நடத்தி நதியின் கரையிலிருக்கும் படகுக்கு அழைத்துச் செல்கிறார் அந்த முதியவர். செம்மண் நிறத்தில் ஓர் ஏரியைப் போல் சலனமில்லாமல் அமைதியாகயிருக்கிறது கங்கை. படகு மெல்லச் செல்கிறது. பத்து நிமிடப் பயணத்தில் சட்டென்று நதியின் நிறம் மாறுகிறது. அதன் வேகத்தை படகிலிருக்கும் நம்மால் உணரமுடிகிறது. இங்குதான் யமுனை கங்கா மாதாவுடன் சேருகிறாள். கண்ணுக்குத் தெரியாமல் சரஸ்வதி நதி இணையும் சங்கமத்துக்கு இன்னும் போக வேண்டும் என்கிறார் படகுக்காரர். வெளிர் நீல நீர்ப்பரப்பில் அருகே செல்லும், சற்றே பெரிய படகுகளும் அதைத் தொட்டுச் சிற கடித்து பறக்கும் வெள்ளைப் பறவைகளும் அந்தக் காலைப்பொழுதை ரம்மியமாக்குகின்றன.

அருகில் போனபின்தான் தெரிகிறது அந்த இடம் திரிவேணி சங்கமம். கங்கையும், யமுனையும், கண்ணுக்குத் தெரியாத சரஸ்வதியும் ஒன்றாக இணைந்து சங்கமிக்கும் உன்னதமான இடம். இந்த இடத்தில் நீராடுவதும் வழிபடுவதும் மிக புண்ணியம் என இந்தியாவின் எல்லாப் பகுதிகளிருக்கும் இந்துக்களாலும் போற்றப்படும் இடம். அறுபது அடி ஆழமிருக்கும். அந்த நடு ஆற்றில் எப்படி நீராட முடியும் எனத் திகைத்துக் கொண்டிருக்கும் நாம் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்து அசந்துபோனோம். சங்கமம் என அடையாளம் காணப்பட்டிருக்கும் அரை கிலோ மீட்டர் பகுதியில் பல பெரிய படகுகள் நங்கூரமிடப்பட்டிருக்கின்றன. அவை ஜோடிகளாக இரண்டுக்கும் இடையில் ஆறு அடி இடைவெளி இருக்கும் வகையில் இரண்டு மூங்கில்களால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடைவெளியில் நாலு பக்கமும் பிடித்துக் கொள்ள வசதியான ஃபிரேமுடன் ஒரு சதுர மேடை தொங்குகிறது. கவிழ்த்துப் போடப்பட்ட மேஜை போன்ற தொட்டி. நதியின் உள்ளே மூழ்கியிருக்கும் இதை இணைக்கும் நீண்ட நைலான் கயிறுகளை

படகிலிருக்கும் உதவியாளர்கள் இயக்க நதியில் மிதக்கும் அந்தக் குளிக்கும் மேடையில் இறங்கி நாம் நீருக்குள் முழுகுகிறோம். முதல் முழுகலில் பயம் தெளிந்து அமைப்பின் பாதுகாப்பு புரிந்திருப்பதால், பலமுறை ஆனந்தமாக மூழ்கித் திளைக்கிறோம். குளிக்கும்போது உள்ளே யமுனை நதி நீர் மேல்பரப்பு செல்லும் திசைக்குக் குறுக்காகப் பாய்ந்து செல்வதை உடல் நமக்குச் சொல்லுகிறது. வெளியே ஒரு படகில் பளபளக்கும் பித்தளைத் தட்டில் சாமந்திப் பூக்களுடனும், பூஜை சாமான்களுடனும் காத்திருக்கும் பண்டா ஈர உடைகளுடனேயே பிரார்த்தனை செய்ய அழைக்கிறார். பக்கத்துப் படகுகளில் அணிந்திருக்கும் சுசரி உடையின் மீதே பூணூலும், மாலையை அணிந்த மஹாராஷ்டிரர், கைநிறைய வளையல்கள் அணிந்த ராஜஸ்தான் பெண்கள், பஞ்சகச்ச வேட்டியில் கையில் ஸ்படிக மாலையுடன் தென்னிந்தியர் என பலபேர். அந்த இடமே பிரார்த்தனைகளின் சங்கமமாகயிருக்கிறது. மற்றொரு படகில் பக்கங்களும் மேற்கூரையும் பிளாஸ்டிக் துணியால் மூடப்பட்ட டிரெஸ்ஸிங் ரூம். கண்ணாடி கூட வைத்திருக்கிறார்கள். அந்தப் படகின் நடுவில் குஷன்கள் இடப்பட்ட பெஞ்ச் நாற்காலியில் தலைப்பாகை அணிந்து கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறார் படகின் சொந்தக்காரர். அவரது ஆசனத்தின் பின் நிற்கும் கம்பத்தில்தான் கொடி பறக்கிறது. இதுபோல பல படகுகள். பல வண்ணக் கொடிகள். கரையிலிருந்து நம்மை அழைத்து வரும் சின்னப் படகுகாரர்களுக்கு அவர்களின் குரூப் அடையாளம் தெரிவதற்காக இந்தக் கொடிகளாம். வருபவர்களுக்கு நல்ல வசதிகள் செய்து தரும் இந்தப் படகுக்காரர்கள் ஓடும் நதியில் பகுதிகளைப் பிரித்துப் பங்கிட்டு உரிமை கொண்டாடி சம்பாதிக்கும் சாமர்த்திய சாலிகள். நீராடித் திரும்பும்போது பின் காலைப் பொழுதாகிவிட்டதால், யமுனைநதி நீரின் உயரமும் வேகமும் அதிகரித்திருப்பதால் படகு சீக்கிரமாக கரையைத் தொடுகிறது.





மொகலாய கட்டிடக் கலையின் மிச்சங்களை ஆங்காங்கே அடையாளம் காட்டும் அலகாபாத் இந்தியாவின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று. பெரிய பல்கலைக்கழகம், மாநில தலைநகருக்கு வெளியே துவக்கப்பட்ட ஹைகோர்ட் என பல கௌரவங்களைப் பெற்றிருந்தாலும், நகரம் என்னவோ களையிழந்துதான் காணப்படுகிறது. பளபளக்கும்

ரமணன்

வண்ணத்துணியில் பூ வேலைகளுடன் சைக்கிள் ரிக்ஷாக்கள்களை ஓட்டும் சட்டையணியாத ரிக்ஷாக்காரர்கள், மேற்கூரையில் பயணிகளுடன் மினிபஸ் போன்ற வினோதங்களை ரசித்த வண்ணம் விசாரித்து வழியறிந்து நாம் செல்லுமிடம் ஆனந்த பவன்.

பரந்த பசும்புல்வெளியின் மறுகோடியில் வெளிர் மஞ்சள் நிறத்தில் நிற்கும் கம்பீரமான இந்த இரண்டு அடுக்கு மாளிகையில்தான், மூன்று தலைமுறையாக நேரு குடும்பத்தினர்



வாழ்ந்திருக்கின்றனர். இந்திரா காந்தி இதை அரசுக்கு நன்கொடையாகத் தந்து அருங்காட்சியகமாக்கியிருக்கிறார். அண்ணல் காந்தியடிகள் பலமுறை வந்து தங்கிய இந்த மாளிகையின் அறைகளை அந்தக் கால கட்டத்திலிருந்தது போல், பயன்படுத்திய பொருட்களுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அறைகளைப் பார்க்கிறோம். மாடியில் நேருவின் படுக்கை அறையில் அலமாரியிலிருக்கும் புத்தகங்களின் முதுகில் அச்சிடப்பட்டிருக்கும் பெயர்களைக்கூட படிக்க முடிகிறது. எழுதும் மேசையிலிருக்கும் பார்க்கர் பேனாவும், வெளிநாட்டுத் தயாரிப்பான சின்ன சூட்கேஸும் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இந்திராவின் எளிமையான அறை, அண்ணல் காந்தியடிகள் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டத்தை நடத்திய இடம், எல்லாவற்றையும் பார்த்தபின் கீழே வரும் நம்மைக் கவர்வது கீழ்த் தளத்தின் வராண்டாவில், 'இந்திராவின் திருமணம் நடைபெற்ற இடம்' என்ற அறிவிப்புடனிருக்கும் ஒரு சின்ன மேடை. திருமணம், மிக எளிமையாக நடைபெற்றிருக்கிறது என்பதைக் கண்காட்சியிலுள்ள படம் சொல்லுகிறது.

அல்லி தடாகம், அழகான பூச்செடிகள், அருமையாகப் பராமரிக்கப்படும் புல்வெளி என்ற அந்தச் சூழலை ரசித்தவண்ணம் வெளியே வரும் நம் கண்ணில் படுவது, முகப்பில் காவி வண்ணத்தில் நிற்கும் ஒரு பெரிய பாறையும், அதில் நேர்த்தியாக




பொருத்தப்பட்டிருக்கும் பட்டயமும் தான். பட்டயத்தில் "செங்கலாலும், சுண்ணாம்பாலும் எழுப்பப்பட்ட வெறும் கட்டிடம் மட்டுமில்லை இது. தேசத்தின் சுதந்திரப் போராட்டத்துடன் மிக நெருங்கிய உறவு கொண்டது. இதன் சுவர்களுக்கிடையே மிக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மிகப் பெரிய நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கின்றன" என்ற பித்தளை எழுத்துகள் மின்னுகின்றன. ●



IDHAYAM போடும் கணக்கு!

''இதயம் நல்லெண்ணெய் நிறுவனத்துக்கு ஆயில் புல்லிங் ஐடியா கொடுத்தது விருது நகர் இயற்கை நலவாழ்வு சங்கம்தான். ஆனா அதுக்கு ஆரம்ப புள்ளியா இருந்தவர் ரஷ்ய டாக்டர் காரக்'' என்று விருது நகருக்கும் ரஷ்யாவுக்கும் முடிச்சுப் போடுகிறார் இதயம் நல்லெண்ணெய் மார்க்கெட்டிங் மேனேஜர் டேவிட் ஃபிலிப்ஸ்.

''விவரமா சொல்லணும்னா ஆஸ்துமாவால அவதிப்பட்ட டாக்டர் காரக், சுத்திகரிக்கப்பட்ட சூர்யகாந்தி எண்ணெயை வாயிலிட்டுக் கொப்பளிக்க ஆறே மாசத்துல ஓடிப்போச்சு ஆஸ்துமா. அவர் இந்த அனுபவத்தை ப்ளாக்ல எழுத, நம்ம ஊர் மேஜர் தும்ளா கோடீஸ்வரராவ் படிச்சிருக்கிறார். அவருக்கும், அவர் மனைவிக்கும் ஆஸ்துமா தொந்தரவு. சூர்ய காந்தி எண்ணெய்க்குப் பதிலா தும்ளா ராவ் தம்பதி சுத்தமான நல்லெண்ணெயை, ஆயில் புல்லிங்க்குப் பயன்படுத்தினாங்க. இவங்களுக்கும் அதே ஆறு மாசத்துல பலன். மேஜர் தும்ளா, 'நல்லெண்ணெய் மருத்துவம்'னு புத்தகமே போட்டுட்டார். இந்த விஷயத்தைதான் இதயம் நல்லெண்ணெய் உரிமையாளர் வி.ஆர்.முத்துகிட்ட விருதுநகர் இயற்கை நலவாழ்வு சங்கம் சொல்லியிருக்காங்க. ஆனா அவர் இதை ஆரம்பத்துல நம்பலை'' என்று சஸ்பென்ஸ் கொக்கிப் போடுகிறார் டேவிட்.



* முத்து



* டேவிட்



''ஆனா, இதயம் நல்லெண்ணெய் எம்.டி., முத்துவோட அம்மாவுக்கு இருந்த தொடர் தும்மல் ஆயில் புல்லிங் செஞ்சதால க்யூர் ஆயிடுச்சு. பிறகுதான் அவர் ஆயில் புல்லிங்ல அதிரடியா இயங்க ஆரம்பிச்சார். இன்னைக்கு இதயம் நல்லெண்ணெய் ஏற்படுத்திய விழிப்புணர்வால், ஆயில் புல்லிங் பத்தி அவேர்னஸ் தமிழகம் முழுக்க பரவியிருக்கு'' என்கிறார் டேவிட்.

''ஆயில் புல்லிங்க்கு இதயம் நல்லெண்ணெயை மட்டும்தான் பயன்படுத்தணுமா''ன்னு கேட்டா, ''ஆயில் புல்லிங்க்குத் தேவை சுத்தமான நல்லெண்ணெய். அதை இதயம் நல்லெண்ணெய் தருது. 250 கோடியா இருக்கற ஆண்டு வருமானம், ஆயில் புல்லிங் கான்செப்டால் 2000 கோடியா உயரும்னு நம்புறோம்'' என்கிறார் முத்து. நல்ல எண்ண கணக்கு மாதிரி இது 'நல்லெண்ணெய்க் கணக்கு!'

வாசகர் யோசனை :
பழநிசாமி, விருதுநகர்



“**உ**டம்பு சரியில்லாத குழந்தைத் தலையில் உலக பாரத்தை ஏத்தி வெச்சது மாதிரி தள்ளாடுதுங்க விருதுநகர். மாவட்டத் தலைநகருக்கான எந்த அந்தஸ்தும் வசதிகளும் இங்கே இல்லை. அதைப் பத்தி இங்கே வாழ்ற மக்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. தலைநகரத்தை இராஜ பாளையத்துக்கு மாத்திடறதுதான் நல்லது. நல்ல வசதிகளோடும் விழிப்போடும் இருக்கிற இராஜ பாளையத்துக்கு மாத்துனாங்க விருதுநகர்காரனான நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன். இத்தனைக்கும் விருதுநகர் மாவட்டத்துக்கு ரெண்டு மாநில அமைச்சர் வேறு” -விருதுநகர் வெயிலைப் போல சுடச்சுட வந்து விழுகின்ற வார்த்தைகள். விருதுநகர் நகர்நல சங்கத்தின் செயலாளர் டாக்டர் ரத்னவேலுவிடமிருந்து...

“பாதாளச் சாக்கடைத் திட்டம் அதளபாதாளத்துல நிக்கிறதுனால கனெக்‌ஷன் கொடுக்காம தெருக்கள்ல சாக்கடைத் தேங்கிக் கிடக்கு. பாதாளச் சாக்கடைத் தோண்டுனாங்கன்னா, அந்த இடங்கள்ல டெம்ப்ரரி ரோடு போடணும். ஆனால் திட்டமே முடியலை. நகரம் முழுக்க பர்மனென்ட் ரோடு போட்டுக்கிட்டு இருக்காங்க. உலக வங்கி நிதி உதவியோட கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் கேட்பாரற்றுக் கிடக்குறது வேதனைன்னா, ஊருக்குள்ள எந்த பஸ்ஸுமே வர்றது இல்லை. எல்லாம் பைபாஸ் சாலையோட

விருதுநகர் வொர்ஸ்ட்

“**வி**ருதுநகர்ல சுகாதார வசதி ரொம்பக் கம்மிங்க. தமிழ்நாட்டுல சிக்குன்குன்யா பரவுன முதல் ஊர் ஸார் இது. எவ்வளவோ கரடியா கத்திப் பார்த்தோம். அரசாங்கம் காதுலையே போட்டுக்கலையே. இத்தனைக்கும் அப்ப மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரா இருந்த கே.கே.எஸ்.எஸ்.ஆர். எங்க ஊர்லதான் குடியிருந்தார். இப்பவும் மழைக்காலம் வந்துடுச்சுன்னா சிக்குன்குன்யா பரவுறதுக்கான அத்தனை சாத்தியங்களும் அப்படியேதான் இருக்கு. விருதுநகருக்கு ஹெல்த் இன்ஸ்பெக்டர் கிடையாது. சி.டி.ஸ்கேன் எடுத்த பிறகு அதைப் பரிசோதனை பண்ணிப் பார்க்கிற மருத்துவர்கள் ஜி.ஹெச்.ல இல்லை. மதுரைக்குத்தான் போகணும். ‘விருதுநகர் நகராட்சிக் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம்’ 2006லே ஆரம்பிச்சாங்க. 2008லே முடிஞ்சிருக்கணும். ஆனால், இன்னும் முக்கால் பங்கு கூட முடியலை” என்கிற டாக்டர் ரத்னவேலுவின் வார்த்தைகளில் சூடு அதிகமாகிக்கொண்டே போகிறது.

“அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். வீடு இருக்கும் வீதிக்கு மட்டும் ஐம்பது லட்ச ரூபாய்ச் செலவில் சிமெண்ட் சாலை போட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கு வரவேண்டிய இரயில்வே மேம்பாலம் இரயில்வே துறையின் ஒப்புதலுக்குப் பிறகும் வராமலிருக்கிறது. இது குறித்து, முதலமைச்சர், துணை முதலமைச்சர் இருவருக்கும் கடிதம் எழுதியும் எந்தப் பயனுமில்லை” என்கிறார் விருதுநகர் எம்.எல்.ஏ. வரதராஜன் (ம.தி.மு.க).

'பை பை'ன்னு போயிடறது வெட்கப்பட வேண்டிய வேதனை. கிட்டத்தட்ட பதினைஞ்சு வருஷத்துக்கு மேல அந்தப் பேருந்து நிலையம் காலியாதாங்க கிடக்கு. இப்போ சாயங்காலம் சாராயம் குடிக்கற இடமாகவும், காலையில வாக்கிங் போகிற மைதானமாகவும் மாறியிருக்கு'' என்கிறார்.

''விருதுநகருக்கு முப்பத்தாறு கோடி ரூபாய் திட்ட மதிப்புல ரயில்வே மேம்பாலம் தமிழகச் சட்டமன்றத்துலேயே சாங்ஷன் ஆச்சு. அந்த ரயில்வே மேம்பாலம் வர இருந்த இடத்துல அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.க்குச் சொந்தமான தியேட்டர், வீடுகள், காம்ப்ளஸ், எல்லாம் இருக்கு. அதனால, நகரசபையில 'இந்த இடத்துல மேம்பாலம் வந்தா மக்களுக்குச் சங்கடம்'னு தீர்மானம் நிறைவேற்ற வெச்சி, மேம்பாலத்தை அமைச்சர் தடுத்துட்டார். உண்மையிலே மேம்பாலம் வராததுதான் பிரச்னை. இப்படி விருதுநகர் வளர்ச்சிக்கு எந்தளவு முட்டுக்கட்டை போடணுமோ அந்தளவுக்குப் போடுறார் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ஏன்னா அவர் சாத்தூர்க்காரர், அங்கேயிருந்து ஜெயிச்சுதானே சட்டசபைக்குப் போனார். அதனாலதான் சொல்றோம் மாவட்டத் தலைநகரை இராஜபாளையத்துக்கு மாத்திடுங்க. அங்க இருக்கற மக்களும், தலைவர்களும் போராடியாவது மாவட்டத்தோட கஷ்டங்களை மாத்திடுவாங்க'' என்று வேதனைப்படுகிறார் டாக்டர் ரத்னவேலு!



* ரத்னவேலு

இராஜபாளையம் பெஸ்ட்!

தீர்வு இருக்கு ஆனா இல்லை

''நிலத்தடி நீர் மட்டம் மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் விருதுநகர்ல மேலதாங்க இருக்கு. ஆனா, நகர்க்குள்ள பதினைஞ்சு நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் சப்ளை ஆகுது. ஒண்டிப்புலி நாயக்கனூர் குடி தண்ணீர்த் திட்டம், காரிச்சேரி நீர்த்தேக்கத் திட்டம், ஆனைக்குட்ட நீர்த் தேக்கத் திட்டம், இந்த மூன்றையும் சரியா பயன்படுத்துனாங்கன்னா, விருதுநகர்க்கு இப்ப கொடுக்கிற குடிதண்ணீரைவிட அதிகமாகக் கொடுக்கலாம். அதுவும் மூன்று நாளைக்கு ஒரு தடவை சப்ளை ஆகற அளவுக்கு சோர்ஸ் இருக்கு. நகராட்சி நிர்வாகம் ரௌடிங்க கைக்குப் போயிடுச்சுங்க. மிஸ்மேனேஜ்மெண்டால எல்லாமே மிஸ்ஸாகிப் போயிக்கிட்டு இருக்கு'' என்கிறார் பொதுப்பணித் துறையில் ஓய்வுபெற்ற உதவிப் பொறியாளர் ஊர்க்காவலன்.



வாசகர் யோசனை:

விருதை ராஜா, விருதுநகர்

மேலாண்மை பொன்னுசாமி



விருதுநகருக்குப் போயாக வேண்டுமே என்ற நினைவு ராக்கம்மாவை விரட்டியது. காலுக்கும் மனசுக்கும் றெக்கை முளைத்தது. ஓடைக்குப் போய் விட்டு, முள்காட்டில் குறுக்காக ஓட்டமாய்ப் பாய்ந்து வருகிறாள். கிழக்கிலிருந்து பேயைப் போல வந்த மஞ்சள் நிற லாரி, பால் சொஸைட்டி முன்னால் வட்டமடித்து நின்ற கணத்தில்... நாலு வெற்றுக் கேன்களை வீசியெறிந்துவிட்டு, நாலு பால் கேன்களை ஏற்றிக்கொண்டு, ஒரு கொள்ளைக்காரனைப் போல பதறிப் பாய்ந்தோடுகிறது.

கிராமத்து ஜனங்களின் ரத்தம், பாலாகிறது. அதை நகரத் துக்காரர்களின் வாயில் கொண்டு போய் ஊற்ற வாகனமாகிறது பால் சொஸைட்டி.

'மாடு கன்னு வளர்த்து... காடுகரைன்னு புல்லுக்குச் சீரழிஞ்சு... மாடுகளுக்குப் பக்கு வம் பாத்து, நார்ப்பறியுறது நாம. நோகாம



நொங்குதிங்குறது, பட்டணத்துக்காரவுக'

வேக்காடும் வெக்கையுமான நினைவுகள் கானல் அலையாக மிதக்க... நடையை எட்டிப்போடுகிறாள் ராக்கு.

'பொழுது விடிஞ்சு, உச்சிக்கே வந்துருச்சு. இந்தக் கூத்துலே எட்டு மணிப் பஸ்ஸை பிடிச்சாகணும். விருதுநகர் கிட்டத்துலா இருக்கு? சிவகாசி வரைக்கும் ஒரு பஸ். அங்குட்டு மறுபஸ். விருதுநகர்லே இறங்கி ஒரு மினி பஸ்ஸைப் பிடிச்சு இறங்கி, ஆட்டோவுலேதான் அந்த எடம் போய்ச்சேரணும். மதியம் ஆயிரும்.

அவளை தார்க்குச்சியால் குத்தி விரட்டுகிற நினைவூசிகள், 'தக், தக், தக்'கென்று நடையை எட்டிப்போட, தரை அதிர்கிறது. அவசரத்தில் பரபரப்பில் கையும் காலும் அலைபாய்ந்தலும், உருப்படியாக ஒரு வேலையும் நடக்க மாட்டேன் என்கிறது. 'ஆத்திரத்தில் கையைவிட்டால், அண்டாவுக்குள் நுழையாது' என்கிற சொலவடை சரியாகத்தான் இருக்கிறது.

கண்ணை மூடின வேகத்தில் காட்டுத்தனமாக அலைகிற பதற்ற மனசை, இழுத்துப் பிடித்து ஒரு நிதானத்துக்குள் நிறுத்தினாள். குளித்துமொழுகி, ஈரத் தலையைத் தட்டி உதறி, மாற்றுத் துணியை உடுத்தி, இருக்கிற காய்ந்த புற்களை அள்ளி சினைப் பசுக்களுக்குப் போட்டுவிட்டு, பச்சைப் புல்லை பால் தருகிற பசுவுக்குப் போட்டுவிட்டு, கன்றுகளைத் தடவி விட்ட மணப்பாசத்துடன் வெளியேறிய ராக்குவுக்குள் சாணமும் மூத்திரவாசமும் மணந்தது.

விருதுநகர் போய், போனவேலை முடிந்து, பஸ்களைப் பிடித்து ஊர்திரும்ப ராத்திரி பதினோரு மணியாகிவிடும். அதற்காகப் போகாமலிருக்க முடியுமா? நல்ல



எதிரி முகம்

விஷயம், மங்களகரமான எடுப்பு. ஒரு பெண்ணுக்கு மாலை பூக்கிற சமாச்சாரம்.

நம்மையும் மனுஷியாக மதித்து, உறவை நினைத்து, விருப்பத்துடன் அழைக்கிறபோது, அதை மதிக்க வேண்டாமா?

நேத்து ராத்திரி, மாடுகன்னுகளைக் கவனித்துவிட்டு பாயை விரிக்கிற

நேரம்.

முனியம்மா வந்து நின்றாள். அவள் முகமெல்லாம் பூரிப்பின் மலர்ச்சி. கண்ணில் மனசின் துள்ளல்.

''என்ன முனியம்மா, இந்நேரத்துலே?''

''அக்காளைத்தான் தேடி வந்தேன். ஒரு நல்ல விஷயமாகத்தான்.''

''என்ன விஷயம்?''

''எம்மகளுக்கு ஒரு 'எடம்' திகைஞ்சு வருது. மாலை பூக்துரும்னு தோணுது. நாளைக்கு மாப்புள்ளை வீடு பார்க்கப் போகணும். அதுக்கு அக்காவும்கூட வரணும்.''

1949 முதல் 1952 வரை தமிழக முதல்வராக இருந்த பி.எஸ்.குமாரசாமிராஜா ஆட்சியில் தான் அரிசன நலத்துறை உருவாக்கப்பட்டது.



ராக்கம்மா, முகத்திலும் சட்டென்று பூத்த நிலாவெளிச்சம். முகமெல்லாம் சிரிப்பில் விரிகிற சந்தோஷம். மனசின் மகிழ்ச்சிப் பொங்கல், கண்ணின் பிரகாசிப்புகளாக...

''அடியாத்தாடி'' என்று மகிழ்ச்சி தாளாமல் கூவினாள்.

''நல்ல தாக்கல் சொன்னே. மனசெல்லாம் கெடந்து இனிக்குது'' என்று ததும்பி வழிந்த ராக்கம்மா, பாசமிகுந்த வெள்ளை மனசுடன் வாழ்த்தினாள். ''அவளுக்கு நல்லபடியா மாலை பூக்கணும். பூவும் பொட்டுமா... சீரும் பேருமா நெறைஞ்சு வாழணும்.''

''எந்த ஊரு?''

''விருதுநகரு பக்கத்துலே''

மாப்பிள்ளையின் நிறம், அழகு, குணம், தொழில், குடும்பம் எல்லாம் விசாரித்துக்கொண்டேபோன ராக்கம்மா மனசின் ஆழத்தில் ஒரு தயக்க நிழல்.

'பணம் பெத்த பசுமாடுகளைக் காயப் போட்டுட்டுப் போறதா? ரெண்டு பசுக சினை. ஒண்ணு பால்மாடு. வாயில்லாச் சீவனுகளைக் குலை பட்டினியாகப் போட்டுட்டு ஊர் வழியாகப் போறதா?'

உள்ளுக்குள் மெல்லிய மனமன்றாட்டம். முகத்தில் மனவெளிச்சமும், பூரித்த வாழ்த்துகளும் குறையாத நிலையில், அடிமடியில் மனமருகல்.

''யக்கா, நீ ஒண்ணும் மலைக்க வேண்டாம்க்கா. எம்மக மாடு கன்னுகளைக் கண்ணுங் கருத்துமா கவனிச்சுக்குவா.''

அந்த சிறிய தயக்கமும் சிதறியோட, மனசும் மகிழ்ச்சியுமாகப் புறப்படத் தயாராகிவிட்டாள் ராக்கம்மா.

எட்டு மணி பஸ் மாதாங்கோயில் பட்டியைத் தாண்டுகிறது. ஆட்களை விழுங்கிய மலைப்பாம்பாக மூச்சு திணறுகிறது. கல்யாண முகூர்த்த நாள். மங்களகரமான நாள்.

கூட்டம் சள்ளை பறிக்கிறது. ஒற்றைப் பாதத்தை ஊன்றிவிட்டு, மறுபாதத்தை வைக்க இடமில்லாமல் தவிக்கிற பயணிகள். ஒருத்தர் மூச்சு, ஒருத்தர் முகத்தில் சுடுகிறது. வியர்த்து வழிகிற வியர்வையின் நெடி. கெட்டித்து இறுக்கிய புளிச்சிப்பமாக மனிதக்கூட்டம். இடித்துக் கொண்டும் இடிபட்டுக் கொண்டும் கத்திக் கொண்டும் கூப்பாடுப் போட்டுக் கொண்டும் உயிர் தத்தளிக்கிற கூட்டம்.

நகரத்துக்கு வேலைக்குப் போகிற ஆட்கள். சித்தாள், கொத்தனார் வேலைகளுக்கும், பட்டாசு, தீப்பெட்டி ஆஃபீஸ்

களுக்கும் கிராமத்திலிருந்து படை எடுக்கிற கூட்டம். கல்யாணக்கூட்டம் வேறு. கிராமத்து வியர்வையும் ரத்தமும் நகரத்துக்குத்தான் பாய்ச்சப்படுகிறது.

மூன்றாவது சீட்டில் உட்கார்ந்திருக்கிற ராக்கம்மா.

''ஏய்யக்... காலை மிதிக்காதே''

''எங்காலை எங்குனே வைக்க?''

''ஒந்தலையிலே வைச்சுக்கோ''

''இடிக்காதீகடி, கிழட்டுச்சிவனை''

''சாய்ஞ்சு எங்களையும் நெருக்காதீக...''

''அமுக்காதே... மூச்சுத் திணறுது''

''மேலே ஒரசாதே...

''ஒரசாமப் போகணும்னா, கார்லே போகலாம்லே?''

''கார்லே போற யோகமிருந்தா... கழுதை மேய்க்க இதுலே யாரு வருவா?''

கோபச் சீறல்கள். வலி தாளாத மனக் கதறல்கள், கூவல்காடுகள், கூச்சலும் சீறலுமாக ஆத்திர உஷ்ணக் கூப்பாடுகள்.

இவை எதையும் பார்த்தாலும் கவனிக்காத மனநிலையில் ராக்கம்மா. கட்டை இங்கே கிடந்தாலும், உயிரெல்லாம் தொழுவத்தில் சுற்றி வலம் வருகிறது.

பசுக்களைச் சுமக்கிற மனப்பாரம்.

அடுத்தடுத்து வந்த வறட்சிகளுக்கு வெட்டி வெட்டி ஆழப்படுத்தப்பட்ட புஞ்சைக்கிணறு. பெருமலையாக உயர்ந்த கருங்கல், சரள்குமி. நல்லதண்ணீர் கிணறாக இருந்தது, ஆழப்பட ஆழப்பட உப்புத் தண்ணீராகி... உவர்நிலமாகி... வெள்ளாமை விளைச்சலை முடக்குகிற மலட்டு நிலமாகச் சீரழிய... நிலத்தைத் தரிசாகப் போட்டுவிட்டு, பசுக்களின் வால் நுனியில் வாழ்க்கையைத் தொங்கவிட்ட ராக்கம்மா, மகள்கள் இருவரையும் 'கட்டி'க் கொடுத்துவிட்டு, புருஷனும் இறந்துபோக... மனம் தளராத உழைப்பாளக் குணத்துடன் வாழ்க்கையுடன் மல்லுக்கட்டுகிறாள். கம்பு, சோளம், பருத்தி, மிளகாய் விளைய வைத்த பழைய காலம் பழசாகிப்போக... பசும்பாலை மட்டும் உற்பத்திப் பண்ணுகிற தற்பாதைய பிழைப்பு.

புஞ்சைகளின் ஓரஞ்சாரங்களில் 'கினியா' புல்பயிர், ஆமணக்கு, அகத்தி



சிவகாசியை 'குட்டி ஜப்பான்' என்றழைத்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு.

பயிரிட்டு, அதையே அறுத்து கட்டுகட்டாகச் சுமந்து, கழுத் தொடிந்து...

பால் சொஸைட்டி வந்து சேர்க்கிற பசு. அதன் கனத்த மடிக்காம்பில் விளக்கெண்ணெய் தொட்டு வைத்து குத்துக்கால் வைத்து, பால் சட்டியை முழங்கால் மடிப்புக்குள் இடுக்கி... கம்புகளை இழுத்து... 'சர்ர்ர்...சர்ர்ர்...' ரென்று இனிய சீற்றம். பால் நுரைபொங்க, சட்டி நிறையும்.

சொஸைட்டி கிளார்க், கேன்களிலிருந்த பாலைச் சில்லறை விற்பனை செய்தார். ராக்கம்மா மாதிரி உற்பத்தியாளர்களிடம் பாலை அளந்து வாங்குகிறார். லிட்டர்களும் சல்லடையுமாகப் பரபரக்கிற அவர்.

ராக்கம்மா குனிந்து சட்டியைச் சாய்க்க... லிட்டர் லிட்டராக அளக்கிற வேகம். மஞ்சள் சிட்டையில் 'அஞ்சரை லிட்டர்' என்று குறித்து தருகிற விரைவு.

''ஒரு லிட்டர் பாலுக்கு என்ன வெலை போடுதீக?''

''எப்பவும் போலத்தான். சர்க்காரு நிர்ணயிச்ச வெலை. பதினாலரை ரூவா.''

''டவுண்காரவுக பாக்கட் பாக்கட்டாகப் பாலை வாங்கி ,ருசியா குடிக்கிறதுக்கு நாம இங்க கிடந்து சீரழிஞ்சு சாக வேண்டி யிருக்குது.''

அவலமும் சுயபச்சதாபமுமாக மனம் கசிகிற அவளது துவண்ட குரல், காற்றை வெப்பமாக நனைக்கிறது.

'பட்டிக்காட்டுலே ஒழைச்சுக் கொட்டுதோம். பட்டணத்துலே அள்ளி அள்ளி வாயிலே அமுக்குதாக' என்ற மனக் கொதிப்பில் ஓடுகின்றன. அவளது நினைவுகள்.

என்னது அரை லிட்டர் பால் பதினாலு ரூவாயா? பதறினாள் ராக்கம்மா.

மதியத்துக்கும் மேலாகி விட்டது. ரெண்டு ஆட்டோக்களில் போய் இறங்கினர். ரெண்டு மூன்று பேர் வரலாம் என்ற மிதப்பில் இருந்த மாப்பிள்ளை வீட்டார், ஆறேழு பேர் கூட்டமாக வந்து நின்றவுடன் மலைத்தனர். ராக்கம்மா மாப்பிள்ளை வீட்டைப் பார்த்தாள். வசதியான வீடு. நகரத்துப் பாணியிலான காரை வீடு. எல்லாரும் சூட்டும் சட்டையுமாக... பட்டுச் சேலையும் பூவுமாகப் பளிச்சென்ற முகங்களுடன் இருந்தனர்.

பாசமும் மதிப்புமாகக் குழைந்த சொற்களில் வரவேற்றனர். எண்ணெய் வழிகிற கிராமத்து முகங்களும், பின் கொசுவ சேலைகட்டுமாக வந்தவர்களை உட்காரச் சொன்னார்கள்.

வீட்டுக்காரர்களின் பரபரப்பு. புதிய நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற திகைப்பு. ஒவ்வொருத்தரையும் வேலை ஏவுகிற துரிதம். ராக்கம்மா அவர்களையே கவனிக்கிறாள்.

''டேய், நாகரத்தினம் ஸ்வீட் கடையிலே கூடுதலா கொஞ்சம் காரமும் இனிப்பும் வாங்கிட்டுவா. டூவீலரை எடுத்துட்டுப் போ...''

''சரி...''

''க்விக்கா வாடா''

''ம்''

''அப்படியே அரை லிட்டர் பால் பாக்கட் வாங்கிட்டுவா''

''அரை லிட்டரா?''

''ஆமா''

''என்ன வெலையிருக்கும்?''

''பதினாலு ரூவா. அம்மா கிட்டே ரூவா வாங்கிட்டுப்போ''

ராக்கு, பதறினாள். அதிர்ச்சியில் பதைத்தாள்.

''பாலு என்ன வெலை சொன்னீக...?''

''அரைலிட்டர் பாக்கட் பதினாலு ரூவா.''

ராக்கு ஊற்றுகிற பாலுக்கு லிட்டர் பதினாலரை ரூபாய் எழுதுகிறார்கள். டவுண்காரவுக அரை லிட்டர் பாலுக்குப் பதினாலு ரூபாய் தருகின்றனர். கொட்டியழுகின்றனர்.

டவுண்காரவுகளும் கொள்ளை விலை தருகின்றனர். ஆனால், அதில் பாதிதான் பால்காரர்களுக்கு வந்து சேருகிறது. கிராமம், நகரம் ரெண்டும் கொள்ளையடிக்கப்படுகின்றன.

கொள்ளையடிப்பது யார்? ராக்குக்குத் தெரியவில்லை. முகமற்ற எதிரிகள். முகம் தெரியாத பகைவர்கள். யார்? யார்? யார்?

ராக்கம்மாவுக்கு வந்த வேலையை நினைக்க முடியாத அளவுக்கு மனசுக்குள் குழப்பம்.



ஜிலு ஜிலு சதுரகிரி!

● சதுரகிரி மகாலிங்கேஸ்வரரைத் தரிசிக்கச் செல்வதற்கு நான்கு வழிகள். அதில் ஒரேயொரு வழி மட்டுமே, ரொம்ப பெஸ்ட். மத்ததெல்லாம் ரொம்ப வொர்ஸ்ட்!

● வத்திராயிருப்புலேர்ந்து போறது தான் பயணத்துக்கு நல்லது. அங்கேயிருந்து தாணிப்பாறை வரைக்கும் மினி பஸ், ஆட்டோ வசதி. தாணிப்பாறையிலிருந்து மலைப்பகுதியில ஏத்த இறக்கங்களோட நடந்துதான் போயாகணும். ஏழு கிலோ மீட்டர் தூரம்.

● சிரமப்பட்டு மேலேறிப் போனா, நம் பார்வையில படுறது சுந்தர மகா லிங்க சுவாமி திருக்கோயில். சுற்றிலும் மலைகள். கிழக்கு எது, வடக்கு எதுன்னு தெரியாது.

● கிழக்கே சிவகிரி. மேற்கே விஷ்ணுகிரி. தெற்கே பிரம்மகிரி. வடக்கே சித்தகிரி. நாம நின்னு பார்க்கற சதுரகிரி கடல் மட்டத்துலேர்ந்து நாலாயிரத்தைந்நூறு அடி உயரம். வருடம் முழுவதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை.



● பதினெட்டுச் சித்தர்களும் ஒன்றாக வாழ்ந்த, வழிபட்ட தலம் சுந்தர மகா லிங்க சுவாமி ஆலயம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட, மூலிகை நிறைந்து காணப் படும் வனப்பகுதி. அதில் ஒரு மூலிகை, ஜோதி விருட்சம்.

● இந்த மூலிகை மரத்தின் இலைகள், தீப சுடர்விடக்கூடிய தன்மை உடையன. அகல்விளக்கு எண்ணெயில் திரி போல் வைத்து தீபம் ஏற்றப்படுகிறது. ஒரு இலைக் கீற்று, பதினைந்து மணி நேரம் எரிந்து சுடர் விடக்கூடியது.

● சதுரகிரி வந்து மகாலிங்கேஸ்வரரையும் மகத்தான மலை அழகையும் ரசிக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்க: (மலையில் தங்குமிட வசதி உண்டு).


செயல் அலுவலர், சுந்தரமகா லிங்க சுவாமி திருக்கோயில், 42, நடுத்தெரு அக்ர ஹாரம், வத்திராயிருப்பு- 626 132, விருதுநகர் மாவட்டம்.

வாசகர் யோசனை:
ஆர்.ஆர்.பூபதி, கன்னிவாடி

பாண்டிமாதேவி நாயகன்



கல்கியில் பாண்டிமாதேவி வரலாற்று நாவல் எழுதிக் கொண்டிருந்தபோது வத்தி ராயிருப்பு இந்து நடு நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் எழுத்தாளர் நா.பார்த்தசாரதி. பிறந்த ஊர் பக்கத்திலிருக்கும் நரிக்குடி. நா.பா.,பத்திரி கைகளில் கதை கட்டு ரைகளை எழுதுவதை பள்ளி நிர்வாகம் அவ்வள வாக ரசிக்கவில்லை. எங்கே தம் எழுத் துக்கு பங்கம் நேர்ந்துவிடுமோ என்று ஆசிரியர் வேலையை உதறிவிட்டு தம் இலக்கியப் பணிக்கு சர்வபங்கம் வராமல் பார்த்துக் கொண்டாராம் நா.பா. அதன் பிறகு அவர் கல்கி இதழில் எழுதிய நாவல்கலெல்லாம் இந்திய இலக்கியத்தின் மைல்கற்கள்.




* நா.பார்த்தசாரதி

காற்றில் வசிக்கும் கதை





சுமார் நான்கு நூற்றாண்டு காலம் காற்றிலேயே வாழ்ந்து கொண்டிருக் கிறது நல்லதங்காள் கதை. கதைக் கான ஊற்றுக்கண், நல்லதங்காள் தன் ஏழு குழந்தைகளோடும் தற்கொலை செய்துகொண்ட கிணறுதான். வத்திராயிருப்புக்கு அருகே அர்ச்சுனா புரத்தின் அரவணைப்பில் இருக்கிறது அந்தக் கிணறு. சிதிலமாகித் தூர்த்துபோயிருக்கும் அதன் தலையில் முளைத்து நிற்கும் மஞ்சனத்தி மரம் இன்றைக்கு வழிப் பாட்டுக்கு உரியதாகிவிட்டதுதான் நல்ல தங்காளின் மகிமை. கிணற்றுக்குத் தென் மேற்கில் நல்லதங்காளுக்கும் அவள் குழந்தைகளுக்கு கோயிலெடுத்துக் கொண்டாடி வருகின்றனர்.



விருதுநகரின் மேட்டூர்

விருதுநகரின் வெயில் வத்திராயிருப்பில் மட்டும் சற்றே சாந்தம் கொள்கிறது. காரணம், பிளவக்கல் டேம். வத்திராயிருப்பிலிருந்து வருஷநாடு செல்லும் பாதையின் இடது புறத்தில் இருக்கிறது இந்த அணை. விவசாயத்துக்கென உருவாக்கப்பட்ட இந்த அணையின் மீன் காட்சியகம் மிகப் பெரிய ஹைலைட். கருணாநிதி முதல்வரான பிறகு திறந்த முதல் அணை இதுதானாம். சென்னையின் போரூர் ஏரியைப் போல பரந்திருக்கிறது நீர்த்தேக்கப் பகுதி. வருஷ நாட்டுப் பாதையின் வலது புறமிருக்கும் கோவிலாறு டேம் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறது.

வத்திராயிருப்பு பிட்ஸ்!

சதுரகிரி மலையடிவாரம், உதயகிரிநாதர் கோயில் தெப்பக்குளம், மலைப் பகுதியிலேர்ந்து ஓடி வர்ற தண்ணீர் யாளி வடிவ கற்சிற்பம் வழியே கொட்டிக் கொண்டே இருக்கிறது. சித்திரை மாதத்தின் பிறப்பன்று மனநலம் சரியில்லாதவர்களைக் கூட்டி வந்து இங்கு குளிப்பாட்டுகின்றனர்.

மாவூற்று

உலக புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானி கே.எஸ்.கிருஷ்ணன் பிறந்த ஊர் வத்திராயிருப்பு. அவர் படித்த பள்ளியிலேயே தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். இவரது விஞ்ஞான சாதனையை போற்றும் வண்ணம் அரசாங்கம் பத்ம விபூஷன் விருது கொடுத்து கௌரவித்தது.

வாசகர் யோசனை: **பொன்.பிரபாகரன், வத்திராயிருப்பு**



தோனி அடிக்கும் சிக்ஸர் போலவே அவருடைய திருமணமும் எதிர்பாராதவிதமாகவும் பரபரப்பாகவும் நடந்துமுடிந்திருக்கிறது.

தோனி, தன் பள்ளித் தோழியான சாக்ஷியை மணக்கவிருக்கிறார் என்கிற செய்தி வெளியானவுடனே கிரிக்கெட் ரசிகர்களிடையே பரபரப்புத் தொற்றிக் கொண்டது. முக்கியமாக, ஆங்கிலச் செய்தி சானல்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தோனி எப்படி சாக்ஷியைக் காதலித்தார்? ஏன் தடாலடியாகத் திருமணம்? என்று இன்றுவரை தோனியின் திருமணம் பற்றி புதுப் புதுச் செய்திகள் வெளிவருகின்றன.



டெஹ்ராடூனில் உள்ள பகிராத் ரிசார்டில் நடந்த தோனி திருமணத்துக்கு அழைப்பாளர்கள் ஐம்பது பேர் மட்டுமே. இந்தியக் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் சஷாங் மனோகர், ஹர்பஜன் சிங், ஆஷிஷ் நெஹ்ரா, ஆபி சிங், சுரேஷ் ரைனா, ரோஹித் சர்மா போன்ற கிரிக்கெட் வீரர்களும் திருமணத்தில் கலந்து கொண்டார்கள். சச்சின், ஷேவாக், யுவராஜ் போன்ற வீரர்கள் திருமணத்துக்கு வரவில்லை. சாக்ஷியின் உறவினர் ஐபிஎஸ் அதிகாரியாக இருப்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுவதையும் அவரே பார்த்துக்கொண்டார். திருமண வீடியோ பதிவு மிக ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. செல்போனில் புகைப்படம் எடுக்கவும் தடைசெய்யப்பட்டது. மீடியாவுக்கு, முக்கியமான சில புகைப்படங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. தோனி எண்ணியிருந்தால் இதுவரை பார்க்காத ஒரு திருமணத்தை நடத்திக் காட்டியிருக்க முடியும். ஆனால் அது தமக்கும் தம் மனைவிக்கும் பெரிய ஆபத்தாகவும் முடிய வாய்ப்புண்டு என்பதால் காதும் காதும்

சிக்ஸர்



வைத்தாற்போல திருமணம் செய்துவிட்டார். இதற்கு முன்னால் சச்சின் டெண்டுல்கர், சானியா மிர்சா, அமிதாப்பச்சன், மாதுரி திட்சித், சஞ்சய் தத், லியாண்டர் பயஸ் ஆகிய பிரபலங்களின் திருமணங்களும் இதே போல எந்த ஆடம்பரமும் இல்லாமல் நடந்தது ஞாபகமிருக்கலாம்.

திருமணம் முடிந்த அடுத்த நாளே பலத்த பாதுகாப்புடன் டெல்லியில் உள்ள நிசாலா கிளப்பில் தங்கிய தோனி, பிறகு ராகுல்காந்தியைச் சந்தித்துப் பேசியது தேசியத் தலைப்புச் செய்தியானது. டெல்லியிலிருந்து நேராகத் தமது சொந்த ஊரான ராஞ்சி சென்ற தோனி, அங்கு தம் நெருங்கிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தினார். இங்கும் மீடியாவுக்கு அழைப்பு இல்லை.

பையும் பிறகு காதலையும் பலப்படுத்தியிருக்கிறார். தன்னுடன் பேசுவதை யாருக்கும் சொல்லவேண்டாம் என்று அன்புக் கட்டளையிட்டதால் இவர்களின் காதல் வெளியே யாருக்கும் தெரியாமல் போனது. பிறகு, பிபாஷா பாசு நடத்திய ஒரு பார்ட்டியில் மீண்டும் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். ('நீதான் தோனியின்

'தோனியின் திருமணத்துக்கு நீதான் தூது போனாயா' என்று பிபாஷா பாசுவை அவரது நண்பர்கள் உலுக்கி எடுக்கிறார்களாம்.

மேரேஜ்!



தோனிக்கு ராசியான எண் 7. சாக்ஷிக்கு 1. இவர்கள் இரு வரும் இந்த வருடம் திருமணம் செய்து கொண்டால் மங்களம் உண்டாகும் என்று ஜோசியம் சொல்லப்பட்டதால் இலங்கை சுற்றுப்பயணத்துக்கு முன்பு கிடைத்த ஓய்வுநாளில் சாக்ஷியைத் திருமணம் செய்துகொண்டார் தோனி.

2007ல், பாகிஸ்தானுடன் நடந்த கிரிக்கெட் மேட்சுக்காக கொல்கத்தா வந்த தோனி, தாஜ் ஓட்டலில் தங்கினார். அங்கு பயிற்சிப் படிப்புக்காக வந்திருந்த சாக்ஷியைச் சந்தித்தார். இருவரும் ராஞ்சி டிஏவி பள்ளியில் படித்தவர்கள் என்பதால் சாக்ஷியிடம் நீண்டநேரம் பேசிய தோனி பிறகு அவருக்கு அடிக்கடி போன் செய்து நட்

திருமணத்துக்குத் தூது போனாயாமே?' என்று பிபாஷா பாசுவை அவர் நண்பர்கள் இப்போது உலுக்கியெடுக்கிறார்களாம்!) சாக்ஷியின் பிறந்த தினமான நவம்பர் 19 அன்று, சாக்ஷிக்கு ஒரு ஐபாடைப் பரிசாகக் கொடுத்த தோனி திருமணம் குறித்து சாக்ஷியின் பெற்றோரிடம் பேசியிருக்கிறார். மேற்கு இந்தியத் தீவில் நடக்கும் 20-20 உலகக்கோப்பை முடிந்தவுடன் திருமணம் என்று அப்போதே முடிவு செய்யப்பட்டது. ஆனால், திடீர் திருமணம் பற்றி இதுவரை தோனி வெளிப்படையாகப் பேச முன்வரவில்லை.

– ச.ந.கண்ணன்

7


செழுங்கிளை தாங்கும் ஈசன்!

ஆலயங்களின் அடுத்த அங்கம் பிராகாரம். அபூர்வமான சிற்பங்களைக் கொண்ட பெரும் தூண்கள், மண்டபங்கள், சன்னிதிகள், கல்வெட்டுகள் எல்லாம் இங்குதான் காணப்படும். இந்தப் பிராகரங்களுக்கும் சில தனிச் சிறப்புகள் உண்டு. பஞ்சபூதத் தலங்களில் அப்புத் தலம் என்று பெயர்பெற்ற திருவானைக் கோவிலில் உள்ள மூன்றாவது பிராகாரத்துக்கு திருநீற்றுப் பிராகாரம் என்று பெயர். மிகப் பெரிதாக விளங்கும் இந்தப் பிராகார மதிலை, சித்தர் வடிவில் வந்து சிவபெருமானே எழுப்பினார் என்பது செய்தி. அந்தப் பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு, திருநீற்றையே கூலியாகக் கொடுத்தார். அதனால்தான், அந்தப் பிராகாரத்துக்கு 'திருநீற்றுப் பிராகாரம்' என்று பெயர்.

சராசரி மனோபாவத்தில் பார்த்தால், வேலையைப் பார்த்துவிட்டு சாம்பலை வாங்கிக் கொண்டு போயிருப்பார்களா என்று தோன்றுகிறது. ஆனால், கொடுத்தவன் யார்? 'வெண்ணீற்று மேனியன்' என்று பாடப்படுபவனாகிய பரமன். அவன் அணியும் திருநீற்றுக்கே 'பஞ்சாட்சரம்' என்றும் பெயருண்டு. 'ஓம் நமசிவாய' என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை ஜபிப்பதால் அடையப்படுபவன், அதே மந்திரத்தைச் சொல்லி அணிய வேண்டிய திருநீறை அளிக்கிறான் என்றால், அது கேட்டவண்ணம் பலன் கொடுக்கக்கூடிய கற்பகத்தருவாக இருந்திருக்கும் என்றும் தோன்றுகிறது.

'மந்திரமாவது நீறு; வானவர் மேலது நீறு' என்று பாடி, பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்து வைத்தார் ஞானசம்பந்தப் பெருமான் என்கிறது வரலாறு. அடியார் சொல்வதற்காக நோய் தீர்த்த நீறு, ஈசன் வழங்கியபோது செல்வத்தையும் தந்ததில் வியப்பில்லை. தவிர, 'பூதி' என்றால் செல்வம். 'விபூதி' என்றால் 'மேலான செல்வம்.'

எந்த வகையில் மேலான செல்வம்? மற்றைய செல்வங்கள், இவ்வளவு ரூபாய் என்று மதிப்பிடக்கூடியவை; பிறர் கவர்ந்து செல்லக்கூடியவை. ஆனால், இந்தச் செல்வம் வேறு எவராலும் கவரப்பட முடியாதது. அதனாலும், இது



ஸ்ரீநிவாச ராகவன்

மேலான செல்வம்!

திருவனைக்கா ஆலயம்தான், கோச் செங்கட்சோழன் கட்டிய முதல் மாடக் கோவில் என்று சொல்வார்கள். இங்கு மட்டுமல்ல; சோழர் வரலாற்றின் சிறப்பைக் கூறும் திருவாரூர் தியாகராஜ ஸ்வாமி திருக்கோவிலும், சிவபிரானின் பஞ்சசபைகளில் முதலாவதான ரத்தின சபை திகழும் திருவாலங்காடும் கூட ஐந்து பிராகாரங்களைக் கொண்ட தலங்கள் தான். இந்தத் திருவாலங்காட்டுக்கு எழுந்தருளினார் ஞானசம்பந்தர்.

'ஈசனாலேயே அம்மை என்று அழைக்கப்பட்ட காரைக்காலம்மையார் தம் கைகளை ஊன்றி நடந்த தலம் இது. எனவே, இந்தத் தலத்துக்குள் நாம் கால்களை ஊன்றி நடப்பது பிழை' என்று நினைத்தார் அவர். அதனால், ஊருக்குள் போகாமல் வெளியே தங்கியிருந்தாராம். பிறகு சிவபெருமான் தோன்றி 'என்னை மறந்தாயோ?' என்று கேட்க, ஆலங்காட்டீசனைப் பாடினார் என்பார்கள்.

ஐந்து பிராகாரங்களைக் கொண்ட கோயில்கள் இவையென்றால், ஏழு பிராகாரங்களைக் கொண்ட கோயில்களை திருவரங்கம், மன்னார்குடி ஆகிய தலங்களில் தரிசிக்கலாம். குறிப்பாக, திருவரங்கத்தின் ஏழு சுற்றுகளையும் முறையே பூலோகம், புவர் லோகம், ஸுவர் லோகம், மஹர்



லோகம், ஜனலோகம், தபலோகம், சத்திய லோகம் என்றும் சொல்வார்கள். இவற்றில், மஹர்லோகம் என்னும் நான்காவது பிராகாரம், திருமங்கை மன்னனின் திருப்பணிதான். அதனால்தான், அவர் பெயரால், 'ஆலிநாடன் திருச்சுற்று' என்று பெயர் பெற்று விளங்குகிறது. இந்தச் சுற்றில்தான், பாம்புகளை ஆபரணமாகப் பூண்ட மிகப்பெரிய கருடாழ்வார், முதலாழ்வார்கள், தீர்த்தப் பெருமாள், தன்வந்திரி, வராகப் பெருமாள், கோதண்டராமர்... என்று பலப்பல சன்னிதிகள் அமைந்திருக்கின்றன.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பிராகாரங்களின் எண்ணிக்கைகள் மாறுபடும் என்றாலும், பொதுவான விஷயம் இந்தப் பிராகாரங்களில் சன்னிதிகள். திண்டிவனம் அருகிலுள்ள திருவக்கரை அருள்மிகு சந்திர மௌளீஸ்வரர் ஆலயத்தில், பிரயோக (ஏவும் நிலையில்) சக்கரத்துடன் காட்சி தரும் வரதராஜ மூர்த்தியைப் பார்க்கலாம்.



குழந்தைப் பேறு நல்ல முறையில் அமை
வளைகாப்பு நடத்திக்கொள்ளும் அஷ்டபு

உத்திரமேரூர் அருகிலுள்ள திருப்புலிவனத்தில், முயலகன் மீது ஒரு பாதத்தையும், சிம்மத்தின் மீது மற்றொரு பாதத்தையும் ஊன்றிய நிலையில் காட்சிதரும் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசிக்கலாம். அபூர்வமான கோலம் இது. இவரை 'சிம்ம தக்ஷிணாமூர்த்தி' என்று குறிப்பிடுவார்கள்.

தில்லைச் சிதம்பரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தேவார ஏடுகளை, தாம் வழிபடும் பொள்ளாப் பிள்ளையாரிடம் கேட்டறிந்து சொன்னார் நம்பியாண்டார் நம்பி. அந்த பொள்ளாப் பிள்ளையாரை, திருநாரையூரில் உள்ள திரிபுரசுந்தரி சமேத சௌந்தரேசர் ஆலயத்தின் பிராகாரத்தில்தான் தரிசிக்கிறோம்.

அப்பர் பெருமான் முக்தியடைந்த தலம் திருப்புகலூர். திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகில் உள்ளது. ஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழி, அதன் அருகே உள்ள ஆச்சாள்புரம் என்னும் பெருமண நல்லூர், கும்பகோணம் அருகில் உள்ள சிவபுரம் உள்ளிட்ட தலங்களில் இரண்டு பிராகாரங்கள்தான். ஞானசம்பந்தரின் திருமணம் நடைபெற்றதும், அவர் முக்தியடைந்ததும் பெருமண நல்லூரில்தான். பாரீஸ் அருங்காட்சியகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்ட அழகிய நடராஜர் விக்ரகம், சிவபுரத்தில் உள்ள சிங்காரவல்லி உடனுறை சிவபுரநாதர் ஆலயத்தில் இருந்து கடத்தப்பட்டதுதான்.

குழந்தைப்பேறு நன்முறையில் அமையவேண்டும் என்பதற்காக, பெண்கள் வந்து வளைகாப்பு நடத்திக் கொள்ளும் அஷ்டபுஜ காளியை, திருநல்லூர் கல்யாணசுந்தரர் ஆலயத்தின் பிராகாரத்தில் தரிசிக்கிறோம். பிரம்மஹத்தி தோஷ பரிகாரத் தலம் என்று புகழ்பெற்ற திருவிடைமருதூரில் மூன்று பிராகாரங்கள் உண்டு. அஸ்வமேத பிரதட்சிணப் பிராகாரம், கொடுமுடிப் பிராகாரம், பிரணவப் பிராகாரம் என்று அவற்றைச் சொல்வார்கள். இவற்றில்தான் விநாயகர், முருகன், ஸ்ரீமூகாம்பிகை உள்பட பல மூர்த்திகள் அமைந்திருக்கின்றன.

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள வராஹப் பெருமாள் ஆலயத்தின் திருச்சுற்றுகளில் சுமார் முப்பது கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. அவை ஆலயத்துக்கு வழங்கப்பட்ட தானங்களை மட்டுமல்ல; அப்போதிருந்த ஆட்சியாளர்களைப் பற்றித் தெளிவாக்கும் வரலாற்றுப் பெட்டகங்களாகவும் விளங்குகின்றன.

திருமாலின் 'ஸ்வயம் வ்யக்த' (தானே வெளிப்பட்ட) தலங்கள் என்று எட்டு தலங்களைக் குறிப்பிடுவர். அவற்றில் இந்த ஸ்ரீமுஷ்ணமும் ஒன்று. மற்றவை, திருவரங்கம், திருவேங்கடம், அஹோபிலம், பத்ரிகாஸ்ரமம், திருச்சாளக்ராமம், புருஷோத்தமம் மற்றும் தோதாத்ரி என்னும் வானமாமலை.

சரி; இந்தப் பிராகாரங்கள் எதற்காக? பக்தர்கள் வலம் வருவதற்கு மட்டும்தானா? நிச்சயமாக இல்லை. வேறென்ன?

'**அ**னைத்துமான பரமன், ஆலயப் பிராகாரங்களில், எவ்வளவு மூர்த்திகளைக் கொண்டிருக்கிறான் என்பதை கவனித்துப் பார். சிவாலயம்

வண்டும் என்பதற்காக பெண்கள் வந்து ாளியை திருநல்லூரில் தரிசிக்கிறோம்!

என்றால், பைரவர், துர்கை, சண்டிகேஸ்வரர் ... உள்ளிட்ட மூர்த்திகள்; திருமால் ஆலயங்களில் கருடன், ஆஞ்சநேயர், ஆண்டாள்...! தன்னுடைய வாகனம், காவலர் உள்பட அனைவரையும் பரமன் அரவணைப்பது போலவே அங்குள்ள சன்னிதிகள் அமைந்திருக்கின்றன. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்று காட்டித் தருகிறான் ஈசன்.

உறவுகள், நட்பு என்று அனைவரையும் அரவணைப்பவனாக நீயும் இரு. அப்போதுதான் பிறரால் தேடப்படுபவனாக, நேசிக்கப்படுபவனாக உன்னுடைய வாழ்க்கை அமையும்' என்பதை, தன்னுடைய பிரம்மாண்டத்தின் மூலமாக - அங்குள்ள சன்னிதிகள் மூலமாக, உணர்த்திக் கொண்டிருக்கின்றன பிராகாரங்கள்!

(அடுத்த வாரம் தலவிருட்சம்)



திருவானைக்காவில் உள்ள குறத்தியின் சிற்பம்



"என்னோட இரட்டைக் குழந்தைகளிலே - ஒரு குழந்தைக்கு 'தங்கம்'ன்னு பெயர் வெச்சுட்டேன்! இன்னொரு குழந்தைக்கு என்ன பெயர் வைக்கிறதுன்னு தெரியலே!"

"பேசாம, 'தக்காளி'ன்னு பெயர் வச்சுடு! பொருத்தமா இருக்கும்!"

ஒரு பெயர் 'தங்கம்' இன்னொரு பெயர் 'தக்காளி'!



"இன்னிக்கு பந்த்! அப்படி இருந்தும் 'மாமூல்' வாழ்க்கை பாதிக்கவே இல்லே...!"

"ஆச்சரியமா இருக்கே! எப்படிங்க!"

"மாமூலான ஆட்கள் எல்லாம் நடந்து வந்தே 'மாமூல்' கொடுத்துட்டாங்க!"



"தலைவர்கிட்டே கணக்குக் கேட்டே! ஒரு அறையிலே பதில் சொல்றேன்னு சொல்லி கூட்டிக்கிட்டுப் போனாறே! என்ன ஆச்சு?"

"அவர் சொன்ன மாதிரியே ஒரே 'அறை'யிலே பதில் சொல்லிட்டார்!"

- எஸ்.ஜெகன்நாத், வத்திராயிருப்பு

"டாக்டர்! 'புண்'ணாக்கோட ஒருத்தர் வந்திருக்கிறார்...!"

"அதை எல்லாம் உள்ளே கொண்டு வரக்கூடாது! வெளியே வெச்சுட்டு வரச் சொல்லு!"

"நாக்கிலே இருக்கிற புண்ணை, எப்படி டாக்டர் வெளியே வச்சுட்டு வர முடியும்...!"

- "கலை நண்பன்" வத்திராயிருப்பு





"உங்க வீட்டிலே, பத்து வருஷமா வாடகை கொடுத்துக் குடியிருந்து அலுத்துப்போச்சு...!"

"அதனாலே, சொந்த வீடு வாங்கி குடிபோகப் போறீங்களா?"

"அதான் இல்லே! வாடகைக் கொடுக்காம ஒரு பத்து வருடம் குடியிருக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்!"

- பொன்.பிரபாகரன், வத்திராயிருப்பு

"ஆளுங்கட்சிக்காரர்களும் எதிர்கட்சிக்காரர்களும், பகிரங்கமா கூட்டு வச்சுக்கற ஒரே இடம் எது தெரியுமா?"


"கல்யாண வீட்டுப் பந்திதான்!"

- எஸ்.பரத், வத்திராயிருப்பு

"உன் மனைவி உன்னை பகல் முழுக்க திட்டித் திட்டித் தீர்த்துட்டாங்களாமே... என்ன பண்ணுனே..."

"விடிய விடிய அழுது தீர்த்துட்டேன்..."

- மிக்கேல்ராஜ் சாத்தூர்





மிஸ்யூடா

நீலநிற பளிங்கு கல் போல் பெரிய கடல்! சில்லென்று குளிர்காற்று வீச மெலிதான அலைகளோடு அமைதியாக இருந்தது அதன் மணற்பரப்பு. திடீரென நடுக்கடலில் இருந்து அறுபது கிலோ எடை கொண்ட டால்ஃபின் ஒன்று ஐந்தடி உயரத்துக்கும் மேலே ஆவேசத்துடன் எழும்பி அரை வட்டம் போட்டு 'ப்ளாக்' என்ற பெரும் சத்தத்துடன் கடலுக்குள் விழுந்ததால் நாலாபக்கமும் நீர்வீழ்ச்சி போல் தண்ணீர் பீய்ச்சி அடித்துக் கொண்டு பாய்ந்தது.

நேஷனல் ஜியோகிராஃபிக் சேனலில் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அனித்ராவின் மொபைல் இரண்டாவது முறையாகச் சிணுங்கியது.

டீ.வி.யை அணைத்துவிட்டு தோள் வரை புரண்டுகொண்டிருந்த சில்கி ஹேரைத் தூக்கி க்ளிப் போட்டாள். 'அந்த' கால் கட்டாகி மீண்டும் சிணுங்கத் தொடங்கியது. க்ளிப்பில் சிக்காமல் இரண்டு கற்றை முடி நெற்றியில் விழுந்தது. அந்த முடியைத் தூக்கிக் காதோரம் ஒதுக்கிவிட்டுக் கொண்டு அந்த கால் கட்டாகும் அரை நொடிக்கு முன்பு எடுத்துப் பேசினாள்.

''சி.எம்மைக் கூடப் பிடிச்சுடலாம். ஆனால் உன்னைத்தான் பிடிக்க முடியலை!'' அகஸ்டின் பேசினான்.

'அப்பாடா இப்பவாவது எடுத்தானே' என்கிற திருப்தி அவன் குரலில் தெரிந்தது. அகஸ்டின் பிரபல ஐ.டி.கம்பெனியில் பணி புரிகிறான். அனித்ராவின் காலேஜைக் கடந்துதான் அவன் ஆஃபீஸ் கார் செல்லும்.

ஒருநாள் அனித்ரா அவன் கண்ணில் பட்டுவிட்டாள். அவளது அழகில் அயர்ந்து போனான். அவளது செல் நம்பரை பல நாட்கள் முயன்று கண்டுபிடித்து வாங்கினான்.

''ஐ.டி. கம்பெனியில் ப்ரெஷ் ஷர்ஸ் தேவைப்படறாங்க. உங்களுக்கு விருப்பமா'' நல்ல ஆங்கிலத்தில் கம்பீரமாகப் பேசினான். அவனின் இதமான பேச்சு அவளுக்குப் பிடித்துப் போனது. களங்கமில்லாத நட்புடன் பழக ஆரம்பித்தார்கள்.

''இன்னிக்கு ஏன் காலேஜுக்குப் போகலை?'' - அகஸ்டின் கேட்டான்.

''போகணும்னு தோணலை போகலை...''

''எனக்கும் கார் டிரைவருக்கும் சண்டையாயிடுச்சு.''

''என்னாச்சு?''

''நேத்து பயங்கர மழை அனி, டிரைவர் சோம்பேறி. 'ரோடெல்லாம் தண்ணியாயிருக்கு ஸார். உங்களை வீட்டில் டிராப் பண்றது கஷ்டம். இங்கியே இறங்கிக்கோங்கன்னு கிண்டி பஸ் ஸ்டாப்பிலேயே இறங்கிக்கச் சொன்னான். அங்கிருந்து எங்க வீடு இரண்டு கிலோ மீட்டர் இருக்கும். நான் இறங்கலை. கோபத்துல வண்டியை எப்படி ஓட்டினான்





தெரியுமா? இங்கிலீஷ் படத்துல வர்ற மாதிரி சர்சர்னு செம ஸ்பீடா என் வீட்டு வாசல்ல கொண்டு போய் நிறுத்தினான். இந்தக் கோபத்தை எல்லாம் என்கிட்டே வெச்சுக்காதீங்க அனித்ராகிட்டே வெச்சிக்கோங்கன்னு ஸ்டிராங்கா சொல்லிட்டு வந்துட்டேன்!''

அனித்ரா, உதட்டோரத்தில் சிரித்தாள். மறுமுனையில் அகஸ்டினும் சிரித்தான்.

''இப்போ எங்கே ஆஃபீஸா?'' என்று அனித்ரா கேட்டாள்.

அகஸ்டின் பதில் எதுவும் சொல்லாமல்

அனிதாகுமார்

அமைதியாய் இருந்தான்.

''ஹலோ... அகஸ்டின்!''

அவன் பச்சென்று ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு இணைப்பைத் துண்டித்தான். அனித்ராவின் முகம் சிவந்தது. கோபம் கோபமாக அவன் நம்பருக்குப் பட்டனைத் தட்டினாள். முதல் ரிங்கிலேயே அகஸ்டின் எடுத்தான். ''ம்... சொல்லு!'' என்றான்.

''ஏன் இப்படி பிஹேவ் பண்ணே?'' நீ ஒரு நல்ல ஃப்ரெண்ட் என்பதால்தான்

முதன்முதலாய்

தமிழகத்தில் முதல் சுயமரியாதைத் திருமணம் அருப்புக் கோட்டை அருகேயுள்ள சுக்கிலநத்தம் கிராமத்தில் நடைபெற்றது!

சைலப்பன்

உன்னோடு கைகோர்த்துக் கொண்டு பேசுவேன். உன் தோளில் சாய்ந்து சிரிப்பேன். இப்படிக் கித்தாமாக நடந்துப்பேன்னு கொஞ்சங்கூட நினைக்கலை!''

''நான் உன் வீட்டின் அருகேதான் இருக்கேன். உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும் என்கூட கொஞ்சம் வா!''

அனித்ராவின் நெஞ்சம் அதிர்ந்தது. கட்டிலில் இருந்து இறங்கி ஜன்னலின் திரைச் சீலையை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள். எதிர்த் திசையில் அகஸ்டின் பல்சரில் அமர்ந்திருந்தான்.

ஆறடி உயரம். கோதுமை நிறம். முன்தாடி வைத்திருந்தான். தலையைக் கோதியபடி அனித்ராவின் வீட்டு ஜன்னலைத் திரும்பி குறுகுறுப்பாகப் பார்த்தான்.

''கடைக்குப் போயிட்டு வர்றேன்னு அம்மாகிட்டே சொல்லிட்டுக் கொஞ்சம் வெளியே வா. உன்கிட்டே பேசணும். நீ வரலைன்னா நான் இந்த இடத்தை விட்டு நகரவே மாட்டேன்!''

அனித்ரா வெளியே வந்தாள். அகஸ்டின் ரோட்டின் வளைவில் மறைவாக நின்று கொண்டிருந்தான்.

''பைக்கில் ஏறு!''

''மாட்டேன் எதுவாக இருந்தாலும் இங்கேயே சொல்லு!''

''எல்லோரும் நம்ம ளையே பார்க்கிறாங்க. பிரச்னை பண்ணாதே!''

அனித்ரா, இருபுறமும் கால் போட்டு அமர்ந்தாள். பல்சர் வண்டலூர் ஜூவை நோக்கிப் பறந்தது.

பறவைகள் மிருகங்கள் இருந்த கூண்டுகளை எல்லாம் கடந்து அவளை வெகுதூரம் அழைத்துச் சென்றான். ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்கள் அடர்ந்து காணப்பட்டது. காடுகளுக்கே உள்ள மணம் நாசியைத் தாக்கியது. மரகதப் பச்சை வண்ணத்தில் ஆள் நடமாட்டம் சுத்தமாக இல்லாமல் அமைதியாக இருந்தது. அனித்ராவின் மனத்தில் பயம் ஊடுருவ ஆரம்பித்தது. ''முக்கியமான விஷயம் பேசணும்னு ஈ, காக்கா இல்லாத இடத்துக்குக் கூட்டிட்டு வந்திருக்கே எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு வா போகலாம்!''

அகஸ்டின், அமைதியாக அவன் அணிந்திருந்த க்ரீம் நிற காட்டன் ஷர்ட்டின் பட்டனை ஒவ்வொன்றாக விடுவித்தான். அடுத்ததாக அவன் பனியனைக் கழற்ற முற்பட்டான்.

அனித்ராவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஓர் அதீத பயம் நெஞ்சைச் சூழ ஓர் அடி பின் எடுத்து வைத்தாள்.

''என் காதலை வெளிப்படுத்துவதற்கு இதுதான் சரியான இடம். என் மார்பில் என்ன போட்டிருக்கேன் பார்!''


அவன் இடதுப் பக்க மார்பில் கரும் பச்சை நிறத்தில் இருந்ததை உற்றுப் பார்த்தாள் அனித்ரா. 'அனி' என்று பச்சைக் குத்தியிருந்தான்.

''ஐ லவ் யு அனித்ரா!'' - காந்தக் கண்களால் அவளைப் பார்த்துச் சொன்னான்.

அனித்ரா, என்ன சொல்வதென்று தெரியாமல் கண்கள் அகல அவளைப் பார்த்து விழித்தாள்.

அன்றிரவு முழுவதும் அகஸ்டின் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள். அவ னோடு பழக ஆரம்பித்த இந்த ஐந்து

இராஜபாளையத்தில் காந்தி



சைலப்பன்

மாதக் காலத்தில் அவனோட மென்மையான குணம், நிதானமான பேச்சு, அன்பான சுபாவம் எல்லாவற்றையும் நன்கு அறிந்து கொண்டாள். இதுநாள்வரை அவன்மீது உண்டாகாத ஈர்ப்பு இப்போ அதிகமாயிருப்பதை உணர்ந்தாள்.

உள்ளுக்குள் மிகக் குளிர்ச்சியாய், இதமாய், இனிமையானதாய் காதல் பரவிக் கொண்டு வருவதை உணர்ந்தாள். அதை வெளிப்படுத்த எண்ணி, 'ஐ டு லவ் யு' என்று டைப் செய்து அவனுக்கு மெஸேஜ் அனுப்பினாள்.

'ஸோ ஸ்வீட் ஆஃப் யு' என்று அவனிடமிருந்து பதில் மெஸேஜ் வந்தது.

இராஜபாளையம் 'காந்தி கலைமன்றத்தை' 1955ம் ஆண்டு குடியரசுத் தலைவர் டாக்டர். இராஜேந்திரப் பிரசாத் திறந்து வைத்தார்.

காலை அனித்ரா படுக்கையில் இருந்து எழுந்தாள். அவள் மனத்திலும் உடம்பிலும் காதல் உணர்வுகள் பொங்கி வழிந்தது. அகஸ்டினிடம் பேச வேண்டும் என்று மனம் துடித்தது. அவனிடமிருந் மார்னிங் மெஸேஜ் வந்திருக்கிறதா என்று தலையணை அடியில் இருந்த அவள் செல்ஃபோனை எடுத்துப் பார்த்தாள். ஏமாற்றம் கண்களில் பூத்தது. அவனுக்கு ஒரு மிஸ்டு கால் கொடுத்துவிட்டு அவனின் 'கால்'காகக் காத்திருந்தாள். அவனிடமிருந்து ஃபோன் வரவில்லை. அவன் நம்பருக்கு இவள் பட்டனைத் தட்டினாள். ரிங் அடிக்க அடிக்க அவள் உடம்பில் ஒரு சூடு பரவிற்று. 'அகஸ்டின் குரலைக் கேட்கணும்... இரண்டு வார்த்தை அவன்கிட்டே பேசணும்' என்று ஏக்கம் பொங்கிற்று. அவளால் மட்டுமே ஆத்மார்த்தமாகப் புரிந்துகொள்ளக்கூடிய உணர்வு அது.

அகஸ்டின் செல் முழு ரிங் அடித்து கட்டானது. அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. பதைபதைப்பாய் மீண்டும் முயற்சி பண்ணினாள். ரிங் அடித்துக்கொண்டே இருந்தது.

"நான் அவசரமாக ஆஃபீஸ் கிளம்பிக் கிட்டிருக்கேன்... லஞ்ச் பிரேக்கில் 'கால்' பண்றேன்!" என்று அகஸ்டினிடமிருந்து மெஸேஜ் வந்தது. அவள் மெஸேஜைக் கண்டதும் மனதுக்குள் பொங்கிய பூரிப்போடு அவனுக்கு மீண்டும் ஃபோன் பண்ணினாள்.

"ப்ளீஸ் ஃபோனை எடுடா... உன்னோட குரல் மட்டும் கேட்டால் போதும்... க்கூகும்...!"

முழு ரிங் அடித்து ஓய்ந்தது. ஏமாற்றம் அதிகரித்தது. அனித்ராவின் இதயம் விம்மியது. கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. ●





தென்னகத்தின் சமயபுரம்!



உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவாள் இருக்கன் குடி மாரியம்மா! தென்மாவட்டங்களின் சமயபுரம். தன்னைக் காண லட்சக்கணக் கான பக்தர்கள் வருவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டோ என்னவோ, மிகப் பெரிய பரந்தவெளியில் கோயில் கொண்டுள்ளாள்.

கோயிலின் வடக்கே அர்ச்சுனா நதி. தெற்கே வைப்பாறு நதி. இவ்விரு நதி களும் இணைகின்ற பரப்பில் மைய தளத் தில், ஆலயம். ஆற்று நடுவுல அம்மா ஏன் அமரணும்? நானூத்தைம்பது வருடங் களாக இப்பகுதியில் உலவி வருகிற செவிவழிக் கதை அது.

ஆற்று நடுவிலே சாணம் பொறுக்குகிறார்கள். அதில் பூசாரி மகளின் சாணக்கூடை மட்டும் தூக்க முடியவில்லை. சாணத்தை எடுத்துவிட்ட, வெறும் கூடையையும் தூக்கினால், தரையிலிருந்து மேலே வரவேயில்லை கூடை. அதன் கீழே நோண்டிப் பார்த் தால், அம்மன் சிலை. கோயில் அங்கேயே உருவாகி விட்டது.

''இது மூலவர் கோயில். உற்சவ அம்மன் கோயில் ஊருக்கு நடுவில் உள் ளது. ஆடிப் பெருந்திருவிழா, கடைசி வெள்ளிக்கிழமை அன்று உற்சவ அம்மன் அங்கிருந்து கிளம்பி, கிராமத்தில் வீதி வலம் வந்து மூலவர் அம்மன் கோயிலை அடையும். மறுநாள் காலை உற்சவர் கோயில் சென்றடையும். அன்று ஒருநாள் மட்டும் சுமார் ஐந்து லட்சம் பக்தர்கள் இங்கு திரண்டு வருவார்கள்!'' என்கிறார் கோயில் பூசாரி முருகேசன்.

சாத்தூரிலிருந்து பிரிகிற சாலையில் எட்டாவது கிலோ மீட்டரில் இருக்கிறது இருக்கன்குடி. குண்டும் குழியுமாக சவலைப் பிள்ளை போலக் காட்சி அளிக் கிறது சாலை. கோயிலுக்கு செவ்வாய், வெள்ளி, ஞாயிறுகளில் நல்ல கூட்டம். அதுவும் ஆடி மாதக் கடைசி வெள்ளி யன்று ஐந்து லட்சம் பக்தர்கள் கூடும் பிரார்த்தனை ஸ்தலம் இது.

வாசகர் யோசனை:
எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

டெல்லியில் முதுநிலை கணிதம் பயின்ற மாணவர் ஒருவர் ''அடுத்து கணித ஆராய்ச்சி படிப்பு எங்கு படிக்கலாம்?'' என்று அங்கிருந்த பேராசிரியரிடம் கேட்கிறார். 'கலசலிங்கம் பல்கலைக் கழகம் போ!' என்று ஆலோசனை சொல்லியிருக்கிறார். N Card Math என்றழைக்கப்படும் கணித ஆராய்ச்சித் துறை அகில இந்திய அளவில் இங்கு பேமஸ்.



★ க.ஸ்ரீதரன்

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே கிருஷ்ணன் கோயிலில் அமைந்துள்ளது கலசலிங்கம் பல்கலைக்கழகம்.

வளர்ந்து வரும் பயோ, இன்ஃபோ மற்றும் நானோ டெக்னாலஜி துறைகளுக்கு இங்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

நுண்ணுயிரியல் ஆராய்ச்சித் துறையில், சர்க்கரை நோயாளிக்கு உண்டாகும் கண்புரை, நரம்புத் தளர்ச்சி குறித்த ஆய்வும், தீர்வும் ஆராயப்பட்டு வருகின்றன.

இங்கு இளநிலை பி.டெக். படிப்புகளாக பயோடெக்னாலஜி, கெமிக்கல், சிவில், கம்ப்யூட்டர் சயன்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் என மேலும் பல துறை படிப்புகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களும், விப்ரோ, எல் & டி, ஃபோர்ட், அக்கார்ட், ரியல் வால்யூ, இன்போசிஸ், ஐ கேட், ஆஸ்பியர் மற்றும் பல முன்னணி நிறுவனங்களும் கேம்பஸ் இண்டர்வியூக்காக வருகின்றன.

விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்

''பொறியியல் துறையில் நிகழ்கால சவால்களை உள்வாங்கி, சமாளிக்கக் கூடிய அளவுக்கு எங்க சிலபஸை வடிவமைச்சிருக்கோம். கிராமப்புற மாணவ - மாணவிகளுக்கு சம வாய்ப்பு தருவதில் கவனமா இருக்கோம். எங்களது பாடத் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை ஆய்வு செய்த நாக் கமிட்டி நான்குக்கு 2.81 புள்ளிகள் வழங்கி 'B' கிரேடு அந்தஸ்தை அளித்துள்ளது!'' என்கிறார் கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் வேந்தர் க.ஸ்ரீதரன்.



கல்விக் கோயிலின் கலசம்!





சாத்தூரின் மிகப் பழைமையான பாலர் பள்ளி ஒன்று மங்கையர்க்கரசி மாதர் சங்கத்தால் நடத்தப்படுகிறது! இங்கே பாலர்களுக்கு மட்டும் பாடம் நடத்தப்படுவதில்லை. மாதர் சங்கப் பெண்களுக்

சாத்தூர் பிட்ஸ்

வடஇந்திய வியாபாரிகள் விருதுநகர்ல ரூம் போட்டு, வெயிட் பண்ணி, சாத்தூர் பேனா நிப் வாங்கிட்டுப்போன காலம் உண்டு. ஜனாதிபதியா இருந்த வெங்கட்ராமன் சாத்தூர் நிப் பொருத்தின பேனாவுலதான் கையெழுத்துப் போடுவாராம். எப்போ பால் பாயிண்ட் பேனா வந்துச்சோ அப்பவே நிப் தொழிலுக்கு ஆப்பு விழுந்துருச்சு. ஐந்நூறுக்கும் மேற்பட்ட நிப் பேக்டரி இருந்த சாத்தூர்ல இப்போ எட்டே எட்டுதான் இருக்கு. சமயத்துல 'நிப்'புக்குப் பதிலா ஹேர்க்ளிப் தயாரிப்பும் நடக்குது!

உடைந்துபோன பேனா நிப்!



1906ல் கட்டின தேவாலயம் ஒண்ணு கம்பீரமா நிக்குது. ஃபிரான்ஸ் கட்டட கலைக்குச் சாட்சியாக. ஃபிரான்ஸிலிருந்து வந்த அல்ஃபோன்ஸ்நாத சுவாமிகளின் பெரும் முயற்சியால் இந்தத் தேவாலயம் எழும்பி இருக்கிறது. சாத்தூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே இத் தேவாலயத்தில் 'தீக்குச்சி' திருவிழா வெகுபிரசித்தம்!

வாசகர் யோசனை : சாத்தூர் செல்லையா

கும் தேவாரம் திருவாசக வகுப்புகள் நடக்கின்றன. இலவசமாக நடக்கும் இந்த வகுப்புகளில் வாரம் ஒருநாள் கீர்த்தனை பயிற்சியும் மாதம் ஒருநாள் திருவாசக முற்றோதலும் நடக்கின்றன. கிட்டத்தட்ட இருபத்தைந்து பெண்கள் திருவாசகம் படிக்கிறார்கள்.



விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்



பழநிக்கு வர்றவங்க பஞ்சாமிர்தம் வாங்காம போக மாட்டாங்க. அது போலத்தான் சாத்தூருக்கு காராசேவு. அதுவும் நயம் காராசேவு. மத்த ஊர் காராசேவை விட சாத்தூர் சேவுக்கு மொறுமொறுப்பும் பொருபொருப்பும் ஜாஸ்தி. காரணம் கேட்டா, மிளகைக் கைகாட்டுகிறார் அண்ணாமலை நாடார் மிட்டாய்க்கடை செந்தில்குமார். கூடவே கடலை எண்ணெய், பூண்டு, சீரகம், பெருங்காயம் இந்தக் கூட்டணியின் கலவைதான் சாத்தூர் சேவின் புகழுக்குக் காரணம்!

வெயில் தணிக்கும் வெள்ளரிப் பிஞ்சு சாத்தூரில் ஏகப் பிரபலம். தென் தமிழகத்தின் இரயில் பயணத்தின் போது, சாத்தூர் 'வெள்ளரிப் பிஞ்சு' சுவைக்காத நாக்கு, செத்த நாக்குக்கு சமம். சாத்தூரைச் சுற்றி சுமார் ஐந்து கிலோ மீட்டருக்கு வெள்ளரி விவசாயத்தால்தான் பல கிராமங்கள் இன்னும் வறுமை வெயிலைச் சமாளித்து வருகின்றன.



● சரவணன், சேலையூர்

செம்மொழிக்கு அப்படி என்ன சிறப்பு?

''எம்மொழிக்கும் ஏற்றம்
எதனாலென்(று) ஆராய்ந்தால்
அம்மொழிக்காய் வாழ்ந்த அறிஞர்கள்
-செம்மொழியில்
கம்பன், இளங்கோ, குறள்கொடுத்த வள்ளுவன்
சம்பவித்த தால்தான் சிறப்பு!''

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

திருமணத்தின் போது மணமக்களின் தலையில் ஏன் அரிசியைத் தூவி ஆசிர்வாதம் செய்கிறார்கள்?

கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் இல்லையா. அதனால்தான் அரிசியைத் தூவுகிறார்கள். நல்லவேளை 'ஆயிரம் காலத்து தயிர்' என்று சொல்லவில்லை. கல்யாண மண்டபம் களேபரமாகியிருக்கும். அதுவும் தவிர மணமக்கள் இருவரும் பிரியாமல் Adjust செய்து ஜதையாக இருக்க அரிஜதையைத் தூவி சிம்பாலிக்காகச் சொல்கிறார்கள்!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

வாழ்க்கையைச் செதுக்கும் விஷயங்கள் என்று எதை நினைக்கிறீர்கள்?

Infact வாழ்க்கையே ஒருவனைச் சிலையாக செதுக்கும் உளி. இந்த உளிக்கும் அசராமல் கல்லாய் இருப்பவர்கள் கல்-உளி-மங்கர்கள்!

● ஆர்.கே.கந்தரூபி, மேலகிருஷ்ணபுதூர்

எது தான்தோன்றித்தனம்?

ரமண பாஷையில் சொல்லப் போனால், தித்திப்பான 'தன்னை' மறந்த தூக்கத்திலிருந்து, அகம் 'காரமான' 'தான்' எழுவது தான்தோன்றித்தனம்!





● மு.மதிவாணன், அரூர்

பள்ளியில் படிக்கும் காலத்தில் ஆசிரியரிடம் முட்டை வாங்கியது உண்டோ?

குருவிடம் முட்டை வாங்காத குருமுட்டை உண்டோ!

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்

இதுவரை நீங்கள் யாரிடமும் சொல்லாத ரகசியம் ஒன்றைச் சொல்வீர்களா?

சொல்லுவேன். ஆனால் உங்கள் தலை ஆயிரம் சுக்கல்களாக (நீங்க ரெட்டை மண்டை என்றால் ரெண்டாயிரம் சுக்கல்கள்) வெடித்து சிதறிவிடும். பரவாயில்லையா!

● எம்.சம்பத், கரூர்

எதுவரை விட்டுக் கொடுக்கலாம்?

உம்மணா மூஞ்சிக்காரர்கள் சிரிக்கும் வரை "WIT"டு கொடுக்கலாம்!

● ஆ.லட்சுமி, சென்னை

மனவலி பெரிதா? உடல் வலி பெரிதா?

மனவலி பெருகினால் உடல்வலியைப் பொறுக்கலாம். வலியை உடலுக்குச் சொல்வது மனம் அதாவது மூளை. No Brain... No Pain!

● மு.மதிவாணன், அரூர்

ரசத்தில் உயர்ந்த ரசம் எது?

எவ்வளவு உயர்ந்தாலும் எல்லோரையும் ஒன்றாக பாவிக்கும் வள்ளலாரின் 'சமரசம்'!

முட்டை வாங்கியதுண்டா?

● சம்பந்தன், திருவிடைமருதூர்

உங்களைப் போலவே தோற்றம் கொண்ட இரேசி எதிரே வந்தால் என்ன ஆகும்?

இருவரும் கண்ணாடியில் முட்டிக் கொள்வோம்!

● ஜே.துரைராஜ், சென்னை

விருந்தினரைக் கட்டாயப்படுத்தி சாப்பிடச் சொல்லலாமா?

அப்புறம் ஆஸ்பத்திரியில் சேர்க்கும் அளவுக்கு HOSPITALITY ஆகிவிடும்!

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்


தாயைப் போற்றும் அளவுக்குத் தந்தையைப் போற்றுவதில்லையே ஏன்?

யார் சொன்னார்கள். MOTHER INDIAவுக்கு விடுதலை வாங்கித் தந்தது FATHER OF THE NATIONதானே!

● டி.ஜெய்சிங், கோயம்புத்தூர்

செவ்வாய் கிரகத்திற்குப் போனால் யாரை அழைத்துப் போவீர்கள்?

நான் மணந்த WEDnஸ்டியை!





திருமணம் கைகூடச் செய்யும் மிகச் சிறந்த பிரார்த்தனை ஸ்தலம் இது.

பெருமாள் ஜாம்பவதியைத் திருமணம் செய்துகொண்டது இங்குதான். எனவே, திருமணம் நடந்த பின், பெருமாளுக்குப் பரிவட்டம் சாத்தி, பெருமாள் தாயார் இருவருக்கும் திருமஞ்சனம் செய்து, புளியோதரை நிவேதனம் செய்வது இங்குள்ள வழக்கம்.

● காலவ முனிவரின் மைந்தர் சிந்து மாமுனிவர். இவரது மகளான சுகிருதி, சூரியனை மணக்க எண்ணி தவமிருந்தாள். அப்போது, அவளைக் கவர முனைந்த அசுரனை வீழ்த்த, சூரியன் 'சண்டசக்தி'யை ஏவினார். அது அசுரனை மட்டுமல்ல; அவனருகே இருந்த ஓர் அந்தணனையும் வீழ்த்தியது. அதனால் உண்டான தோஷம் நீங்க, இங்குள்ள பாபநாச தீர்த்தத்தில் நீராடி வழிபட்டு சூரியன், நலமடைந்தான். 'பிரம்மஹத்தி தோஷம்' போக்கும் சிறப்பும் இதற்குண்டு.

● பொதுவாக, கூப்பிய கரங்களுடன் காட்சி தரும் கருட பகவான், இங்கு நான்கு கரத்தினராகத் தரிசனம் தருகிறார். மேலிரு கரங்களில், ஒரு கரத்தில் அமிர்த கலசமும், மறு கரத்தில் நாகத்தையும் பற்றியிருக்கிறார். தனக்கு எதிரியான பாம்பைப் பற்றியிருப்பதால், இவரை வழிபட்டால் எதிரிகளும் நண்பர்களாவார்கள். அதேபோல, நாகதோஷம் உள்ளவர்கள் இவரை வழிபட்டால் தோஷம் நிவர்த்தியாகும் என்பதும் அனுபவம்.

● மூலஸ்தானத்தில் அபூர்வமாக நான்கு தேவியருடன் காட்சி தருகிறார் பெருமாள். அன்னநாயகி (ஸ்ரீதேவி) அம்ருத நாயகி (பூமாதேவி), அனந்த நாயகி (நீளாதேவி), ஜாம்பவதி என்று நான்கு பிராட்டியர்கள் இங்கே.

● ஸ்ரீ கிருஷ்ணனின் பேரனான

விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல்

அநிருத்தனுக்கும், வாணாசுரனின் மகள் உஷாவுக்கும் திருமணம் நடைபெற்றது இங்குதான் என்பார்கள். அதை நடத்திய ஸ்ரீகிருஷ்ணன், புரூரவஸ் மன்னனின் விருப்பப்படி இங்கே நின்ற நாராயணப் பெருமாளாக எழுந்தருளினார்.

● பூதத்தாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்த தலம் இது. மிகப் பழைமையான குடைவரைக் கோயில். இதன் மறுபுறம் சிவபிரானுக்கும் முருகனுக்கும் குடைவரைக் கோயில் அமைந்துள்ளது தனிச்சிறப்பு.

● கறுப்பு மற்றும் சிவப்பு நிறத்தாலான பானை ஓடுகள், நுண்கருவிகள் போன்றவை இத்தலத்தின் புனித தீர்த்தங்களில் ஒன்றான அர்ச்சுன நதிப்பகுதியில் கிடைத்துள் ளன. இதைக் கணக்கிட்டு, இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இங்கு மக்கள் வசித்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

● ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி மூவருக்குள்ளும் யார் சிறந்தவர் என்பதில் சர்ச்சை ஏற்பட்டது. அந்த சர்ச்சையின் விளைவாக, தங்காலமலைக்கு வந்து தவமிருந்தாள் ஸ்ரீதேவி. பெருமாள், பிராட்டியின் தவத்தை மெச்சி, திருமகளே சிறந்தவள் என்று சொல்லி, ஏற்றுக் கொண்டார். திருமகள் வந்து தங்கியதால், தலத்துக்கு 'திருத்தங்கல்' என்று பெயர் வந்தது.

வாசகர் யோசனை:
பாரதி **கண்ணதாசன், திருத்தங்கல்**



திருத்தங்கல் நாயகனின் திருவிளையாடல்கள்!

கல்வெட்டுகள்

ஸோஷலிசம் வேண்டாம்!

''ஸோஷலிஸம்'' என்பது ஒரு கொள்கை; மக்களின் வாழ்வு முறையைத் திருத்தி அமைப்பது பற்றிய கொள்கை. அந்தக் கொள்கையின்படி, உலகத்தில் உற்பத்தியாகும் செல்வமெல்லாம், உலகிலுள்ள மனிதர்கள் எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும். யார் என்ன வேலை செய்தாலும், வருமானம் மட்டும் சமமாகத்தான் இருக்கும். ஒருவனுக்கு அதிகம், ஒருவனுக்குக் குறைவு என்பது கிடையாது. அந்த ஏற்பாட்டின் கீழ் மைசூர் மகாராஜாவுக்கும், மண் வெட்டும் மறவனுக்கும் ஒரே வருமானந்தான்; கவர்னர் துரைக்கும் கிராமத் தலையாரிக்கும் ஒரே சம்பளந்தான்; உடையார்பாளையம் ஜமீன்தாருக்கும், உழுது பயிரிடும் குடியானவனுக்கும் பொருளாதார அந்தஸ்து ஒன்றுதான்.



''இப்படி எல்லோருக்கும் பங்கு போட்டால், தலைக்கு என்ன கிடைக்கும்?'' என்று கேட்பவர்களுக்கு, மேற்படி கொள்கையைப் பிரசாரம் செய்பவர்கள் திட்டமான பதில் சொல்கிறார்கள். ''இந்த ஏற்பாட்டின்கீழ், நவீன இயந்திர சாதனங்களைப் பூரணமாய்ப் பயன்படுத்தக் கூடுமாதலால், எல்லாருக்கும் வயிறு நிறைய உணவும், போதுமான உடையும், குடியிருக்க வசதியான வீடும், இன்னும் நாகரிக வாழ்வுக்குரிய சாதனங்களும் கிடைக்கும். நாட்டில் தரித்திரம் என்பதே இராது'' என்று கூறுகிறார்கள். இது மட்டுமல்ல; அத்தகைய ஏற்பாட்டின்கீழ் மனிதர்கள் எல்லாரும் தினம் சில மணி நேரம் வேலை செய்தால் போதுமென்றும், மற்ற நேரமெல்லாம் அறிவு வளர்ச்சி, கலை வளர்ச்சி முதலியவைகளில் ஈடுபட்டுக் குதூகலமாய் வாழலாமென்றும் சொல்கிறார்கள். இது வெறுங் கனவல்ல, நடக்கக்கூடியதே என்பதற்கு ருஷியா தேசத்தை உதாரணமாகக் காட்டுகிறார்கள்.

அத்தகைய பயங்கரமான நிலைமை நம் தேசத்தில் ஏற்படுவதாக ஒரு நிமிஷம் வைத்துக் கொள்வோம். அதனால் நமது வாழ்வு முறையில் என்னென்ன விபரீதமான மாறுதல்கள் ஏற்பட்டுவிடும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தோமானால், 'ஸோஷலிஸம் வேண்டாம்!' என்று கதறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

அமரர் கல்கி

- கல்கி களஞ்சியம் நூலிலிருந்து

இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா 'ஸாமரஸ்யா' (சங்கமம்) என்ற தலைப்பில் சென்னை சேவா சதனுக்கு நிதி சேர்க்கும் நோக்கில் ஒரு இசை-நாடக நிகழ்ச்சியைப் பிரத்யேகமாகத் தயாரித்து வழங்கினார்.

தேவவிரதன்

● கிருஷ்ணா இந்த நிகழ்ச்சியில் நாதஸ்வரம் (இஞ்சிக்குடி ஈ.எம்.சுப்ரமணியன் குழுவினர்), வீணை (ஈ.காயத்ரி) ஆகியோருடனும், அவருடைய வழக்கமான பக்க வாத்தியக் கலைஞர்களான ஆர்.கே. ஸ்ரீராம் குமார், அருண் பிரகாஷ், குருபிரசாத், அநிருத் ஆத்ரேயா ஆகியோருடன் இணைந்து பாடல்கள், ராகம், ஸ்வரங்கள் கோத்து வழங்கினார். ● அலங்கார ஆங்கிலத்தில், வண்ண உடைகளில் விதவிதமாக வந்து நின்று கதை சொல்பவர்கள், வழங்கிய முன்னுரைகள், அவற்றைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளுடன் அவ்வளவு அழுத்தமாகப் பதியவில்லை. ● வேதம், நாதம், சீனப் பழமொழிகள், சிவம், மோகினி, விஷ்ணு, லயம், பயம், அசுரர், தேவர், மானுடர் என்று என்னன்னவற்றையோ இணைத்து வழங்கப்பட்ட முன்னுரைகள் 'டூமச்' ரகம். ● நிகழ்ச்சி இறுதியில் கிருஷ்ணா தந்த சுருக்கமான விளக்கம் மனசில் 'நச்' சென்று பதிந்தது. கறுப்பும்-வெள்ளையும், ஆணும் - பெண்ணும், இசையும், லயமும் நம் ஒவ்வொருவர் உள்ளேயும்தான் இருக்கின்றது. வெளியிலிருந்து அல்ல என்றார். ● வயலின் கலைஞர் ஸ்ரீராம் குமார் இயற்றிய கமாஸ் ராக கீர்த்தனை நிகழ்ச்சியில் பிரதானமாக இடம்பெற்றது.

● கிருஷ்ணா நிகழ்த்திய பல்லவி-தனி ஆவர்த்தன விருந்தில் அவரே ஜதிகள் சொல்லி முத்தாய்ப்புக்குக் கொண்டு வந்து அயர்த்தினார். ● கச்சேரி பாணியில் அமர்ந்து கிருஷ்ணா சங்கராபரணத்தை அழைக்க பதிலுக்கு வயலினில் ஸ்ரீராம் குமார் ரீதிகௌளையை இழைத்தபோது ஏற்பட்டது அதிர்ச்சி. இந்த மாற்றுப் பரிமாறலின் இறுதியில் கிருஷ்ணா தீக்ஷிதரின் 'அக்ஷய லிங்க விபோ'வில் இருந்து சுப்பராய சாஸ்திரியின் 'ஜனனி நின்னு



வினா'விக்குத் தாவிய போதுதான் இது சிவ - சக்தி தத்துவத்தை விளக்க(!) என்று புரிந்தது. ● அரங்கமும், ஒலி-ஒளி அமைப்பும் இதமாக, எழிலுடன் இருந்தன. ● நிகழ்ச்சியின் இறுதியில் நடனம் பார்த்த மகிழ்ச்சியோ, கச்சேரி கேட்ட திருப்தியோ, நாடகம் பார்த்த நிறைவோ இல்லை. புதுமையைத் தேடிப் போய் திக்குத் தெரியாமல் தொலைந்து போய் விட்ட உணர்வுதான் மேலோங்கியது!

நடிகர் பாண்டு சார்கிட்டே பட்டுன்னு கேட்டுட்டேன்.

"சிக்கல்ல மாட்டிக்கிட்டு திடீரென சிங்கமா மாறிட்டா என்ன பண்ணுவீங்க?"

"ஆங்... மானேஜரைப் பாத்து என் ரூம் எங்கேன்னு கேப்பேன்."

"லாட்ஜ் மானேஜரா ஸார்?"

"ச்சே... வண்டலூர் ஜூ மானேஜரை!" என்றார்.

வாழ்க்கையை இப்படித்தான் யதார்த்தமா இலகுவா எடுத்துக்கணும்னு தோணிச்சு அப்போ. என்னோட வாழ்க்கையை இலகுவாக்கியதில் ஒரு கிளிக்குப் பங்கு இருக்கு. அது ஒரு மழைக்காலம்... என்னோட தம்பி கமல், ஆஞ்சநேயர் பச்சபசேல்னு மூலிகை மலையைத் தூக்கி வந்ததுப்போல உள்ளங்கையில் சுருண்டு படுத்திருந்த ஒரு பச்சைக் கிளிக்குஞ்சை தூக்கி வந்தான். அது பேச்சு மூச்சு இல்லாம இருந்தது. பிறந்து சில நாளே ஆன அது பொழைக்கிறது கஷ்டம்னு எங்க 'அடுக்களை மினிஸ்டர்' நாராயணி அம்மா சொன்னதும் அழுகையே வந்துருச்சு. என் அழுகையைப் பார்த்த அம்மா அந்தக் கிளிக்குஞ்சை வாங்கி தன்னோட முந்தானையில வெச்சி அதை தன் இடுப்புச் சூட்டுல அணைக்க தன்னையே ஒரு இன்குபேட்டரா மாத்திக்கிட்டாங்க. ஒரு நாளில்... அது ஒரு கண்ணை மட்டும் தொறந்து என்னைப் பார்த்துச் சிரிச்சது. அதுக்கு லட்சுமின்னு பேர் வெச்சேன். அது லட்சுமியா லட்சுமணான்னு தெரியாது. ஆனா படபடன்னு பேசக் கத்துக்கிட்டா. ஆமா பேசுற கிளின்னு லட்சுமிக்குப் பேரும் புகழும் சேர ஆரம்பிச்சது. - எங்கக் குடும்பத்துக்குள்ளதான். நான் என்ன நெனைச்சாலும் அவளுக்குத் தெரியும்... கோவமா இருந்தா தூரமா போய் நிக்கிறதும், குஷியா இருந்தா கூட வந்து கொஞ்சறதும், என்னைப் 'பாப்பா'ன்னு கூப்பிடறதும் ரொம்ப ஜாலி. வீட்டுல கூண்டு இல்ல. வீடு முழுக்க அவ ராஜ்ஜியம்தான். ஒரு நாள் வாசல் வரை போயிட்ட அவளை ஒரு காக்கா 'ஆயா வடையைத் தூக்கிட்டு போனது போல' தூக்கிக்கிட்டு மரத்துல உட்கார்ந்துருச்சு. நானும் தம்பியும் காக்காவைத் தூரத்தி கல்லெறிய, கீழப் போட்டுடுச்சு. லட்சுமி பயந்துட்டு காக்கா... காக்கான்னு கத்துனா. அன்னிலேர்ந்து எப்ப பயம் வந்தாலும் அவ சொல்ற வார்த்தை 'காக்கா' தான். இந்த லட்சுமிதான் என்னை ஒரு சிக்கல்ல இருந்து காப்பாத்துச்சுன்னு சொன்னேன். அதைச் சொல்றதுக்கு முன்னாடி



"ஆங்... மானேஜரை பார்த்து 'என் ரூம் எங்கேன்'னு கேப்பேன்."

'காக்கா' 'காக்கா'-ன்



ஊர்வசி

நத்திய கிளி!

வாயில்லா இன்னொரு ஜீவனைப் பத்தியும் சொல்லணும். தமிழ்ல தொடங்கி தெலுங்கு, மலையாளம்னு ஒரு ஃபுல்வட்டமடிச்சு திரும்ப தமிழுக்கு வந்து படம் பண்ணதுதான் 'பாட்டி சொல்லலைத் தட்டாதே'. ஏவி.எம்.மில் ஷூட்டிங். மேக்கப் முடிச்சு ரூமுக்கு வெளியே வந்தேன். வாசலில் ஒரு பெரியவர். கூடவே ராஜ்கிரண் மீசையோடு திடகாத்திரமான இளைஞர். 'வாய் பேச முடியாத ஊமை'-ன்னு பெரியவர் அறிமுகம் செய்தார் அந்த இளைஞனை. 'வாங்குறது பிச்சை. இதுல வீம்பா நிக்கிறே?'-ன்னு பெரியவர் அவனைக் கடிஞ்சிக்கிட்டார். தான் ஊமை என்கிறதை எனக்கு நிரூபிக்க, அவன் 'ஆ'-ன்னு வாயைத் திறக்க, நான் ஊர்வசி என்கிறதையே மறந்தேன்! கிரேஸிமோகன் டிராமாவில் எம்.பி.பி.எஸ். படிக்க ஆசைப் படுற ஒட்டடைக்குச்சி நடிகரைப் போல தொறந்த அந்த வாய்க்குள்ள எம்பி எட்டிப் பார்த்தேன். நாக்கு பாதிதான் இருந்தது. பாவம். பி.ஏ. வரை படிச்சுட்டு மேற்கொண்டு படிக்க பணமில்லையாம். படிக்க உதவி கேட்டார். நான் சேகர் மாமாவைக் கூப்பிட்டு அவர் படிப்புக்கு உதவி செஞ்சேன். சென்னையில எங்க ஷூட்டிங் இருந்தாலும் அவன் வந்துடுவான். நானும் அவனுக்கு உதவினேன். ஒரு வருஷத்துக்குப் பிறகு மலையாள படத்தின் டப்பிங் முடிச்சுட்டு ஏவி.எம். ஸ்டுடியோவிலிருந்து கார்ல வெளியேறும்போது ஒரே கூட்டம். கேட்டுல ஏதோ சண்டை. இதென்னடா வம்பா போச்சேன்னு ஆயிடுச்சு. வாட்ச்மேன் யாரோ ஒருவனைத் திட்ட அவன் மெட்ராஸ் பாஷையில கம்மா டக்கரா பூந்து வெளாசிக்கிட்டு இருந்தான். 'யோவ் உங்க சண்டைய அப்புறம் வெச்சுக்கோங்கன்னு நான் குரல் கொடுக்கவும், 'வானம் பொழியுது. பூமி வெளையுது உனக்கேன் கொடுக்கணும் கிஸ்தி' என்ற கணக்காக அவன் வாட்ச்மேனைப் பாத்துப் பேசும்போது தான் அவனை முழுசா பார்த்தேன். ஒரு வருஷமா ஊமையா இருந்த அவன்தான் அது! வீட்டுக்குப் போற வரைக்கும் மனசு அடிச்சிக்கிட்டது. ஏமாற்றம் என்பது ஏமாறுபவர்களுக்காகக் கண்டுபிடிச்ச சம்பிரதாயமா? வாயில்லா ஜீவனா நடிச்ச 'அந்த' ஜீவராசிகளை விட இவன் கேவலமானது ஏன்? காட்டு சிங்கத் துக்கு இலை



போட்டு சரவண பவன் மினி மீல்ஸும் முருகன் இட்லி கடையிலிருந்து இட்லி சாம்பாரும் குடுத்தா சாப்பிடுமா? ஆனா காட்டுல அகப்பட்ட மனுஷன் பசி தாங்காம தன்னோட வந்த மனுஷனைச் சாப்பிட்ட கதையை நான் கேட்டுருக்கேன். இதுக்கு மேல ஒரு மனுஷியா அவனைத் திட்ட முடியாதில்லையா...

ஒரு தடவை ஒரு புது இயக்குநர் படமெடுக்க கதை சொல்ல வந்தார். கதை பிடிச்சு, பணம் கால்ஷீட் பத்திப் பேச்சு போச்சு. ஆட்டி ஆட்டி



"தொறந்த அந்த வாய்க்குள்ள எம்பி எட்டிப் பார்த்தேன். நாக்கு பாதிதான் இருந்தது."

அன்னநடை போட்டு நடந்து எங்க பக்கத்துல வந்தது லட்சுமி. புது டைரக்டர் லட்சுமியைத் தூக்க முயற்சி பண்ண, அது உடனே 'காக்கா... காக்கா'ன்னு கத்த ஆரம்பிச்சுட்டது. வந்தவருக்கு முகம் சுருங்கிப் போச்சு! 'நான் சாயந்தரம் வந்து பேசறேன்'னு போய்ட்டாரு. தர்ம சங்கடமா போச்சு. போன் போட்டு லட்சுமி பத்தியும் அது பயந்து போனா 'காக்கா'ன்னு கத்தும்னும் விளக்கம் சொன்னேன். ஆனா அவர் நம்பல. 'பள்ளிக்கூடத்துல இருந்து நேரா நடிக்க வந்தா இப்படித்தான்'னு கோவிச்சுக்கிட்டார்.

என்ன விஷயம்னா ஃபீல்டுல இவருக்கு 'காக்கா'ன்னு ஒரு பட்டப் பேரு உண்டாம்! காரியம் ஆக யாரையும் காக்கா பிடிப்பாராம். கொசுவர்த்திச் சுருள் புகை மாதிரி சில வருஷம் ஓடி மறைய, தெரிந்தது அந்த டைரக்டர் ஒரு கிரிமினல்னும் பலபேர் அவரால பாதிக்கப்பட்ட விஷயங்களும்! அந்த லெட்சுமிதான் தன்னோட உள்ளுணர்வுல என்னைக் காப்பாத்தியிருக்கா. இன்னிக்கும் ஏதாவது ஒரு வாயில்லா பிராணிக்குச் சோறிடாம நான் சாப்பிடறது இல்ல.

சோறுன்னதும் ஒரு விஷயம்... காமெடியா பேசக்கூடிய, டீ.வி. சினிமாவுல வரக்கூடிய, நான் பெரிதும் மதிக்கக்கூடிய 'ஞான'மான பேராசிரியர் ஒருத்தர்கிட்ட கேட்டேன். "ஸார் கோவிச்சுக்கக் கூடாது ஒரு பழைய கேள்வி பதில் தெரியல." "கேளும்மா" என்றார். "கோழியிலிருந்து முட்டை வந்ததா முட்டையிலிருந்து கோழி வந்ததா?" அவரு சொன்னாரு, "அம்மா மதுரையில கோழி பிரியாணி வாங்கினேன். அதுல கோழியும் முட்டையும் இருந்தது. மெட்ராஸில வந்தப்போ முட்டை பிரியாணி வாங்கினேன் அதுல கோழி இல்லவே இல்லை. ஆக கோழியிலேர்ந்துதான் முட்டை வந்திருக்கணும். இந்தச் சின்ன விஷயத்துக்குச் குழம்பக் கூடாது'ன்னு லாஜிக்கா பதில் சொன்னார். உங்களுக்கும் இன்னும் நிறைய லாஜிக் சொல்லித் தர்றேன்.

படங்கள் உதவி : **ஞானப் பிரகாசம்**

(தொடரும்)

ஊர்வசி போட்டி சில்க் சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவை பரிசு பெறுவார்கள். தொடரின் **இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

ஜூலை மாத கூப்பன்களை இணைத்து அனுப்ப கடைசித் தேதி : 07.08.10

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:

கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

....................பின்கோடு:...............

தொலைபேசி : ....

இ-மெயில் :

ஜூலை - 3

ஊர்வசி கேள்வி கேட்ட பேராசிரியர் யாராக இருக்கும்?
(ச்சும்மா யூகிங்கள்)

விடையை டிக் செய்யவும்

- ☐ கு.ஞானசம்பந்தம்
- ☐ அறிஞர் அ.சா.ஞானசம்பந்தம்
- ☐ ஸ்ரீ திருஞான சம்பந்தர்
- ☐ ஞானபிரகாசம்

வாசகர் யோசனை :
உத்ரா, விருதுநகர்



எண்ணெய் பரோட்டா... ஏலக்காய்... பிடியரிசி...

காமராஜருக்கு அடுத்தபடியா விருதுநகர்ல ஏக பேமஸ் எண்ணெய் பரோட்டா. குட்டியூண்டு பரோட்டாவைச் சுற்றிலும் தேவைக்கு அதிகமாகவே எண்ணெய் ஊற்றி வறுக்கிறார்கள். விருதுநகர் பொட்டலில் இருக்கும் பிச்சை பரோட்டா கடையில ஆறு மணிக்கே கூடிவிடுகிறார் பரோட்டா ரசிகர்கள். அரட்டை அடித்துக்கொண்டே எண்ணிக்கை பார்க்காமல் அள்ளி விழுங்கும் பரோட்டாவுக்கு, சைட்டிஷ்ஷாகத் தரும் சுக்கா வறுவலுக்குச் சொத்தையே எழுதித் தரலாம்!



வெயில் தவிர வேறெதுவும் விளங்காத விருதுநகர்லேர்ந்துதான் இந்தியா முழுக்க ஏலக்காய் டிஸ்டிரிபியூட் ஆகுது. போடி, தேவாரம், தேனி மலைகள்ல விளைய ஏலக்காய் நேரா வர்றது விருதுநகர்க்குதான். ஈஸ்ட் ஜெர்மெனிக்கு விருதுநகர்லேர்ந்து ஏலக்காய் ஏற்றுமதி நடக்குது. ஏலக்காயோடு புழங்குற எந்தவொரு பொருளும் அவ்வளவு சீக்கிரத்தில் கெட்டு விடாது. உடலின் சூட்டை சமநிலையில் வைத்திருப்பதில் ஏலக்காயின் பங்கு அதிகம்.



மாஃபா மனிதவள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.பாண்டியராஜன் விருதுநகர் மாவட்டக்காரர். அவர், தமது தாயார் சொர்ணம்மாள் பெயரில் நிறுவியுள்ள கல்வி அறக்கட்டளை சார்பில் துவங்கப்பட்ட பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டுகிறது. அவர்களின் சேமிப்பு இருப்பு மட்டும் இரண்டரை கோடி. விதவைத் தாயின் பிள்ளைகளுக்கென தனி ஸ்காலர்ஷிப் ஒன்றையும் வழங்கி வருகிறது சொர்ணம்மாள் கல்வி அறக்கட்டளை. தவிரவும், ''ஏழைக் குழந்தைகளில் பத்தொன்பது வயதுக்குட்பட்டவர்களுக்கு மேஜர் ஆபரேஷன் செய்யும்பட்சத்தில் அதற்கான முழுச் செலவும் சொர்ணம்மாள் கல்வி அறக்கட்டளையினுடையது'' என்கிறார் தென் விருதுநகர் மாவட்ட மேலாளர் தயாநிதி.





காந்திஜியும் கஸ்தூர்பா காந்தியும், எங்க ஊர் ரயில் நிலையத்தில் இறங்கினார்கள் என்று சாத்தூர்வாசிகள் பெருமையோடு பேசுவதைப் போல, விருதுநகர்வாசிகள் பெருமையாகப் பேசுவது இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளின் நினைவுச் சின்னம் ஒன்று விருதுநகர் பொட்டலில் இருப்பதைத்தான். இந்த நினைவுத் தூணை 1954ல் இந்த இலவசமாகக் கட்டிக் கொடுத்தவர் துரைசாமி நாடார். இந்த நினைவுச் சின்னத்தை விருது நகர் மக்களே திறந்து வைத்தார்கள் என்பது தான் ஹைலைட்.

விருதுநகரின் மார்க்கெட் மையத்தில் இருக்கிறது காமராஜர் படித்த பள்ளி. இதுக்கு இன்னொரு பெயர் பிடியரிசி பள்ளி. காரணம், நாடார் சமூகத்தைச் சார்ந்த பெரிய மனிதர்கள் ஒன்றுகூடி தம் சமூகத்துக்கென ஒரு பள்ளியை உருவாக்கத் திட்டமிடுகின்றனர். அதன்படி ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு பிடியரிசியை வாங்கி அதனை மூட்டையாக்கி விற்று, இந்தப் பள்ளியைக் கட்டியிருக்கின்றனர். இந்தப் பள்ளிக் கட்டடம் இப்போது இலவச மருத்துவமனையாக இயங்கி வருகிறது.





இந்தியாவின் பெருமை!

அதன் நிறுவனர் பி.ஜெய்னுல் ஆபிதீன் பேட்டியையும் கல்கி நடுநிலையோடு வெளியிட்டிருந்தது.

- எம்.சுஹைது, தேரழுந்தூர்

'இந்தச் சம்பளம் போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?' கட்டுரை படித்தேன். எம்.பி.க்களின் தற்போதைய சம்பளமும் இதரச் சலுகைகளுமே மலைக்க வைக்கிறது.

- எஸ்.ராமசாமி, ஈரோடு.

தமிழ்நாடு அரசு இலவசப் பொருள்களுக்காகப் பலப்பல கோடி ரூபாய் செலவு செய்வதில், பெட்ரோலியப் பொருள்களையும் கொண்டு வந்து வரிக் குறைப்பு செய்தால், மாநில மக்களுக்கு நற்பலன் ஏற்படும் அல்லவா?

- இராம.வேதநாயகம்,
வடமாதிமங்கலம்

யார் லார் லால் ஏஞ்சல்ஸ்ராம்? வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை... என்ன ஒரு நக்கல்... என்ன ஒரு கிண்டல்...! நல்ல உயர்தர நகைச்சுவை.

-என்.சந்தானம், சென்னை

'கண்டறியாத கண்டேன்' தொடரில் 'திருமலை விமானம்' எனக் குறிப்பிட்டுள்ள விமானம் ஸ்ரீரங்கம் ப்ரணவாக்ருதி விமானம்.

- தேவநாதன், குரோம்பேட்டை

லண்டன் ஸ்ரீ சுவாமி நாராயண் கோயில், இந்து சமயத்தின் அருமை பெருமைகளை உலக மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. இது இந்தியாவுக்கும், இந்துக்களுக்கும் பெருமை.

- எம்.இராஜேந்திரன்,
லால்குடி.

ஊர்(வ)சியின் சரடு பலே ஜோர் தான்! எப்படிப் பிடித்தீர்கள்? கல்கிக்கு நன்றி சொல்ல வேண்டும்.

- இ.ரங்கசாமி, திருச்சி.

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் நடத்திய ஒடுக்கப்பட்டோரின் உரிமை மாநாடு பற்றியும்,

பரிசுக்கடிதம்!

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

கல்வி கற்றால் மனிதர்களிடம் அறிவோடு நாகரிகம் வளரும், பண்பாட்டின் தரமும் உயரும் என்று கருதி, கற்றது அந்தக் காலம். இன்று மாணவர்களிடம் பண்பாடு, ஒழுக்கம், நாகரிகம் ஆகியவை அரிதாகிவிட, கல்விக்கும் நாகரிகத்துக்கும் துளியும் தொடர்பில்லை என்றாகிவிட்டது! ஆகவே, மாணவர்களிடம் கல்வியறிவு, நல்லொழுக்கம், நாகரிகம் ஆகியவை உயர்கிறதோ இல்லையோ 'பேங்க் பேலன்ஸ்' மட்டும் உயர்கிறது என்பதை 'நெத்தியடி'யாக உணர்த்தியது 'உயர்கல்வியின் பரிணாம வளர்ச்சி' கார்ட்டூன்.

- ஆர்.அருணாஸ்ரீ, சின்னகாஞ்சிபுரம்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

